எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 03 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | நவம்பர் 2025

கபடி வீராங்கனை கார்த்திகா

கட்டுரை

உப்பு சத்யாகிரகமும் பெண்களும்
- முனைவர் எஸ். சாந்தினிபீ

கபடி வீரர் தங்க மகள் சென்னை கார்த்திகா
- முனைவர் தேமொழி

தமிழரின் மூதேவி
- பூங்கொடிபராங்குசம்

ஆசைக்கோர் அளவில்லை
-இரா. சைலஜா சக்தி

C.B.முத்தம்மா

கதை

“மலர்ந்த மல்லிகை"
- வி. லதா

கவிதை

நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்?
- செ. ராஜேஸ்வரி

வேண்டும் இன்னுமொரு விடுதலை
- முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய்

தொடர்கதை

Aranyeni
- *Vijeni*

தைரியலட்சுமி
- வை.மு.கோதைநாயகி

இன்னும் பல..

எங்கெங்கு காணினும் சக்தியடா!
பெண்ணிதழ்
மலர் -2 இதழ் - 03 நவம்பர் 2025

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

உள்ளடக்கம்

1. மறத்தமிழச்சி அஞ்சலை 2
- முனைவர். சு.தனலட்சுமி
2. வீரப்பெண்மணி லூர்தம்மாள் சைமன் – வாழ்க்கைச் சுருக்கம் 3
3. "மலர்ந்த மல்லிகை" 5
- வி. லதா
4. நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்? 6
- செ. ராஜேஸ்வரி
5. உப்பு சத்யாகிரகமும் பெண்களும் 8
- முனைவர் எஸ். சாந்தினிபீ
6. நினைவுகள் 9
- மேனகா நரேஷ்
7. கபடி வீரர் தங்க மகள் சென்னை கார்த்திகா 11
- முனைவர் தேமொழி
8. உடன்கட்டை ஏற்றுதல்: நேரில் பார்த்த அனுபவத்தை எழுதி வைத்துள்ள ஐரோப்பியர்..! 13
- Yazh Vellingiri
9. தமிழரின் மூதேவி 17
- பூங்கொடிபராங்குசம்
10. குணநலம் ஓங்கி வாழ்க! 23
- முனைவர் இல. ஜெயந்தி
11. டாக்டர் சிவராமகிருஷ்ண அய்யர் பத்மாவதி 31
- மேனகா நரேஷ்,
12. கவிதை 37
- ஸ்ரீவாரி மஞ்சு
13. கவிதை 37
- வர்த்தினி பர்வதா
14. சம்மட்டி அடி! 38
- பா வெற்றிக்குமரன்
15. மனைவி எழுதும் மடல் 41
செ. ராஜேஸ்வரி
16. "கொற்றவைத் திருநாள்" 42
மா.மாரிராஜன்
17. தைரிய லக்ஷ்மி 44
- வை.மு.கோதைநாயகி அம்மாள்
18. நீத்தோனா சம்பாஷனா 47
- முனைவர் கிங்ஸ்டன்
19. உலகின் முதல் பெண் சதரூபை 48
- இரா. சைலஜா சக்தி
20. மனைவியின் செயல்! 50
- பாரதிராஜன்
21. அன்பு தன்னில் செழித்திடும் வையம் 52
- மாலதி இராமலிங்கம்
22. ஐரோப்பாவை மயங்கச் செய்க முதல் இந்தியப் பெண் வயலின் இசைக் கலைஞர் 53
- ராஜசேகர் பாண்டுரெங்கன்
23. பழந்தமிழகத்தின் போர்க்களம் 59
- முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
24. Raje, my dear 73
25. ஆசைக்கோர் அளவில்லை 74
- இரா. சைலஜா சக்தி
26. ARANYANI 77
- VIJENI
27. கவிதை 83
- நெல்லை க.சோமசுந்தரி
28. உரம் அருளும் குப்பை நாச்சியார் - தவ்வை 84
- முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
29. C.B.முத்தம்மா 94
30. கவிதை 96
- வித்யா மனோகர்
31. Book Release of Glimpses of Kamba Ramayana by Dr. Chandrika, in Sydney 97
32. வேண்டும் இன்னுமொரு விடுதலை 98
- முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய்

மறத்தமிழச்சி அஞ்சலை

கடலூரில் விதையாய் முளைத்து
முட்லூரில் உரமாய் மாறிய மறத்தமிழச்சி அஞ்சலை...

அண்ணல் வழியில் நடந்தாலும் – அந்நியருக்கு எதிராய்
அஞ்சாது விடுதலை முழக்கமிட்ட தென்னாட்டின் ஜான்சிராணி...

சுண்ணாம்புக்காரத் தெருவில் பிறந்த சூரியச்சுடர்...
வீரசுதந்திரம் பெற நல்லறங்கள் பல செய்த சிங்கப்பெண்...

இல்லறத்தில் கரம்பிடித்த துணைவரோடும் – தன்
கரம்பிடித்து நடக்கும் குழந்தைகளோடும்
தொடங்கியது இவரது விடுதலைப் பயணம்...

வீட்டிற்குள்ளே ஒடுங்கி கிடப்பது பெண்ணினம் – என்ற
சொல்லை மாற்றி பொது வாழ்க்கையில் நுழைந்து
புதுமை நிகழ்த்திக் தடம்பதித்த காரிகை...

ஒத்துழையாமை இயக்கத்தில் வீரத்தோடு
இணைந்திட்ட தென்னாட்டின் முதல்பெண்மணி...

நீல்சிலை அகற்றும் போராட்டம்
கூறும் இவரது நெஞ்சுரத்தினை...

பிள்ளைகளுக்கும் பிறப்பிலே
வீரத்தை ஊட்டிய சங்கத்தமிழச்சி...

குழந்தைபேற்றிற்காய் சிறையிலிருந்து வெளியேறி
பச்சிளம் குழந்தையோடு மீண்டும் சிறைசென்று
எஞ்சிய இருமாத தண்டனையும்
குறைவில்லாது நிறைவேற்றிய வீரத்தாய்...

வேலூர், சென்னை, கண்ணனூர், பெல்லாரி
சிறை சொல்லும் இவருற்ற துயரினை...

வீட்டினுள்ளே பழமொழிகளைப் பேசிக்கொண்டு
ஒதுங்கியிருப்போருக்கு மத்தியில்
பலமொழிகளில் உரையாற்றி வீரசுதந்திரம் பெற்றிட
விடுதலைக் கனல் ஊட்டிய பேரிகை...

விலைமதிக்க முடியாத விளைநிலங்களையும்
அன்பு தழும்பிய இல்லத்தினையும்
விடுதலை வேள்விக்கு இடுபொருளாய்
தந்திட்ட கொடைவள்ளல்...

தியாகி ஒய்வூதியத்தைத் துச்சமென
வேண்டாமென்றே புறந்தள்ளிய தியாகத் தலைவி...

தீர்த்தாம்பாளையம் குடிநீர் பிரச்சினையை
முடிவுக்கு கொண்டு வந்த 'அஞ்சலை வாய்க்கால்' பேசும்
இவரது நேரிய அறவழியை...

ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்கள்
பாரதி ஏட்டினில் எழுதிய பெண்மையின் குணங்களை
நாட்டினில் நிகழ்த்திக் காட்டிய புதுமைப்பெண்...

அஞ்சலை... யாருக்கும் அஞ்ச(வில்)லை...
அந்நியருக்கு எதிராய் குரல்கொடுக்க அஞ்ச(வில்)லை...
கடுங்காவல் சிறைசெல்ல கணப்பொழுதும் அஞ்ச(வில்)லை...
தாயக விடுதலைப்பயணத்தில் தளராது செல்ல அஞ்ச(வில்)லை...
வையம் புதுமையுறச் செய்திட
நாடு நலம்பெற நாள்தோறும் உழைத்திட அஞ்ச(வில்)லை...

முனைவர். சு.தனலட்சுமி
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி,
மதுரை

வீரப்பெண்மணி லூர்தம்மாள் சைமன் – வாழ்க்கைச் சுருக்கம்

1. பிறப்பு – 26 செப்டம்பர், 1911, கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை கிராமமான மேலமணக்குடியில் பிறந்தார்.
2. தந்தை – மைக்கேல் அலெக்சாண்டர்; உப்பு மற்றும் உலர் மீன் இலங்கைக்கு ஏற்றுமதி செய்த தொழிலதிபர்.
3. தாய் – பார்பரம்மாள்; சிறுவயதில் மறைந்ததால் தந்தையாலேயே வளர்க்கப்பட்டார்.
4. குடும்ப சூழல் – சாதாரண கடலோர சமூகத்தின் எளிய சூழலில் வளர்ந்தார்.
5. சமூக உணர்வு – கடலோர சமூகத்தின் வறுமை, கடலோர நிலை ஆகியவற்றை சிறுவயதிலேயே அனுபவித்தார்.
6. குரலாக எழுதல் – கடலோர சமூகத்துக்காக பேசிய முதல் பெண் குரல் ஆனார்.
7. அரசியல் முன்னேற்றம் – 1957 ல் தமிழகத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் அமைச்சராக பதவியேற்றார்.
8. அரசியல் கட்சி – காங்கிரஸ் அரசு (தலைமை முதலமைச்சர் கு . காமராஜ்).
9. துறை பொறுப்புகள் – உள்ளூர் நிர்வாகம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சராக இருந்தார்.
10. கடலோர சமூகத்திலிருந்து வந்த முதல் பெண் அமைச்சர்.
11. கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த முதல் பெண் அமைச்சர்.
12. சமூக முன்னேற்றம் – கடலோர சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல திட்டங்களை கொண்டுவந்தார்.

13. மீன்வளத் திட்டங்கள் – கடலோரகள் வீடு, கல்வி, வாழ்வாதாரம் மேம்பாடு ஆகியவற்றுக்கான அடித்தளத் திட்டங்களை வகுத்தார்.
14. பிரதிநிதித்துவம் – கடலோரகளின் குரல் சட்டசபையில் (“ கோட்டை ” – சென்னை) கேட்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.
15. பாலின தடைகள் – ஆண் ஆதிக்க அரசியலில் பெண்ணாக இருந்தாலும் தடைகளை உடைத்து முன்னேறினார்.
16. சாதி தடைகள் – கடலோர சமூகத்தைச் சேர்ந்தாலும் அரசியல் உச்சிக்கு சென்றார்.
17. மக்கள் போராட்டங்கள் – கடலோர உரிமைக்காக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், இயக்கங்களை வழிநடத்தினார்.
18. நேர்மை – எந்த விதமான ஊழலுக்கும் இடம் தராதவர் என பெயர் பெற்றார்.
19. லஞ்சமற்ற அமைச்சர் – “லஞ்சம் வாங்காத ஒரே அமைச்சர்” என பொதுமக்களால் பாராட்டப்பட்டார்.
20. சமூகப் பெருமை – கடலோர சமூகத்துக்கு பெருமை சேர்த்த தலைவர்.
21. பணிக்காலம் – 1957 முதல் 1962 வரை அமைச்சராக இருந்தார்.
22. அரசியல் தாக்கம் – தனது பணியால் பின்னர் வந்த மீன்வளக் கொள்கைகளுக்கு அடித்தளமாக இருந்தார்.
23. பெண்களுக்கு முன்னோடி – பெண்களும் அரசியலில் முன்னேற முடியும் என்பதை நிரூபித்தார்.
24. சமூக எழுச்சி – கடலோரகளின் கல்வி, பொருளாதாரம், அரசியல் உரிமை ஆகியவற்றுக்காக பாடுபட்டார்.
25. அரசியல் நேர்மை – பதவியில் இருந்தபோதும் தனிப்பட்ட செல்வம் சேர்க்கவில்லை.
26. அரசியல் நினைவு – ஊழலற்ற, தியாக மனப்பான்மையுடைய பெண் அரசியல்வாதியாக தமிழக வரலாற்றில் பதிந்தார்.
27. இறப்பு – 2001 ஆம் ஆண்டு மறைந்தார்.
28. பாரம்பரியம் – இன்று வரை சமூக முன்னேற்ற திட்டங்களில் அவரின் பங்களிப்பு நினைவுகூரப்படுகிறது.
29. மக்கள் மரியாதை – ஒவ்வொரு ஆண்டும் பிறந்தநாளில் “வீரப்பெண்மணி” என நினைவுகூரப்படுகிறார்.
30. உத்வேகம் – பெண்கள், கடலோர சமூகத்தினர், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கு அவர் ஒரு மிகப் பெரிய உந்துசக்தி .
31. கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளத்தில் புகழ்பெற்ற காசநோய் மருத்துவ மனை அமைய காரணமாக இருந்தவர் லூர்தம்மாள் சைமன்! அது இப்போது, மருத்துவ கல்லூரியாக உயர்ந்துள்ளது

“மலர்ந்த மல்லிகை”

வி. லதா

மல்லிகை ஒரு கிராமத்தில் பிறந்த சாதாரணப் பெண். சிறுவயதிலிருந்தே அவள் சுறுசுறுப்பாக இருந்தாள். படிப்பிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள். ஆனால் வீட்டார் “பெண் படித்து என்ன செய்யப் போகிறாள், திருமணம் தான் வாழ்க்கை” என்று சொல்லி, அவளை இளம் வயதில் திருமணம் செய்து வைத்துவிட்டனர்.

திருமணத்திற்குப் பிறகு, மல்லிகையின் வாழ்க்கை முழுவதும் குடும்பப் பொறுப்புகளால் நிரம்பியது. கணவர் பண்ணை வேலை பார்த்தார், அவள் வீட்டு வேலைகளில் மூழ்கி விட்டாள். அவளுக்குள் இருந்த கனவுகள் அனைத்தும் மங்கிக் கொண்டே போயின.

ஒருநாள் கிராமத்தில் பெண்களுக்காக அரசு சார்பில் சுயஉதவி குழு தொடங்கப்பட்டது. அதில் சேர்ந்த பெண்கள் சிறு தொழில் செய்து தங்கள் வாழ்க்கையை முன்னேற்றிக் கொண்டனர். அந்த குழுவில் சேருமாறு மல்லிகையையும் அழைத்தனர். ஆரம்பத்தில் அவளுக்கு பயமாக இருந்தது. “வீட்டு வேலையை விட்டு வெளியே போனால், யாராவது என்ன சொல்லுவார்களோ?” என்று கவலைப்பட்டாள்.

ஆனால் உள்ளுக்குள் அவளுடைய ஆளுமை எழுந்து கேட்டது: “நான் ஏன் எப்போதும் பயந்தபடி வாழ வேண்டும்? நானும் ஏதாவது செய்ய முடியும்.”

அவள் துணிந்து அந்த குழுவில் சேர்ந்தாள். பிற பெண்களுடன் சேர்ந்து சிறிய அளவில் கைத்தறி பொருட்கள் தயாரித்து விற்கத் தொடங்கினாள். ஆரம்பத்தில் சிரமம் இருந்தாலும், மல்லிகை தன்னுடைய உழைப்பால் குழுவில் முன்னணியில் நிற்க ஆரம்பித்தாள்.

சில வருடங்களில், அவளுடைய முயற்சியால் குழு வளர்ந்து, கிராம பெண்கள் அனைவருக்கும் வருமானம் கிடைத்தது. குடும்பமும், கிராமத்தாரும் அவளின் திறமையை அங்கீகரித்தனர்.

ஒருநாள் பள்ளியில் குழந்தைகளுக்கு உரையாற்ற அழைக்கப்பட்டபோது, மல்லிகை சிரித்துக்கொண்டே சொன்னாள்:

“பெண் என்பவள் வீடு மட்டும் பார்த்துக்கொள்ளும் ஒருவள் அல்ல. அவள் தனது திறமையை வெளிப்படுத்தினால், குடும்பத்தையும், சமூகத்தையும் முன்னேற்றும் சக்தி அவளிடமே இருக்கிறது."

அந்த நாளில் இருந்து மல்லிகை, கிராம பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாக மாறினாள்.

நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்?

மொழிபெயர்ப்பு கவிதை

டே ஃப்னே - நல்ல இடையனே என்னை நிறைய நேசிக்கிறாயா?

அமிந்தாஸ்- ஆமாம், நிறைய நிறைய
அதைச் சொல்லால் விளக்க இயலாது

டே ஃப்னே - நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்?

அமிந்தாஸ் - பெண் அணங்கே! நான் உன்னை நேசிக்கிறேன்

டே ஃப்னே- இதுவரை கேளாத புதிய சொற்கள்
எனினும் என் இதயம் நிறைகிறது
முகஸ்துதி வேண்டாம் என் இதயமே
என்னை உன் இதயத்தில் சுமக்கிறாயா சொல்
நல்ல இடையனே நீ என்ன நேசிக்கிறாய்

அமிந்தாஸ்- பெண் அணங்கே உன்னை நேசிக்கிறேன்

டே ஃப்னே- இதுவே சிறந்த மறுமொழி
இன்னும் சொன்னால்
உன்னை என் கண்களைப் போல் நேசிக்கிறேன்

அமிந்தாஸ்- கண்களே வாசல் அதன்வழி காதல் நுழையும் ,
நான் பார்க்கும் அந்த வேளைகளில்,
உன் இனிய முகமும் பொன்னிறக் கூந்தலும்,
பேரழகைப் பொழிகின்றன.

டே ஃப்னே - நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்?

அமிந்தாஸ்- பெண்அணங்கே உன்னை நேசிக்கிறேன்

டே ஃப்னே- அன்பான இடையனே தெளிவாகச் சொல்,
நான் திரும்பத் திரும்ப கேட்க வேண்டாம்,
இந்த இனிய விவாதம் நிறைவேறட்டும்,
உன் வாழ்க்கையைப் போல என்னை நேசிக்கிறாயா?

அமிந்தாஸ் - இல்லை அது அலையைப் போல மேலும் கீழும் மாறும்,
வாழ்வில் இன்பமும் துன்பமும் அலைபாயும்,
காதலின் முரட்டுப் பிடியில் சிக்கிய நான்,
மனிதனாக இல்லை பிணமாக இருக்கிறேன்,

டே ஃப்னே- நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்?

அமிந்தாஸ்- பெண் அணங்கே உன்னை நேசிக்கிறேன்

டே ஃப்னே- உன்னை நேசிக்கிறேன் என்கிறாய்
என் நல்ல இடையனே, தயவாய்
என்னை விட்டுவிடு கெஞ்சுகிறேன்

அமிந்தாஸ்- நான் என்னை நேசிப்பதில்லை,
இது உனக்கு தெரியுமா?
நான் என்னுள் அழகுகளாகப் பிரிந்து கிடக்கிறேன்
டே ஃப்னே- நல்ல இடையனே என்ன நேசிக்கிறாய்

அமிந்தாஸ்- பெண் அணங்கே உன்னை நேசிக்கிரேன்

-பிரெஞ்சு மொழியில் ஜீன் பேசரேட் எழுதிய இக்கவிதையை
ஆங்கிலத்தில் அளித்தவர் ட்ரமண்ட்,
தமிழில் - செ. ராஜேஸ்வரி



உப்பு சத்யாகிரகமும் பெண்களும்

முனைவர் எஸ். சாந்தினிபீ
மேனாள் வரலாற்று பேராசிரியர், அலிகர் முஸ்லிம் பல்கலை.

சமையலறையில் ஏதோ ஒரு குப்பியில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் உப்புக்கும் ஒரு நாட்டின் விடுதலை இயக்கத்திற்கும் எப்படி தொடர்பு இருக்க முடியும் என்று எண்ணியதுண்டா...? அதுதான் அடிமை ஆட்சியின் ஒரு அத்தாட்சி. மக்கள் அனைவரும் நாள் தோறும் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள் எதுவென தேர்ந்தெடுத்து அதன் மீது வரிச் சுமையை ஏற்றினால் தனது கருவூலம் நிறையுமென சுயஅல அரசுகள் என்றும் எண்ணும் இயல்புடையது.

இங்கிலாந்து ஆதிக்க வல்லரசும் சுயநலமாக சிந்தித்து அடிப்படை தேவையான உப்பின் மீது சில கட்டுத் திட்டங்களை சுமத்தியிருந்தது. உப்பு உற்பத்தி உரிமையை ஆதிக்க அரசு தனக்கே உரிமையாக்கிக் கொண்டது. அதன் மேல் வரியும் சுமத்தியது. குரலெழுப்பும் உரிமையற்ற பொதுமக்களும் இக்கட்டாயச் சுமையைச் சுமந்தார்கள். இந்திய மக்கள் ஆதிக்கஅரசிற்குதங்கள்எதிர்ப்பைதெரிவிக்கும்அமைதியானவழிதானேஒத்துழையாமை இயக்கம்? அதனால் காந்தி உப்பை கையில் எடுத்தார் தனது அடுத்த ஆயுதமாக. உப்பில்லா பண்டம் குப்பையிலே என்பதால் உப்பு சத்யாகிரகத்திற்கு பொதுமக்கள் தானாகவே வந்து பெருமளவில் பங்கேற்றனர். ஒரு போராட்டத்தின் வெற்றி தோல்வியை முடிவு செய்யும் காரணிகளில் மிக முக்கியமானது எண்ணிக்கை.

உப்பு சத்யாகிரகத்தை 1930 மார்ச் 12ம் நாள் காந்தி துவக்கினார். குஜராத்தில் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து ஜலால்பூர்க்கு அருகில் உள்ள தண்டி கடற்கரைக்கு நடைப் பயணமாக சென்று உப்பு சத்யாகிரகத்தை துவக்கி வைத்தார். வழிதோறும் மக்கள் அவருடன் இணைந்துக் கொண்டனர். நடைப் பயணம் ஆகச் சிறந்த கொள்கை பரப்பு முறையாகும். அரசின் ஏகாதிபத்ய உப்பு தயாரிக்கும் உரிமைக்கான எதிர்ப்பாக நாடு முழுவதும் கடற்கரைப் பகுதிகளில் அவ்வவ் பகுதி தலைவர்கள் இப்போரட்டத்தைத் தொடர்ந்தனர். செய்வது அறியாது திகைத்த அரசு கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குப் பின் ஏப்பிரலில்(6-ம் தேதி) காந்தியை உப்புச் சட்டம் மீறிய குற்றத்திற்காக சிறைச் செய்தனர்.

காந்தியின் கைதால் உப்பு சத்யாகிரகம் முடங்குவதற்கு பதிலாக காற்றோடு இணந்த தீ பரவுவதைப் போல் நாடெங்கும் பரவி பற்றி எரிந்தது. இதில் பெண்களின் பங்கு பெருமளவில் பெருகியது. இந்தியப் பெண்களின் உத்வேகமும் ஈடுபாடும் உலகத்தின்

பார்வையை திருப்பியது. ஆனால் துவக்கத்தில் காந்தியின் சிந்தனை மாறுபட்டு இருந்தது. இதில் பெண்கள் பங்கெடுத்தால் வேறு குழப்பங்கள் வரலாமென நினைத்தார். ஆனால் பெண்கள் அதற்கு உடன்படவில்லை. பெண்களின்றி இனி எவ்விதமான போராட்டமோ, ஊர்வலமோ நடத்த இயலாது என முடிவெடுத்தனர். ஆணின் பங்கு பெண்ணின் பங்கு என கட்டம் கட்டி பார்க்கக்கூடாது. நாட்டு நடப்புகளில் ஆணுக்கு நிகரானவளே பெண் என்று மானாட்டில் முடிவெடுத்து அறிவித்தனர். (காங்கிரசு புலடின், 30 மே 1930, ப-4) அதைத் தொடர்ந்து பெண்கள் அனைத்து நிகழ்வுகளிலும் பரவலாக ஈடுபட்டனர்.

உப்புச் சட்ட மீறல், தெருக்களில் ஆர்பாட்ட ஊர்வலங்கள், அரசுக்கு எதிராக குரல் உயர்த்தல், பள்ளி கல்லூரிகளின் முன் மறியல், பட்டம் பதவிகளை துறத்தல், தேசிய பாடல்களை பாடுதல் என பல்வேறு வகைகளில் தங்கள் பணியை தொடர்ந்தார்கள். அரசு 144 சட்டம், காவலர் தடியடி, சிறைவாசம் எனும் உக்திகள் வழியே பெண்களையும் எதிர்கொண்டது. பெண்களும் முன் நோக்கியே நகர்ந்தனர். 'பெண்களின் ஆடையில்லா உடல்களை கவல் தடிகள் பதம்பார்த்தன' என வங்காள காங்கிரசு கமிட்டியின் செயலாளர் தன் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அலகாபாத்தில் ஜவகர்லால் நேருவின் தாயார் சொரூப ராணியின் தலமையில் பெண்கள் உப்புச் சட்ட எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். குதிரை காவலர்களின் கைத்தடிகள் அவரையும் வெளுத்து வாங்கியது. மயங்கி சுயநினைவு இழந்த அவரை பெண்களே முதலுதவி அளித்து சமாளித்தனர். சொருபராணியின் ஒரே மகன் ஜவகர் லால் நேரு உப்புச் சட்ட மீறலில் சிறையில் அடைக்கப் பட்டார். தில்லியில் நேரு வின் மாமியார் காவலர்களின் தடியடியில் காயப் பட்டார். அவருடன் பங்கெடுத்த பனிரெண்டுப் பெண்களுக்கும் இதே நிலை. மத்திய பிரதேசத்தின் நிலையோ அதிக கவலை அளித்தது. அங்கே அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண்கள் சிலரின் உயிர் பலியானது.

அரசின் வன்முறை செயலை எதிர்த்து அரசு பொறுப்புகளில் இடம் வகித்த பெண்கள் பலர் தம் பட்டங்களையும் பதவிகளையும் தூக்கி எறிந்து பொறுப்பு புகழ் துறந்தனர். முத்துலக்குமி அம்மாள், சரோஜினி நாயுடு , காமா பாய் இலக்மன் ராவ், டிக்ஸன், அன்சா மேத்தா போன்ற பலர் அடங்குவர்.

மும்பாயில் கமலாதேவி ஒரே நாளில் பல முறை சிறைச் சென்றார். ஒரு முறை உப்பு தயாரித்த குற்றத்திற்காக சிறை சென்று விடுதலை ஆனதும் மீண்டும் பெண்களுக்கு தலமைத் தாங்கினார், உப்பளங்களை ஒரு குழு பாது காத்தது. இப்பணிகளுக்காக அனைவரும் சிறையில் அடைக்கப் பட்டனர். கமலா தேவி அம்மையார் ஒரு படி மேலே சென்று தயாரித்த உப்பை கடைத் தெருக்களில் விற்றார். சிறையிலிருந்து வெளிவந்ததும் உப்பு உற்பத்தி செய்யவும் கடைகளில் விற்கவும் உரிமைக் கோரி நீதி மன்ற கதவுகளையும் தட்டினார்.

அடிமை விலங்குடன் பெண்கள் அன்று எட்டாத உயரமில்லை. தெருக்கள், போராட்டங்கள், சிறைவாசம், தடியடி, உயிர் தியாகம்,பதவி பட்டம் துறப்பு போன் ற பல்வேறு பணிகளில் தங்களை அர்ப்பணித்தனர். எல்லாவற்றையும் விஞ்சி நிற்பது ஆதிக்க அரசின் உப்புச்சட்டத்தையே எதிர்த்து மாறாக உப்பு தயாரிக்க விற்க உரிமை வேண்டுமென நீதிமன்றம் சென்றதே. உரிமையில்லா அடிமைவாழ்வில் உரிமை வேண்டி குரல்கொடுக்கத் தனி துணிச்சல் வேண்டும். அதுவும் நம் பெண்குலத்திடம் இருந்தது நம் அனைவருமே வியப்படையும் உண்மையல்லவா....? இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திர மூச்சில் எண்ணிலா துயரங்கள் துண்பங்கள் எல்லையிலா பொறுமை தியகம் துணிச்சல் உள்ளதை உணருதலே அவர்களுக்கு நாம் காட்டும் நன்றியாகும்.

கபடி வீரர் தங்க மகள் சென்னை கார்த்திகா

முனைவர் தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ

பஹ்ரைன் நாட்டில் நடந்த ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2025 (Asian Youth Games 2025)இல் இந்தியாவின் இளையோர் மகளிர் கபடி அணியின் சார்பாகப் பங்கேற்ற சென்னை கார்த்திகா சிறப்பாக விளையாடி இந்தியாவிற்காகத் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இத்தொடரில் ஒரு போட்டியில் கூட தோற்காமல், வெற்றியைப் பெற்று பதக்கத்தை வென்றுள்ளது இந்திய மகளிர் அணி. இறுதிச் சுற்றில் ஈரானை 75–21 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிகண்டது.

தொடரின் தொடக்கமாக வங்காளதேசத்திற்கு எதிராக 46–18; தாய்லாந்து அணிக்கு எதிராக 70–23; இலங்கை அணிக்கு எதிராக 73–10; ஈரான் அணிக்கு எதிராக 59–26 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்ற இந்தியா, இந்தத் தொடரில் அதிகப் புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவும் ஈரானும் தங்கப் பதக்கத்திற்கான இறுதிப்போட்டியில் மீண்டும் விளையாடின. தொடக்கத்தில் இருந்தே இந்திய அணி அசைக்க முடியாத ஒரு முன்னிலையை வகித்து,75–21 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது இந்தியா. இந்த ஆட்டத்தில் தனித்துத் தெரியுமாறு திறன் காட்டியவர்களுள் ஒருவர் 17 வயதான சென்னை கார்த்திகா. இதுதான் கார்த்திகா உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் பெற்ற முதல் பதக்கமும் கூட. இந்தியாவுக்காக விளையாடி தங்கம் வெல்ல விரும்பிய இவரது கனவு இதனால் நிறைவேறியுள்ளது. இந்திய ஆண்கள் அணியும் ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் இறுதிப்போட்டியில் ஈரானை வென்றதால் கபடியில் இந்தியாவுக்கு இரண்டு பதக்கங்கள் கிடைத்துள்ளது. இது இந்திய இளைஞர்களின் விளையாட்டுத் திறன் குறித்த ஒளிமயமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

வெற்றிபெற்ற சென்னை கார்த்திகா மிக எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து பயிற்சி பெற்று இந்தியாவிற்காகப் பதக்கம் வென்று சாதனை செய்துள்ளார் என்பது கூடுதல் சிறப்பு. சென்ற 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதம், பீகார் மாநிலத்தில் நடந்த இந்தியாவிற்கான மகளிர் தேசிய 33வது சப் ஜூனியர் கபடி சாம்பியன்ஷிப் தொடரில், சென்னை கார்த்திகா தமிழ்நாடு அணிக்கு கேப்டனாகப் பொறுப்பேற்று பீகார் அணியை 33-32 புள்ளிக் கணக்கில் அப்பொழுது வென்றார். அந்த விளையாட்டுப் போட்டியிலும் இவர் விளையாட்டுத் திறமைக்காக ரசிகர்களிடையே பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணிக்குத் தங்கப்பதக்கம் பெற்றுத் தந்த தங்கமகள் சென்னை கார்த்திகாவிற்குப் பாராட்டு.

உடன்கட்டை ஏற்றுதல்: நேரில் பார்த்த அனுபவத்தை எழுதி வைத்துள்ள ஐரோப்பியர்..!

Yazh Vellingiri

இது 1798ல் எழுதப்பட்டது..

அவர் பெயர்: Donald Campbell..

பெண் ஒருத்தி, இறந்து போன தன் கணவனோடு சேர்த்து எரிக்கப்படவிருந்த நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றேன்..

இந்த வேதனை தரும் கொடிய சம்பவத்தை நிகழ்த்தத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடம் தஞ்சாவூர் கோட்டையிலிருந்து ஒருமைல் வடக்கே உள்ள காவிரி ஆற்றின் கரை..

அந்தப் பெண்ணுக்கு 16 வயதிற்கு உள்ளே தான் இருக்கும்..

வெள்ளை சேலை கட்டி இருந்தாள்..

தலையிலும் கழுத்தைச் சுற்றிலும் வெள்ளை நிற மல்லிகை பூ சூடி இருந்தாள்..

அவளைச் சுற்றி 20 பெண்கள் நின்று கொண்டு ஒரு வெள்ளைத் துணியை அவள் தலைக்கு மேல் வெயில் படாமல் பிடித்துக் கொண்டிருந்தார்கள்..

அங்கிருந்து 20 அடி தள்ளி சில பிராமணர்கள் விறகுக் கட்டைகளால் எட்டடி நீளத்தில் நான்கடி அகலத்தில் சிதை தயாரித்துக் கொண்டிருந்தார்கள்..

முதலில் மூன்றடி உயரத்திற்கு கம்புகளை செங்குத்தாக நிறுத்தினார்கள்..

உள்ளே சிறிய மரத்துண்டுகளால் நிரப்பினார்கள்..

பக்கத்தில் மூங்கில் கழிகளின் மேல் கிடத்தப்பட்டிருந்த இறந்தவருக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும்..

இறந்தவரின் உடம்பைச் சுற்றி நான்கு பிராமணர்கள் முதல் முறை சூரியனுக்கு எதிர் திசையாகவும் அடுத்த மூன்று முறை சூரிய ஒளி வீசும் திசையிலுமாக சுற்றி வந்தார்கள்..

இப்போது அவர்கள் தங்களுடைய நீண்ட தலைமுடியை அவிழ்த்து விட்டுக் கொண்டும் உடனே மீண்டும் முடிந்து கொண்டும் ஏதோ மந்திரங்களை உச்சரித்தார்கள்..

மற்றவர்கள் மந்திரம் சொல்லிக்கொண்டு கையில் இருந்த பச்சை இலையால் தண்ணீரை எடுத்து அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த சாண எருக்களின் மீது தெளித்துக் கொண்டிருந்தார்கள்..

வடகிழக்கு மூலையில் அமர்ந்திருந்த ஒரு வயதானவர் கையில் இருந்த ஓலைச் சுவடியில் உள்ளதை வாசித்துக் கொண்டிருந்தார்..

மற்றவர்கள் மந்திரம் சொல்லிக்கொண்டு கையில் இருந்த பச்சை இலையால் தண்ணீரை எடுத்து அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த சாண எருக்களின் மீது தெளித்துக் கொண்டிருந்தார்கள்..

வடகிழக்கு மூலையில் அமர்ந்திருந்த ஒரு வயதானவர் கையில் இருந்த ஓலைச் சுவடியில் உள்ளதை வாசித்துக் கொண்டிருந்தார்..

அந்த சூழலின் அழுத்தமும் சோகமும் தாங்க முடியாமல் அருகில் இருந்தவரிடம் இன்னும் எவ்வளவு நேரம் நடக்கும் என்று கேட்டேன்..

இன்னும் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகும் என்று சொல்லவே நான் கோட்டையை நோக்கித் திரும்பினேன்..

500 கெஜ தூரம் நான் சென்றிருக்கும் பொழுது ஒருவர் என் பின்னாலேயே வந்து திரும்பி வருமாறு அழைத்தார்..

சடங்கு உடனே நடத்தப்பட இருப்பதாகச் சொன்னார்..

நான் சென்றபோது அந்தப் பெண்ணை மற்ற பெண்கள் அழைத்துச் சென்று ஆற்றில் குளிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்..

அவள் நெற்றியில் செந்நிறத்தில் ஆறு பென்ஸ் காசு அளவுக்கு பொட்டு வைத்தார்கள்..

பிறகு ஈரமண் போன்று எனக்குத் தெரிந்த ஏதோ ஒன்றை பிசைந்து அவள் நெற்றியில் தடவினார்கள்..

பிறகு அந்தப் பெண் சிதைக்கு அழைத்து வரப்பட்டு அவள் சிதையைச் சுற்றி மூன்று தடவை நடந்தாள்..

சிதையில் அவள் கணவன் உடல் ஏற்கனவே ஏற்றி வைக்கப்பட்டிருந்தது ..

இவள் யாருடைய துணையும் இல்லாமல் தானாகவே அதில் ஏறி தன் கணவன் உடல் அருகில் அமர்ந்தாள் ..

பிறகு தான் அணிந்திருந்த நகைகளின் திருகுகளை, திருகி கழற்றி அந்த ஆபரணங்களை கையில் எடுத்து மீண்டும் அந்த திருகுகளை பொருத்தி பக்கத்தில் நின்ற இரு பெண்களிடமும் ஆளுக்கு ஒன்றாக கொடுத்தாள் ..

தன் காதில் அணிந்திருந்த ஆபரணங்களையும் அவள் மிகுந்த நிதானத்துடன் திருகை கழற்றி எடுத்து, மீண்டும் திருகை பொருத்தி அந்த பெண்களிடம் பிரித்துக் கொடுத்தார் ..

பிரித்துக் கொடுக்கும் பொழுது ஏதோ சிறிய குழப்பம் ஏற்பட அவள் பொறுமையாக அதை சரியாகப் பிரித்துக் கொடுத்தாள் ..



பிறகு மெதுவாக அப்படியே மல்லாக்க சாய்ந்து படுத்தாள். ஒரு மஞ்சள் துணியால் தன் முகத்தை மூடிய பிறகு புரண்டு தன் கணவருக்கு நெருக்கமாக படுத்து தன் வலதுகையை தூக்கி அவர் மார்பின் மீது வைத்தாள் ..

அதன் பிறகு எந்த அசைவுமின்றி காத்திருந்தார் ..

பிராமணர்கள் இறந்தவரின் வாயில் சிறிது அரிசியையும் மீதி அரிசியை அவள் மீதும் தூவினார்கள் ..

பிறகு சிறிது நீரை இருவர் மீதும் தெளித்தார்கள் ..

பிறகு ஒரு சிறிய கயிறு கொண்டு இருவரையும் சேர்த்துக் கட்டினார்கள்..

பிறகு,இருவர் உடலும் மற்றவர் கண்களில் மறையும் அளவுக்கு மரக்கட்டைகளை சுற்றி அடுக்கினார்கள்..

குறுக்குவாக்கில் சிறிது கட்டைகளை அடுக்கிய பிறகு ஒரு பாத்திரத்தில் இருந்து எண்ணெய் போன்ற திரவத்தை அந்த பெண் இருந்த பகுதியில் ஊற்றினார்கள்..

பிறகு மீண்டும் கட்டையை அடுக்கினார்கள்..

இப்போது வெறும் விறகு குவியலாகவே எனக்குத் தெரிந்தது..

இதே நேரத்தில் ஒரு பிராமணர் சிதைக்கு அருகே இருந்தவர் அந்தப் பெண்ணின் தலைப்பகுதி அருகே குனிந்து அவளை கூப்பிடுவது போல் சத்தம் கொடுத்தார்..

ஏதோ அவளிடம் சொல்வது போல சொல்லி பின் எல்லோரையும் பார்த்து சிரித்தார்..

பிறகு முழுவதுமாக வைக்கோலால் மூடினார்கள் சுற்றிலும் கயிறால் இறுக்கிக் கட்டினார்கள்..

பிறகு ஒருவர் சிறிது வைக்கோலை எடுத்து அருகில் கனன்று எரிந்து கொண்டிருந்த சாண எருக்களில் பற்ற வைத்து அதை சிதையில் போட்டார்..

பிறகு தீ நன்றாக பற்றுமாறு விசிறி விட்டார்கள்..

அப்போது காற்றும் அதே திசையில் வீச தீ வேகமாக பற்றி கொண்டது..

ஏதோ ஒரு கிறீச்சிடும் ஒலியை நான் கேட்டது மாதிரியும் மற்ற இரைச்சலிடமிருந்து அதை தனிமைப்படுத்தி கேட்காதது மாதிரியும் இருந்தது..

சில நிமிடங்களில் அந்த குவியல் சாம்பல் ஆனது..

நான் அந்த மொத்த நடவடிக்கைகளையும் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன்..

என் பார்வை முழுவதும் அந்தப் பெண்ணின் மீது தான் இருந்தது..

இந்த கொடூரமான சடங்கை நடத்தியவர்கள் அதை நிறைவேற்றியதில் பெருமிதம் கொண்டிருந்த மாதிரியும், ஐரோப்பியன் ஒருவன் அதைப் பார்த்துக் கொண்டிருப்பது அவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதும் கோட்டைக்கு திரும்பிய வழியில் என் சிந்தனையாக இருந்தது..

தமிழரின் மூதேவி

பூங்கொடிபராங்குசம்

பண்டு தொட்டு வாழ்ந்த தமிழர்கள் இயற்கையையே முதன்முதலில் வழங்கியதாகக் கருதப்பட்டது. அதனைக் கந்தழி என்றே கூறப்படும்.

குறிப்பாக அவர்கள் இயற்கையைப் பெண் வடிவாகவே வழிபட்டிருக்கின்றனர். நதிகள், ஆறுகள் போன்ற நீர் நிலைகள் இன்றும் பெண்களின் பெயராகப் பெண்களைக் குறிப்பிடுவனவாகவே அமைந்திருத்தலைக் காணலாம். தமிழரின் வழிபாட்டில் கொற்றவைத் தெய்வத்தைப் பல உருவ வழிபாடாகப் பெண் வடிவிலேயே பெண் தெய்வங்களாக வழிபட்டனர்.

பழையோள், காடுகிழாள், கானமாச்செல்வி என்று சங்க இலக்கியங்களால் போற்றப்படும் தமிழர்களின் கொற்றவைத் தெய்வம், மிகத் தொன்மையான தெய்வமாக மக்களால் அடையாளம் காட்டப்பட்ட வழிபாட்டுக்குரிய தெய்வமாகும்.

பல்வேறு பெயர்களில் நிலத்திற்கு நிலம் பண்டைய மக்களால் வழிபட்ட கொற்றவைத் தேவிக்கு அடுத்த நிலையில், சங்க இலக்கியங்களில் தவ்வை என்னும் பெயரால் அடையாளப்படுத்தப்பட்ட மிகப்பழமையான தெய்வம் மூதேவி என்பது.

சங்க இலக்கியங்கள் மூதேவிக்குத் தவ்வை என்னும் பெயருடன் மாமுகடி, சேட்டை, காக்கைக் கொடியோள், கேட்டை போன்ற பதினான்கு பெயர்களில் குறிப்பிடுவதைக் காணலாம்.

கழுதை வாகனத்தில் துடைப்பக்கட்டையுடன் மூ தேவி

இவ்வாறு தனித்தன்மையுடன் செல்வச் செழிப்பின் தெய்வமாகக் கருதப்பட்ட தவ்வை என்னும் மூதேவி, பிற்காலத்தில் ஆரிய வருகைக்குப் பின் தரித்திரத்தின் கடவுளாகவும், அழுக்கின் மொத்த உருவமாகவும் சித்தரிக்கப்பட்டு அமங்கலத்தின் சின்னமாக இரவு நேரங்களில் வணங்கும் தெய்வமாகவும் நாற்றம் வீசும் தன்மைகொண்ட கடவுளாகவும் மாற்றப்பட்டாள். நம் முன்னோர்கள் பொருள் சார்ந்த தெய்வமாகச் செதுக்கிய மூதேவி பின்னாளில் பக்தி இலக்கிய வளர்ச்சியின் போது, தாய்த் தெய்வ வழிபாட்டை இழந்து வைதீகக் கடவுளாக வரலாற்றில் திரிக்கப்பட்டாள்.

பக்தி இலக்கியங்களில் புனையப்பட்ட புராணக் கதையில், அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் தென்பட்ட விடமாக வந்ததால் மூத்த தெய்வமாக மூதேவி என்றும், பின்வந்த அமுதம் கண்ட தேவியைச் செல்வத்தின் வளர்ச்சியான இலட்சுமி தேவியாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அதனால், மூதேவியானவள் சீதேவியின் தமக்கை என்னும் உறவிலும் காட்டப்பட்டது. ஆனால், இன்று மூதேவியானவள் நம்மிடையே அதிகம் பேசப்படும் நடைமுறையில் உள்ள ஓர் வசைச்சொல்லாகவே மாறிவிட்டது. இழிவாகப் பார்க்கப்படும் மூதேவியைக் காணக்கூடாது என்பதற்காகவே உத்திரமேரூரில் உள்ள கோவிலில் தவ்வைச் சிற்பத்தைத் தரையை நோக்கிக் கவிழ்த்து வைத்திருக்கிறார்கள்.

நாளடைவில் வடமொழிக் கலப்பிற்குப் பிறகு தவ்வை என்னும் மூதேவி பெயர் வழிபாடு "ஜேஸ்டாதேவி" என்பதாகத் திரிந்தது. ஏனெனில், வடமொழியில் "ஜேஸ்டா" என்றால் மூத்தவள் என்பது பொருளாகும். வடமாநிலத்தில், ‘‘ஜேஷ்டாதேவி" கோவில் என்ற பெயரில் ஒரு கோவிலும் உண்டு. இதனையே காசுமீரத்தில் தூம்ராகாளி, தூம்ரா தேவி என்று வழிபாடு நடக்கிறது. தூம்ரா என்பது அவர்களிடையே அழுக்கு எனப் பொருள்படும். தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோவிலில், ‘‘ஜேஸ்டாதேவி" என்னும் பெயரில் பாலைக்குத் தனி திருமுன்(சன்னதி) உள்ளது என்பதை அறியலாம்.

தமிழரின் தவ்வைச் சிற்பங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. அவை செழித்த மார்புடனும், பருத்த வயிறுடனும் செல்வச் செழுமைக்கு அடையாளமான சின்னமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. தவ்வையின் கொடி காக்கைக் கொடி; ஊர்தி கழுதை; அவள் கையில் இருப்பது துடைப்பம். இவையெல்லாம் அழுக்கைச் சுத்தப்படுத்துவதற்கான எடுத்துக்காட்டுகள். இன்றும் வீடுகளில் தவ்வைத் தெய்வத்தின் கையில் இருப்பது துடைப்பம் என்பதால், துடைப்பத்தைக் காலால் மிதிக்கக்கூடாது என்று கூறும் பழக்கம் உண்டு.

பயிர்களும் உயிர்களும் ஆகிய செல்வங்களின் மூல வடிவம் உரமாகும். அந்த உரங்களின் மூல வடிவாக இருப்பது அழுக்காகும். மாந்தர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் கழிவுகளே அழுக்குகள் என்று சொல்லப்படுபவை. அழுகச் செய்யப்படும் எவையும் அழுக்குகளேயாகும். இத்தகைய அழுக்குகள் தாம் இயற்கை விவசாயத்திற்கு நல்லுரமாகும். அழுக்கினை உரமாக உருவாக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தியவள்

பெண் என்பதால் அவளே முதன்மைத் தெய்வமாகச் சமூகத்தில் அடையாளம் காட்டப்பட்டாள்.

உரத்தின் அடையாளம் தவ்வை. நெற்கதிர்களின் அடையாளம் திருமகள். நெற்கதிர்கள் செழிப்பாக வளர உரமாகத் திகழ்பவள் தவ்வை. இந்தக் கருத்தின் காரணமாகவே தவ்வைச் சிற்பங்கள் பெரும்பாலும் வயர் புறத்தையொட்டியே காணப்படுகின்றன

தமிழர்களின் வாழ்விற்கு அடிப்படைத் தொழிலே விவசாயமாக இருந்தது. அதில் முக்கிய உணவுப் பயிராக நெல் பயிரிடப்பட்டது. அதனால் தான், உயிர்காக்கும் உணவுப் பயிரான நெற்கதிர்களைத் திருமகளின் அடையாளமாகத் தமிழர்கள் போற்றினர். நிலம் செழிப்பானதாக இருக்க வேண்டுமானால் அந்நிலம் ஊட்டச்சத்து நிறைந்த உரத்தைப் பெற்றிருக்க வேண்டும். எனவேதான், அழுக்கு என்பதின் மூத்த தெய்வமாக விளங்கிய தவ்வை என்பவள், மூதேவியாகச் சமூகத்தின் பார்வைக்குப் பொருளானாள். இன்றும் கார்த்திகைத் திருநாளின்போது குப்பை என்று சொல்லப்பெறும் உரக்கூழியில் கார்த்திகை விளக்கு ஏற்றப்படுவதைக் கண்கூடாகக் காணலாம்.

இவற்றின் காரணமாகவே பண்டு வாழ்ந்த தமிழினம், தவ்வையின் உருவத்தினை அறிவு சார்ந்தே உருவாக்கியிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. தமிழர்களின் தாய்த் தெய்வமான மூதேவியை உழவர்கள், சிறுதொழில் செய்பவர்கள் போன்றவர்களே அதிகம் வழிபடுகின்றனர். மழைக்குக் கடவுளாக வருணனை வழிபட்டவர்கள் தமிழர்கள். அத்தகைய வருணனின் மனைவியாகத் தவ்வையைத் தமிழிலக்கியங்கள் அறிமுகப்படுத்துகின்றன. இலையும், தழையும், சாணமும், சேறுமான மண்சார்ந்த அழுக்கினை உரமாகப் பெற்ற அடையாளத்தின் சின்னமாகத் தவ்வைத் தெய்வம் விளங்கியதால், தமிழர்களால் செல்வத்தின் பிறப்பாக வணங்கப்பட்டுப் பின்னால் வந்த ஆரிய மாற்றத்தால் தரித்திரம், எதற்கும் உதவாதது, அமங்கலமானது, சோம்பேறி, அழுக்கானது போன்றவற்றின் தெய்வமாக மக்களிடையே பரப்பப்பட்டக் கருத்தாக்கத்தால், முதன்மைத் தெய்வமானது வசைச் சொல்லுக்குப் பயன்படுத்தப்படும் மூதேவியாக உருமாறியது. பின்னாளில் பக்தி இலக்கியம் வளரும்போது தாய்த் தெய்வ வழிபாடு அழிந்து வைதீக வழிபாடாக உருமாறியது.

நாட்டினான் தெய்வ மெங்கும் நல்லதோ ரருள் தன் னாலே
காட்டினான் திருவ ரங்கம் உய்பவர்க் குய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பி மீர்கான் கெருடவா கனனும் நிற்க
சேட்டை தன் மடியக் கத்துச் செல்வம்பார்த் திருக்கின் றீரே!

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் நகையாடுவதிலிருந்தே மூதேவியின் நிலையை அறியலாம். இப்பாடலில் சேட்டை என்று குறிப்பிடுவது தவ்வையின் மற்றொரு பெயராகும்.

காலப்போக்கில், தவ்வையின் தாய்த்தெய்வ வழிபாடு திசை மாறினாலும் இன்றைக்கும் திருப்பரங்குன்றத்தில் தவ்வைக்குக் குகைக் கோவிலொன்றும் வழுவூர்,

திருவானைக்காவலில் தவ்வை சிற்பமாகவும் வணங்கப்படும் வழக்கம் உள்ளது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களான தஞ்சை, திருச்சி, அரியலூர், சேலம், விழுப்புரம், வேலூர், இரும்ப நாடு, கொளத்தூர், ஆனையூர் போன்ற பல்வேறு இடங்களில் தவ்வை வழிபாட்டுச் சிலைகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவையாவும் பெரும்பாலும் வயற்புறம் ஒட்டியே அமைந்திருப்பதே தவ்வையின் வரலாற்றுத் தொன்மையை நமக்குக் காட்டுகின்றன.

மேலும், தவ்வையின் தொன்ம வழிபாட்டுக்குரிய இடங்களும் தொல்லியல் சான்றாக நமக்கு விளங்குகின்றன. தமிழகத்தில் பெரும்பாக்கம், தென்சிறுவயலூர், பேரங்கியூர் போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற தவ்வையின் சிற்பங்கள் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய சிற்பங்களில் தவ்வையானவள் தன் மகள் மாந்தியுடனும் மகன் குளிகனுடனும் மகிழ்ச்சியுடன் கையில் பணப் பேழையோடும் காட்சியளிப்பதிலிருந்தே முன் காலத் தவ்வையைத் தமிழர்கள் எவ்வாறு வழிபட்டனர் என்பதை அறிந்து கொள்ளலாம்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உத்திரமேரூர் அருகே1200 ஆண்டுகட்கு முந்தைய தவ்வைச் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், தொண்டை நாட்டைச் சேர்ந்த குறுநில மன்னனான பார்த்திபேந்திரவர்மன் சேட்டையார் கோவிலுக்கு நன்கொடையாக1148 குழி நிலம்

வழங்கப்பட்ட தற்கான சான்று உத்திரமேரூர் கல்வெட்டில் உள்ளது. இதில் சேட்டை என்பது தவ்வையின் மற்றொரு பெயர் என்பதை அறியலாம்.

12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தவ்வைக் கோவிலொன்று 2010 இல் பழனியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி.13 ஆம் நூற்றாண்டில் தவ்வை வழிபாடு சிறப்புற்றிருந்தது என்பதற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன.

பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் படைத்தளபதி மனைவியான நக்கன் கொற்றியால் தவ்வைக்குத் திருப்பரங்குன்றத்தில் ஒரு குடைவரைக் கோயில் உருவாக்கப்பட்டிருப்பதைக் குறிப்புகளால் அறியமுடிகிறது.

நந்திவர்ம பல்லவன் தவ்வையைக் குலதெய்வமாக வழிபட்டுள்ளான் என்பதும் வரலாற்றுச் செய்தியாகும். பல்லவர்களுக்குப் பின் வந்த சோழர்களாலும் தவ்வை தெய்வமாக வழிபட்டுள்ளாள். சமணர்களும் தவ்வையை வழிபட்டதற்கான சான்றுகள் உள்ளன.

இத்தகைய தொல்சிறப்பு வாய்ந்த மூத்த தெய்வமாகத் தமிழர்களால் வணங்கப்பட்ட மூதேவியைப் பற்றிய செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று விழிப்புணர்வை ஏற்படுத்துதலே நன்று. அப்போதுதான் மூதேவி என்னும் பெயர் வசைச்சொல்லினின்றும் மாறி வழிபாட்டுக்குரியதாக நிலைக்கும்.

குணநலம் ஓங்கி வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி
சென்னை.

மனித இனம், 'தான்' என்ற உடல் பற்றாலும், 'தனது' எனும் உடைமைப் பற்றாலும், பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் இவற்றில் மயங்கி, உணர்ச்சி வயப்பட்டு, ஆறுவகை தீய குணங்களில் சிக்கி, துன்ப விளைவைத் தரும் செயல்களை ஆற்றுவதால், அமைதி இழக்கிறது.

ஆறு தீய குணங்களைச் சீரமைத்து குணநலம் பெறுவதால், அறிவாட்சித் தரம் உயர்ந்து, மனவளம் எனும் குணநலப்பேறு, அடைவது, மனித குலம் மேன்மைபெறும் வழியாகும்.

இந்தியர்களையும், இந்தியப் பண்பாட்டையும் உலகமே வியந்து நோக்குகிறது. அதற்குக் காரணம் முன்னோர் வகுத்த அறநெறிகளையும் ஒழுக்கப் பழக்கங்களையும் பின்பற்றி வாழ்வதால் அறிவார்ந்தவர்களாகவும், ஆளுமைத்திறம் மிக்கவர்களாகவும் விளங்குகின்றனர்.

உலக ஒற்றுமைக்கும், உயர்வுக்குமான நெறிகளைப் போற்றும், பண்புடையவர்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வுலகம் இயங்குகிறது. இல்லையேல் மண்ணோடு மண்ணாகி விடும்.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.' (திரு. 996)

என்பார் திருவள்ளுவர்.

தான் எனும் அதிகாரப் பற்று (அகங்காரம்), தனது எனும் உடைமைப்பற்று (மமகாரம்), இவற்றால் உருவாகும் ஆறு தீய குணங்கள் 1. பேராசை, 2. சினம், 3. கடும்பற்று, 4. முறையற்ற பால் கவர்ச்சி 5. உயர்வு தாழ்வு மனப்பான்மை 6. வஞ்சம் என்பவைகளாகும்.

1. பேராசை (Greed)

ஆறு தீய குணங்களுக்கும் முதலாவதாக விளங்குவது ஆசையும் அதன் வளர்ச்சியான பேராசையுமாகும்.

'ஆசையே துன்பத்துக்கு காரணம்' என்றார் புத்தர்.

அவா என்று சொல்லப்படுகின்ற துன்பங்களுள் பொல்லாத துன்பம் கெடுமானால் இவ்வுலகிலும் இன்பம் இடையறாமல் வாய்க்கும்.

'அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அஃது உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்' (திரு. 368)

ஒருவன் அவாவிற்கு அஞ்சி வாழ்வதே அறம் ஏனெனில் ஒருவனைச் சோர்வு கண்டு கெடுத்து வஞ்சிப்பது அவா ஆகும்.

'அஞ்சுவது ஓரும் அறனே, ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா' (திரு. 366)

எல்லா உயிர்களுக்கும், எக்காலத்தும் ஒழியாமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து, முழுமைப் பேற்றுக்கு தடையாக நிற்பதும் ஆசையே, என்று திருவள்ளுவர் குறிப்பிடுதல் காணலாம்.

'ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடல் மீதிலே
ஆனை செலவே நினைவர்.'

என ஆசையின் தன்மையினை தாயுமானவர் எடுத்துரைப்பார்.

'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே' (திருமந்திரம் 2615)

ஆசையினாலேயே எண்ணமும், அதைத் தொடர்ந்து செயலும், செயலுக்கேற்ற விளைவும் என்பதால் முறைப்படுத்திக் கொள்வது முதன்மையாகிறது.

'எதுவரை நம்மிடம் ஆசைகள் இருக்குமோ, அதுவரை உலக விவகாரங்கள் இருக்கும் அவற்றால் உண்டாகக்கூடிய துன்பம், கவலை, அமைதியின்மை, ஆகியனவும் கூடவே இருக்கும். ஆசைகளை விட்டால் உடனேயே செயல்கள் நம்மிடமிருந்து அகன்று விடுகின்றன. அமைதி கிடைக்கிறது' என்பார் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

அளவு கடந்த ஆசையே பேராசை ஆகும். பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் இவற்றில் ஆழ்ந்து, இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும் என்ற தீராத ஆசையே பேராசையாகிறது.

'பேராசை பெருநஷ்டம்' எனும் பழமொழி உள்ளது. அளவுக்கு மீறிய பேராசை, பெரிய இழப்புக்கு வழி வகுக்கும்.

மூவகை ஆசைகள்

மண்ணாசை - மகாபாரதம் - துரியோதனன்
பெண்ணாசை - இராமாயணம் - இராவணன்
பொன்னாசை - தொட்டதெல்லாம் பொன்னாகும் வரம்பெற்ற மைதாசு அரசன்

என மூவகை ஆசையால் விளையும் துன்பத்தை முன்னோர் எடுத்துரைத்தனர்.

அளவான ஆசை

ஆசையின்றி உயிர் வாழ்க்கை இயலாது என்பதால், அதனை சீரமைத்துக் கொள்ள வேண்டும்.

'மண்ணுலகில், பெண்துணையோடு பொன்கொண்டே வாழ்கின்றோம். மாற்றுவதேன் மூவாசை மதியுடனே பயன் கொள்வோம்' என ஆசையைச் சீரமைக்கும் வழிகளை எடுத்துரைத்தார் வேதாத்திரி மகரிசி.

தன் முன்னேற்றம், குடும்ப முன்னேற்றம், சமுதாய நலம் குறித்த ஆசைகளை நேர்வழியில் திட்டமிட்டு, அணுகி, செயலாற்றி நிறைவடைதல் வேண்டும்.

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழிப்படி ஆசையை நிறைமனமாக மாற்றினால் அமைதி நிலைக்கும்.

2. சினம்

ஆசையை அடக்கினால், அது அழுத்தம் பெற்று பலவகை துன்பங்களாக உருவாகும். ஆராய்ந்தால் பிறந்த இடத்திலேயே ஒடுங்கும். சீரமைக்காத ஆசையே சினம் ஆகிறது. ஆசை தடைப்படும்போது சினமாக உருவெடுக்கிறது. தடையை நீக்குவதற்கு எழும் எண்ண எழுச்சி, ஆசையின் அடுத்த கட்டமே, சினம் ஆகும்.

சினத்தால் துன்ப விளைவுகள் உண்டாகின்றன. உடல்நலம், நட்பு நலம், மனவளம் அனைத்தையும் அழிக்கும். தற்கொலைக்கு சமமாகும்.

'தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்' (திரு. 305)

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புனையைச் சுடும்' (திரு. 306)

என திருவள்ளுவர் வெகுளாமை எனும் அதிகாரத்தில் விரிவாக எடுத்துரைப்பார்.

'கோபமே பாங்களுக்கெல்லாம் தாய் தந்தை
கோபமே குடி கெடுக்கும்.'

‘கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீய
நரகக் குழிலி னிற்றள்ளும்’

என அறப்பளீஸ்வர சதகம் குறிப்பிடுகிறது.

சினத்தை வென்ற சான்றோர்

பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல், இந்நான்கை தவிர்த்து, அறத்தோடு வாழும் சான்றோரிடம் அமைதி நிலைத்திருக்கும் அவர்களை எவராவது தகாத செயல்கள் மூலமோ, சொற்கள் மூலமோ சின மூட்டினாலும் அது எழும்போதே மறைந்துவிடும். ஒருகணம்கூட நிலைக்காது.

‘குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது’ (திரு. 29)

என்றார் திருவள்ளுவர்.

மூவகைச் சினம்

சிறு வேறுபாடு வந்தாலும் தாழ்ந்தோர், பிளந்து போட்ட கல்லைப்போலப் பிரிந்து விடுவர் பெரும் சினத்தால் பிரிந்தாலும் பெரியோர், பிளந்த தங்கத்தைப் போல மீண்டும் சேர்ந்து விடுவர். ஒருவர் எய்த அம்பால் நீரில் உண்டான வடுவைப் போன்றதாகும். சான்றோர் சினம். சிறிது நேரம்கூட நிலைத்திருக்காது என்பார் ஔவையார்.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற் பிளவோ டொப்பாரும் போல்வாரே - வில் பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்’ (மூதுரை 23)

சினத்தால் வரும் கேடுகள்

மன அலைச்சுழல் 25 - 30 c/s என ஓடும். அதையும் தாண்டி 35 - 40 c/s என வரும்போது உடல் தாங்க முடியாமல் மயக்கம் உண்டாகும்.

உயிராற்றல் அதிகமாக வெளியேறும், ரத்த அழுத்தம், இதய படபடப்பு, நரம்புகள் பலவீனம், கண்நோய், வயிற்றுப்புண், மூலநோய் மலச்சிக்கல், கை, கால் நடுக்கம் முதலிய நோய்கள் தாக்கும். குடும்பம் மற்றும் பிறரின் வெறுப்பும், பகையும் உண்டாகிறது.

பொறுமை எனும் மருந்து

சினத்தைப் பொறையுடைமையாக மாற்றிக்கொள்ள வேண்டும். விழிப்போடு பொறுமை காக்க வேண்டும். மன ஒருமைப்பாடு எனும் தவப் பயிற்சி மூலம், மன அலைச்சுழல் வேகம் குறைத்து பழகி வருதல் உடல் நலம் மனவளம் காக்கும் வழியாகும்.

'நம்பிக்கையாளர்களே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும், நீங்கள் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லா, பொறுமையாளர்களுடன் இருக்கிறான்' என்பது திருக்குரான் 2-155) வாசகமாகும்.

'திறமையினால் சாதிப்பதைவிட பொறுமையினால் அதிகமாக சாதிக்கலாம். பொறுமை மிகப் பெரியது' என்பார் மகாத்மா காந்தியடிகள்.

ஆசையும் கோபமும் உயிர்க்குணங்கள் உயிருள்ளவரை உடன் இருக்கும், அடிப்படைக் குணங்களாகும். சரியாக ஆளுமை செய்யாவிடில் பழிச் செயலுக்கு ஆளாக்கி துன்ப விளைவைத் தரும் என்பதால் அயராத விழிப்பு நிலையை வலியுறுத்தினர் முன்னோர்.

3. கடும் பற்று *(Miserliness)*

பொருள் மீதுள்ள தீவிரமான ஆசையே கடும் பற்று ஆகும்.

பொருள், புகழ், செல்வாக்கு, மக்கள் பாசம் இவற்றில் அதிகமான விருப்பம் காட்டுதலாகும். பேராசையும், கடும்பற்றும் நெருங்கிய தொடர்புடையனவாகும். இவற்றால் பல்வேறு சிக்கல்கள் உண்டாகின்றன.

தன்னிடமுள்ள பொருளையோ அல்லது பிறவற்றையோ, விட்டுவிட மனமின்றி தீவிரமாக பற்றிக் கொண்டிருக்கும் மனநிலை.

பணம் மீதுள்ள பற்றால் தீராத பொருளாசை கொண்டு, எவருக்கும் ஈகை புரியாத தன்மையால் கஞ்சன், தன்னலமிக்கவன் என பெயரெடுப்பர். இதனால் பல்வேறு சிக்கல்கள் உண்டாகின்றன.

இத்தீய குணத்திலிருந்து மீண்டுவர, பற்றில்லாத ஒரு குருவை அடைந்து நிறைவு பெற வேண்டும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' (திரு. 350)

என்பார் திருவள்ளுவர்.

'தானம் அது விரும்பு' (ஆத்திசூடி - 56)
'ஈயார் தேட்டை (செல்வத்தை) தீயோர் கொள்வர்'
(கொன்றை வேந்தன் 4)
இட்டார் பெரியோர், இடதார் இழிகுலத்தோர் (நல்வழி 2)

என ஔவையார் எடுத்துரைத்தல் காணலாம்.

'ஈகை உள்ளவனுக்கு எவனும் சினேகிதன்' (நீதி. 19.6)

என பைபிள் உரைக்கின்றது.

பண்டம் + ஈகை - பண்டிகை, 'ஈகைத் திருநாள்' என முன்னோர் வழி காட்டினர்.

எனவே கடும்பற்றை, ஈகைக் குணமாக சீரமைத்துக்கொள்ள அறிவுறுத்துதல் காணலாம்.

4. முறையற்ற பால் கவர்ச்சி (Sexual Urge)

பருவம் நிறைவு பெற்றபின், உடலியக்கத் தேவைக்கு மிகுதியாக ஊறும், வித்துக்குழம்பு உடலைவிட்டு வெளியேற, விரைவு கொள்ளும் போது ஏற்படும் உணர்வே 'பால் உணர்வு வேட்கை' ஆகும். இதனை பால் கவர்ச்சி (மோகம்) என்பர்.

திருமணம் எனும் பந்தம் மூலம், ஒரு ஆணும், பெண்ணும் இணைந்து, அறநெறி காத்து வாழ்வதே இல்லறம் ஆகும். இல்லறம் நல்லறம் ஆகும், தவம் செய்வாரைவிட மிக்க வல்லமையுடைய வாழ்க்கை ஆகும்.

'ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.' (திரு. 48)

இல்லறம், மூலம் கடைமைகளை ஆற்றி வாழ்வில் முழுமை அடையும் வழிகளை எடுத்துரைத்தார் திருவள்ளுவர்.

வாழ்க்கைத் துணை அல்லாத வேறு ஒருவருடன் உறவு கொள்வது, ஒழுக்க நெறியை புறக்கணித்தல் ஆகும். அதனால் குடும்பத்தில், சமுதாயத்தில் குழப்பம் உண்டாகும். அது இல்லற ஒழுக்கத்தை மீறும் செயலாகும்.

ஒழுக்கம் மீறிய உடல் வேட்கையே முறையற்ற பால் கவர்ச்சியாகும். சீரமைக்காத ஆசையால் உருவாகும் இச்சிந்தனையால், உடல் நலம், மனவளம், சமுதாய நலம் கெடும்.

இல்லறம் சிறக்கவும், அதன்மூலம் அமைதியும் நிறைவும் பெறவும், திருக்குறளும், அற நூல்களும் எடுத்துரைக்கின்றன.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு' (திரு. 148)

என்றுரைப்பார் திருவள்ளுவர்.

'கற்பு நிலை என்று சொல்ல வந்தார். இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' என்றார் பாரதியார்.

உடல் நலத்துக்கும், மூளை வளத்துக்கும் அடிப்படையான மூல ஆதார சத்தான, வித்து சக்தியின் மேன்மை அறிந்து முறையற்ற பால் கவர்ச்சியை கற்பு நெறியாகக் கொள்ள அறிவுறுத்துதல் காணலாம்.

5. உயர்வு தாழ்வு மனப்பான்மை (*Inferiority & Superiority Complex*)

ஒருவர் தன்னை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்த்து உயர்வாகவோ, தாழ்வாகவோ கருதும் மனநிலை.

ஒருவருக்கு அமைந்துள்ள உடல்வலிமை, பொருள் வளம், செல்வாக்கு, புகழ், திறமை, கடமை, பொறுப்பு, இவற்றைக் கொண்டு மற்றவர்களிடம் உள்ள இவற்றின் அமைப்பை ஒப்பிட்டுப் பார்த்து மன அமைதியை இழத்தல் ஆகும்.

தாழ்வு மனப்பான்மை (*Inferiority Complex*)

எப்போதும் தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் தான் பின் தங்கி இருப்பதாக நினைத்தல், தகுதிகள், திறன்கள் குறைவு என நினைத்தல், தன் குறைகளுக்காக வருந்தி மற்றவர்களைப் போல இருக்க விரும்புதல், முதலியவற்றால் காலப்போக்கில் தோல்வியும், கவலையும் பெருகும்.

தன்னம்பிக்கை குறைவால் தொடர் முயற்சி தடைபடும். வெற்றியில் நம்பிகை இன்மை உண்டாகும்.

உயர்வு மனப்பான்மை (*Superioriy Complex*)

மற்றவர்களைவிடத் தன்னை உயர்ந்தவர் என நினைத்தல், தன் கருத்துக்களும், செயல்களும் சரியானவை என கருதுதல், மற்றவரை குறைத்து மதிப்பிடுதல், தாழ்த்திப் பேசுதல் போன்றவை நட்பு நலம் கெடக் காரணமான, பகையை உண்டாக்கும்.

ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதை உணர்ந்து, பிறரின் திறமைகளையும், குணங்களையும் மதித்தல் வேண்டும். தன்னை அறிதல், தன் பலம் அறிதல், நேர் மறையாக சிந்தித்தல், அத்தகைய சூழலில் இருத்தல், என சம நோக்காக மாற்ற வேண்டும்.

6. வஞ்சம் (*Vengence*)

ஆசை தடைப்பட்டால் சினமாகிறது. சினத்தை வெளிப்படுத்த முடியாவிட்டால் கவலை ஆகிறது. சினத்தை இருப்பு கட்டி வைப்பது வஞ்சம் ஆகிறது.

சினம் ஏற்படுத்திய நபரை தான் விரும்பியபடி துன்புறுத்தவோ, தண்டிக்கவோ, போதிய வலுவும், வாய்ப்பும் இல்லாதபோது அச்சினத்தை மனதில் தேக்கி வைத்து, தண்டிக்க ஏற்ற வலுவும், வாய்ப்பும் எதிர்பார்த்து உள்ளத்திலேயே சினத்தை வளர்த்து வரும் மனநிலைதான் வஞ்சமாகும். இதுவே பழிவாங்கும் உணர்ச்சியாகும். இதனால் உடல்நலம், மன அமைதி கெடும்.

வஞ்ச மனம் உடையவனது பொய் ஒழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும். ஐநது பௌதீகங்களும் கண்டு தமக்குள் சிரிக்கும்.

‘வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்’ (திரு. 271)

என்பார் திருவள்ளுவர்.

மன்னிப்பு எனும் மாமருந்து:

தீமைசெய்த ஒருவனைத் தண்டிப்பதால் மனத்திற்கு அந்த நேரத்திற்கு ஒரு மகிழ்ச்சி, நிறைவு ஏற்படும். அந்த நிலை ஒருநாள் கூட நீடிக்காது. தண்டிக்கப்பட்டவர் மீண்டும் ஏதாவது தீமை செய்து விடுவாரோ என்ற பயம், மனதை உறுத்திக்கொண்டே இருக்கும். அமைதியாக இருக்க விடாது. அதற்குப் பதிலாக தீமை செய்தவனை மன்னித்து விட்டால், வாழ்நாள் முழுவதும் அமைதியும் புகழும் நீடிக்கும்.

‘ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்’ (திரு. 156)

மன்னிப்பு இயலாமையின் அடையாளமன்று, அதுவே வீரத்தின், மனவளத்தின் அடையாளமாகும் என திருவள்ளுவர் எடுத்துரைத்தல் காணலாம்.

மன்னிக்கும் குணத்தால் உடல் நலமும், மகிழ்ச்சியும் நிலைக்கும்.

‘கலிபோர்னியா, ஸ்டான்போர்டு’ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர், ‘பிரட்லஸ்கின்’ பல ஆண்டுகள் ஆய்ந்து முடிவில், மன்னிக்கும் குணம் ஒருவரின் உடல் நலத்தில் பல மாற்றங்கள் செய்வதைக் கண்டறிந்தார்.

அரசியல், சமயம் முதலான முரண்பாடுகளால், கொல்லப்பட்டவர்களின் வாரிசுகளிடம் ஆய்வு செய்து, அவர்களிடம் மன்னிப்பின் தேவையை உணர்த்தியபின், காலப்போக்கில் அவர்கள் மனதில் கோபம், பதற்றம், மன அழுத்தம் ஆகியன குறைந்து, நம்பிக்கை குணம் துளிர்த்து, மகிழ்வுடன் வாழ்ந்ததை வெளியுலகுக்கு சான்றுகளுடன் தெரிவித்தார்.

அமெரிக்காவில், ‘விஸ்கான்சி’ பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடத்தியதில், நரம்புக் கோளாறு, கோபம், முதலிய குறைபாடுடையவர்கள் தாம், பழிவாங்கும் பண்புடையவர்களாக இருக்கின்றனர். மன்னிக்கும் பண்புடையவர், மகிழ்ச்சியும், உடல்நலமும் உடையவர்களாக வாழ்கின்றனர் என்ற முடிவு வெளிப்பட்டுள்ளது. இதயம், மூளை, நரம்பு மண்டலம் முதலியன சிறந்த முறையில் இயங்குகின்றன என்ற உண்மையும் வெளிப்பட்டது.

மன்னிக்கும் பண்பு எவரிடம் இருக்கின்றதோ, அவர்கள் நோயின்றி மகிழ்ச்சியுடன் நீண்ட காலம் வாழ முடியும். மன அழுத்தம், ரத்த அழுத்தம், இதய நோய், நரம்புத் தளர்ச்சி ஆகியன வராமல் காக்கும் என்பதை ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

தானும் நிறைவாக வாழ்ந்து பிறரும் வளமாக வாழ நல்லுரைகளை வழங்கும், முன்னோர் வழியில், குணநலம் ஓங்கி வாழ்க!

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்- 8

டாக்டர் சிவராமகிருஷ்ண அய்யர் பத்மாவதி

மேனகா நரேஷ்,
நியூ ஜெர்சி

இந்தியாவின் முதல் பெண் இதய நிபுணர் என்றப் பெருமைக்குரியவர் டாக்டர் சிவராமகிருஷ்ண அய்யர் பத்மாவதி. இந்தியாவில் இதய நோய் சிகிச்சைக்கு அடித்தளம் அமைத்தவர் . இதய நோய் தொடர்பான உயர் கல்வியை பெறும் முயற்சியில் பாலினத் தடைகளை கடந்து முன்னேறியதால் பெண்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார். 95 வயதுவரை பணியாற்றிய இவர், 2015ஆம் ஆண்டில் தான் ஓய்வுபெற்றார். தனது கடின உழைப்பு, புதுமையான சிந்தனை, உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் சுகாதாரத்துறையை மேம்படுத்தி, இதயநோய் நிபுணராக பல சாதனைகள் படைத்த ஒப்பற்ற மருத்துவர் இவர்.

பிறப்பு, படிப்பு, ஆரம்பகால வாழ்க்கை

பத்மாவதி 1917 ஜூன் 20ஆம் தேதி பர்மாவில் (தற்போதைய மியான்மார்) பிறந்தார். இவருக்கு மூன்று சகோதரர்கள், இரண்டு சகோதரிகள் . வழக்கறிஞராக

இருந்த இவரது தந்தை பிள்ளைகளின் கல்விக் கனவுகளை ஆதரித்ததால், தன்னம்பிக்கையுடன் தனது இலக்குகளை அடைய பத்மாவதியால் முயற்சிக்க முடிந்தது.

தந்தையின் வழிகாட்டுதலில் ரங்கூன் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அந்தக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி பத்மாவதிதான். அதிலும் முதன்மை மதிப்பெண் பெற்று, பல தங்கப்பதக்கங்களை வென்றதன் மூலம், ஆரம்பத்திலேயேதனதுதிறமைக்குச்சான்றாகத்தெளிவானமுத்திரையைப் பதித்தார்.

இரண்டாம் உலகப்போரின் போது, 1942ஆம் ஆண்டு ஜப்பான் பர்மாவில் தாக்குதல் நடத்தியபோது, பர்மாவிலிருந்து விமானம் மூலம் தாயார் மற்றும் சகோதரிகளுடன் சேர்ந்து பத்மாவதி இந்தியாவிலுள்ள கோயம்புத்தூருக்கு புலம்பெயர்ந்தார்.

குடும்பத்தின் ஆண்கள் பர்மாவில் போர் முடியும்வரை இருக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. 1945ல் போர் முடிவடைந்தபோது, அவர்களும் கோவைக்கு புலம்பெயர, குடும்பம் முழுமையாக மீண்டும் ஒன்றிணைந்தது. அதன் பிறகு, டாக்டர் பத்மாவதி லண்டனிலுள்ள ராயல் காலேஜ் ஆஃப் பிசிஷியன்ஸ் மற்றும் எடின்பரோவில் உள்ள ராயல் காலேஜ் ஆஃப் பிசிஷியன்ஸ் ஆகியவற்றின் உறுப்பினராக (Fellow) ஆகும் நோக்கத்துடன் இங்கிலாந்துக்கு பயணித்தார்.

வெளிநாடுகளில் மேற்படிப்பும் ,பயிற்சியும்

1949 ஆம் ஆண்டில் மேற்படிப்பிற்காக லண்டனுக்குச் சென்ற டாக்டர் பத்மாவதி, அங்கு பெண்கள் அதிகம் தேர்ந்தெடுக்காத இருதயத் துறையைத் தேர்ந்தெடுத்தார். லண்டனிலுள்ளதி ராயல் சொசைட்டி ஆஃப் எடின்பரோவில் இருதய சிகிச்சையில் ஃபெல்லோஷிப் பெற்ற பிறகு, பட

ஸ்டாக்ஹோமில் உள்ள ஸோடர்ஸ்ஜுகுசெட் (Södersjukhuset) மருத்துவமனையில் டாக்டர் குஸ்தாவ் நைலின் மற்றும் டாக்டர் குன்னாட் பியோர்க்கின் (Dr.Gustav Nylin and Dr.Gunnat Bjorck)கீழ் ஸ்வீடனில் ஒரு குறுகிய காலத்திற்கு பணியாற்றினார் . அதன் பின்னர், அமெரிக்காவிலுள்ள ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்திற்கு சென்று, புகழ்பெற்ற டாக்டர் ஹெலன் டௌசிக் (Dr.Helen Taussig)கீழ் பயிற்சி பெற்றார். இவரிடம் ''ப்ளூ பேபி'' எனப்படும் இருதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்கக் கற்றுக் கொண்டார்.

பின்னர், ஹார்வர்ட் மெடிக்கல் ஸ்கூலில் டாக்டர் பால் டட்லி வைட்டின் (Dr. Paul Dudley White)கீழும் பயிற்சி பெற்று, பாஸ்டனில் உள்ள மெசசூசெட்ஸ் ஜெனரல் ஹாஸ்பிடலும், பிரிக்ஹாம் அண்ட் விமென்ஸ் ஹாஸ்பிடலும்

(Massachusetts General Hospital and Brigham and Women's Hospital) பணியாற்றினார். ஆஞ்சியோ*(angio)* உட்பட நவீன இருதய சிகிச்சை நுட்பங்களையும் அறிந்து கொண்டவர், தொடர்ந்து ஸ்வீடனில், எக்கோ என்ற இருதய ஸ்கேனிங்கில் பயிற்சியும் பெற்று ஒரு தேர்ந்த இருதய சிகிச்சை மருத்துவராக மாறினார்.

இந்தியா வருகை

அமெரிக்காவின் பல பிரபல மருத்துவமனைகள் டாக்டர் பத்மாவதியின் திறமையை உணர்ந்து, அவரை அங்கேயே பணியாற்ற அழைத்தன. ஆனால் அதே நேரத்தில், அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த ராஜ்குமாரி அம்ரித் கௌர், டில்லியின் பெண்கள் மருத்துவக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக பணிபுரிய நியமன ஆணையினை பத்மாவதிக்கு அனுப்பி வைத்தாராம். அமெரிக்காவில் பிரகாசமான எதிர்காலம் காத்திருந்தாலும், போர் காலத்தில் தன்னையும், தனது குடும்பத்தையும் காப்பாற்றிய இந்தியாவிற்குச் செல்வதே சரியான முடிவு என நினைத்தார். அதன் பேரில், *1953*ஆம் ஆண்டில் இந்தியா திரும்பிய டாக்டர் பத்மாவதி, லேடி ஹார்டிங் மருத்துவக் கல்லூரியில் தனது பணியைத் தொடங்கினார். அது இந்தியாவின் இருதயநோய் சிகிச்சைத் துறைக்கே ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதயநோய் நிபுணராக ஆற்றிய முக்கியப் பணிகள்

*1954*ஆம் ஆண்டு, அந்த மருத்துவக் கல்லூரியிலேயே இருதயத் துறையை முதன்முதலாக நிறுவிய டாக்டர் பத்மாவதி, அமெரிக்காவின் ராக்ஃபெல்லர் நிறுவனத்தின் நிதியுதவியுடன், இந்தியாவின் முதல் கேத் லாப் *(Cardiac Catheterization Laboratory)* ஒன்றையும் தொடங்கினார். மாரடைப்பின் போது மேற்கொள்ளப்படும் ஆஞ்சியோகிராம், ஸ்டெண்ட் பதித்தல் போன்ற உயிருக்குப் போராடும் சிகிச்சைகள் இந்தக் கேத் லாப் மூலம் துவக்கப்பட்டன. அந்நேரத்தில் இதை நிறுவுவது, இந்திய மருத்துவ வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகவே அமைந்தது.

மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்படிப்பு கற்க வேண்டிய அவசியமே இல்லாமல், இந்தியாவிலேயே உயர்ந்த தரத்தில் இருதய நோய் மருத்துவத்தைப் பயில வாய்ப்பை ஏற்படுத்தியவர் டாக்டர் பத்மாவதி. இந்திய மருத்துவக் கவுன்சிலில் முக்கியப் பங்கு வகித்த அவர் அளித்த பரிந்துரையின் அடிப்படையில், இருதயத்துறை சார்ந்த டி.எம். கார்டியாலஜி *(DM Cardiology)* எனும் பட்ட மேற்படிப்பு உருவாக்கப்பட்டது. இன்று இந்தப் பாடநெறியின் வழியாக நாடெங்கும் ஆயிரக்கணக்கான இருதயநோய் நிபுணர்கள் உருவாகி, திறமையுடன் செயல்பட்டு பல உயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.

இவரது அரிய சேவையை மதித்த இந்திய அரசு, *1967*ஆம் ஆண்டு மவுலானா ஆசாத் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முதன்மை இயக்குநராக பதவியேற்க

அவரை அழைத்தது. அதன் பின், அதனுடன் இணைந்திருந்த இர்வின் & ஜிபி பண்ட் மருத்துவமனைகளில், இருதய சிகிச்சைப் பிரிவுகளை அவர் நேரடியாக தொடங்கினார். இந்த காலத்தில் அவர் எழுதிய நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவ ஆய்வுகள் உலகளாவிய மருத்துவ இதழ்களில் வெளிவந்தன. குறிப்பாக குழந்தைகளை பெரிதும் பாதிக்கும் ரூமேடிக் காய்ச்சல் மற்றும் அதன் மூலம் ஏற்படும் இருதய நோய்கள் குறித்த அவரது ஆய்வுகள், இந்திய மருத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை. இவ்வாய்வுகளின் முக்கியத்துவம், இன்று வரையிலும் மருத்துவ அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுவது பெருமைக்குரியது.

தன்னுடைய சாதனைகளின் பட்டியலில் மேலும் ஒரு பெருமையைச் சேர்த்துக்கொண்டு, இந்திய இருதய நோய் மருத்துவ சங்கத்தின் தலைவராகவும் *(Cardiological Society of India)* , தேசிய மருத்துவ அறிவியல் அகாடமியின் தலைவராகவும் *(National Academy of Medical Sciences)*, டாக்டர் பத்மாவதி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவில் இருதய நோய் மருத்துவ வளர்ச்சியை ஊக்குவித்து, இதய நோய்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், அனைத்திந்திய இதய அறக்கட்டளையையும் *(All India Heart Foundation)* நிறுவினார்.

*1981*ஆம் ஆண்டில், இந்த அறக்கட்டளையின் ஒரு முக்கிய அங்கமாக, தேசிய இதய நிறுவனம் *(National Heart Institute)* என்றொரு முக்கிய மருத்துவ மற்றும் ஆராய்ச்சி மையத்தையும் நிறுவினார். இது, தடுப்பு இருதய மருத்துவத்தில் மருத்துவர்களை பயிற்றுத்தலும், தொடர்புடைய ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்திய இருதய நோய் மருத்துவ சங்கத்தின் *(Cardiological Society of India)* தலைவராகவும், தேசிய மருத்துவ அறிவியல் அகாடமியின் *(National Academy of Medical Sciences)* தலைவராகவும் டாக்டர் பத்மாவதி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவில் இருதய நோய் மருத்துவ வளர்ச்சியை ஊக்குவித்து, இதய நோய்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், *1962* ஆம் ஆண்டு அனைத்திந்திய இதய அறக்கட்டளையையும் *(All India Heart Foundation)* நிறுவினார்.

*1981*ஆம் ஆண்டில், இந்த அறக்கட்டளையின் ஒரு முக்கிய அங்கமாக, தேசிய இதய நிறுவனம் *(National Heart Institute)* என்றொரு முக்கிய இருதயநோய் சிகிச்சை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தையும் நிறுவினார்.

கிராமங்களில் முகாம்களை தொடர்ந்து நடத்தி மக்களுக்கு இருதய நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். ''மருந்து நிவாரணிகளை உங்கள் சேவகனாக்குங்கள். அவை எஜமானராக அனுமதித்துவிடாதீர்கள்'' என்றார். ''நோயாளிகளைத் தொட்டு கண்களாலும், காதுகளாலும் பார்த்தாலும், இருதயத்தால் உணர்ந்துதான் சிகிச்சை அளிக்கிறேன்'' என்றவர், புதிய புதிய தொழில்நுட்பங்களை தினம்தினம் கற்றுக் கொண்டே இருப்பதில் ஆர்வம்

கொண்டிருந்தார். 90 வயதிலும், தினமும் 12 மணி நேரம் அவர் நிறுவிய தேசிய இதய நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தார்.

புத்தகங்களின் மீது பேரார்வம் கொண்ட இவர் தனது மருத்துவமனையில் தனி நூலகம் ஒன்றை நிறுவி 300க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் உலகிற்கு சமர்ப்பித்துள்ளார். 95 வயது வரையில் அயராமல் பணியாற்றிய பத்மாவதி 2015ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றார். ஓய்வுக்குப் பிறகும், மருத்துவ சமூகம் முழுவதற்கும் வழிகாட்டும் ஒளியாக இருந்து, அனைவருக்கும் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்க வேண்டியது குறித்து தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஆரோக்கிய வாழ்வுக்கு இவரது ஆலோசனைகள்

'உணவுப் பழக்கம் மற்றும் உடற்பயிற்சியில் கவனம் செலுத்தினால், எளிதில் இருதய நோய் ஏற்படுவதில்லை. அதிலும் இளவயது மாரடைப்பு ஏற்படுவதே இல்லை' என்பதை வலியுறுத்தி, தானும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். நீச்சல் பயிற்சி, நடைப்பயிற்சி, டென்னிஸ் ஆடுவது , ஆரோக்கியமான உணவுப் பழக்கம் ஆகியவற்றை தொடர்ந்து கடைப்பிடித்தார். இதுவே அவரது நீண்ட ஆயுளுக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

விருதுகளும் பாராட்டுகளும்

இந்திய அரசால் 1967-ஆம் ஆண்டில் பத்ம புஷண் மற்றும் 1992-ஆம் ஆண்டில் பத்ம விபூஷண் விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன. இதற்குப் பிறகு, அவர் பெற்ற முக்கியமான விருதுகள் சில பின்வருமாறு:

- ஹார்வர்ட் மெடிக்கல் இன்டர்நேஷனல் விருது (2003)
- ஆசிய பசிபிக் கார்டியாலஜி சங்கத்தின் ஆண்டோனியோ சாமியா உரை விருது (2005)
- சிவானந்தா சிறந்த குடிமகன் விருது (2012)
- இந்திய இருதய சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது (2012)
- தேசிய மருத்துவ அறிவியல் அகாடமியின் வாழ்நாள் சாதனை விருது (2013)
- ஜி.பி.பி.எச். நிறுவனத்தின் பொன்விழாவில் வழங்கப்பட்ட சிறப்பான சேவைக்கான விருது (2014)
- இறுதி மூச்சுவரை மருத்துவப் பணிபுரிந்த டாக்டர் பத்மாவதிக்கு பி.சி. ராய் விருது, கமலா மேனன் விருது, டாக்டர் ஆஃப் சயின்ஸ் பட்டம் என்று

பல்வேறு விருதுகளைத் தொடர்ந்து அடுத்தடுத்து வழங்கி சிறப்பித்துக் கொண்டே இருந்தது இந்திய அரசு.

- 2007ஆம் ஆண்டில், யூரோப்பிய இருதய மருத்துவச்சங்கத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றார் டாக்டர் பத்மாவதி. இது மிகவும் அரிதான கவுரவமாகும், மேலும் அந்த நேரத்தில் அவருக்கு 90 வயது என்பது குறிப்பிடத்தக்கது . இந்த விருதானது, இதயநோய் சிகிச்சை பிரிவில் உலகளாவிய முன்னோடியான அவரது மரியாதையை உறுதிப்படுத்தியது.

மரணத்திற்குப் பின்னும் டாக்டர் பத்மாவதியின் தாக்கம்

டாக்டர் பத்மாவதி 95வது வயது வரை தொடர்ந்து பணியாற்றி, 2015ல் தான் ஓய்வு பெற்றார். ஓய்விற்குப் பிறகும், மருத்துவத் துறைக்கு வழிகாட்டும் ஒளியாய் விளங்கிய அவர், எல்லோருக்கும் தரமான சுகாதார சேவையை வழங்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருந்தார்.

2020 ஆம் ஆண்டு,ஆகஸ்ட் 29ஆம் தேதி, தன்னுடைய 103 வது வயதில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு டாக்டர் பத்மாவதி காலமானார்.

டாக்டர் பத்மாவதி ஏழை எளியவர்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் இறுதி வரை தொடர்ந்து இயங்கி வந்தார். நரம்பியல் நிபுணரான அவரது சகோதரி ஜானகியுடன் சேர்ந்து, ஜானகி-பத்மாவதி அறக்கட்டளையை நிறுவினார். இதன்மூலம் சகோதரிகள் இருவரும் தங்களுடைய முழு வருமானத்தையும் பொருளாதாரமற்ற நோயாளிகளுக்கான உயிர்காக்கும் இதய அறுவை சிகிச்சைகளுக்காகத் தானமாக வழங்கினர். இந்த தன்னலமற்ற பண்பே அவரது வாழ்க்கை முழுவதும் பிரதிபலித்தது; தனிப்பட்ட லாபத்தை விட, நோயாளிகளின் நலனையே அவர் எப்போதும் முன்னிலைப்படுத்தினார்.

முடிவுரை

சேவை மனப்பான்மைக் கொண்ட டாக்டர் பத்மாவதி தனது வாழ்நாளை மக்கள் நலனுக்காக அர்ப்பணித்து, இந்தியாவில் இதயநோய் சிகிச்சைத் துறையை நிறுவி பெரும் சாதனை படைத்தவர் . தனது கல்வியையும், திறமையையும் விரிவுபடுத்த உலக நாடுகளைச் சுற்றிய பின், இந்தியாவுக்கு திரும்பி சுகாதாரத் துறையில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளைச் செய்தார்.

மக்களுக்குச் சேவை செய்யும் எண்ணத்துடன் வாழ்க்கையை வாழ்ந்த அவர், இன்றைய இளம் மருத்துவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார். அவரது வாழ்க்கை, வருங்கால மருத்துவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை!

விலகிக் கொள்வதை விட
விலக்கப் படுதல்
வேண்டுமெனக்கு.

நகத்தின்
கீறலை விட
கத்தியின் கீறல்
வேண்டுமெனக்கு.

மெல்ல நகர்வதை விட
தூக்கியெறியப்பட வேண்டுமெனக்கு.

நானே விழுவதை விட
தள்ளிவிடும் கரங்கள் வேண்டுமெனக்கு.

பேரன்பை நீட்டி
வெட்டுப்பட்ட கரங்களுக்கு
இது எல்லாமே வேண்டும்
தன்மானக் காரியாகவேயிருக்க.

ஒன்றும்
குறை இல்லை.

உங்களுக்கு
நான் ஆணவக்காரியாகவே
இருந்து விட்டுப்
போகிறேன்!

ஸ்ரீவாரி மஞ்சு

நாம் சந்திக்து
வெகு நாட்கள்
ஆனதாய்
வருத்தப்படுகிறாய்
அது குறித்து
நான்
கவலை ஏதுமற்று
இருப்பதாய்
என்மீது கோபம் கொள்கிறாய்
நினைவு கொள்வதே
ஒரு வகையில்
சந்திப்புதானே நேயா!

– வர்த்தினி பர்வதா

சம்மட்டி அடி!

பா வெற்றிக்குமரன்
வேலூர்

ராகவியும், வசந்தனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பள்ளிப்படிப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை ஒன்றாகவே இணைந்து, ஒரே வகுப்பில் கல்விக் கற்கின்ற வாய்ப்பையும் பெற்றவர்கள்.

ராகவியின் வீட்டுக்கு வசந்தனும், வசந்தனின் வீட்டுக்கு ராகவியும் தத்தம் மனத்தில் எவ்வித அச்ச உணர்வும் இன்றிச் சென்று நட்பை வளர்க்கக் கூடிய சுதந்திரத்தை, இரு வீட்டாரின் பெற்றோரும் அவர்களுக்கு வழங்கி இருந்தனர்.

எதிர் பாலர் என்னும் நிலையை மறந்து இருவரும் கைக்கொண்டு வந்த நட்பைக் கண்டு, அந்த ஊரில் வியக்காதவர்களே இல்லை என்றே கூறலாம் ! இருவரின் நட்பையும் கொச்சைப்படுத்திச் சிலர் பொய்மை நாடகத்தைச் சித்தரித்தாலும் ராகவியும் ,வசந்தனும் மட்டுமல்ல, அவர்களின் பெற்றோரும் எள்ளளவும் அதனைக் கண்டுகொள்ளவில்லை...

ஆண்டுகள் பல ஆடி அசைந்து செல்ல, வாண்டுகள் வளர்ந்து வாலிபர்களாயினர். வசந்தன் கிராம நிர்வாக அலுவலருக்கானப் போட்டித் தேர்வில் வெற்றிபெற்று, தம்முடைய கிராமத்துக்கு அருகிலுள்ள கிராமத்துக்கு நிர்வாக அலுவலராகப் பொறுப்பேற்றான்...

ராகவி எந்தப் பணிக்கும் அனுப்பப் படாவிட்டாலும், தீயணைப்புத் துறையில் பணியாற்றும் ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். வசந்தனின் விருப்பத்திற்கு ஏற்ப வரன் அமையாததால், வளர்த்தவர்கள் வருந்தும் அளவுக்கு வருடங்கள் ஓடிக் கொண்டிருந்தன. ராகவியின் இல்லறம், தீங்கனிச் சுவையாய் இனிமையாய்ச் சென்றது!

இரண்டு நட்புப் புறாக்களும், இளம்பருவத்தில் அளவளாவியதைப் போலத் தற்போதும்

அணுக்கமாய்ப் பழகாவிட்டாலும், அவ்வவப்போது அலைபேசியின் வழியாக எழும் எண்ணங்களையும், தங்களின் தற்போதைய அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வர்.

இப்படி இருக்க ஒரு நாள் வசந்தன், ராகவியிடம் தொடர்பு கொண்டு பேசும்போது, அவளால் இந்தச் செய்தியை அவனிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அஃது, தன்னுடைய கணவனைப் பற்றியதே ஆகும்.

''அவர் முன்பு போல தற்சமயம் இல்லை, அதிகமாக மது அருந்துகிறார், நட்பு வட்டாரமும் சரியில்லை, வீட்டுக்கும் வாரம் ஒரு முறையே வந்து போகிறார். ஆண் ஒன்று, பெண் ஒன்றுமாக இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு நான் இம்சைப்படுகிறேன்" என்று, கண்ணீர் சிந்திக் கவலையுடன் உரைக்க மிகுந்த வருத்தமுற்றான் வசந்தன்!

தன்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தச் செய்தியைக் கேட்டதற்குப் பின்பு, இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை ராகவியை அலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் படுத்தினான் வசந்தன். பின்பு, ஆறுதல் ஒருவகைப் பற்றாக மாறியது! அதுவும் முதிர்ந்து, அவள்மீது காதலாகக் கனிந்தது! 'இது சரியா? தவறா?' என்றுகூட அவனுக்குக் தெரியவில்லை. ஒரு கட்டத்தில் யாருக்கும் தெரியாமல், ராகவியை மறுமணம் செய்துகொள்ளவும் வசந்தன் துணிந்தான்...

ஒரு நாள் தாய் வீட்டில் நடைபெற்ற சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக, வருகை தந்த ராகவியை எதேச்சையாகச் சந்தித்தான் அவன். அப்போது,

''உன்னிடம் நான் தனியாகப் பேச வேண்டும். கோவிலுக்கு அருகில் உள்ள மண்டபத்திற்குக் கொஞ்ச நேரம் வந்து போகிறாயா?"என்று அவளை அழைத்தான் வசந்தன். ''சரி வருகிறேன்" என்று, சம்மதித்தாள் ராகவி.

தன் மனதில் உள்ள எண்ணத்தைப் பட்டென்று அவளிடம் போட்டு உடைத்தான் அவன்.

''வேதனைப் படாதே ராகவி! நீ உன் நிலையைச் சொன்னதிலிருந்து நான் மிகவும் கஷ்டப்பட்டேன், அதனால் தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.. உன்னை மறுமணம் செய்து கொள்ள நான் விரும்புகின்றேன். ஆனால் என்னுடைய இந்த முடிவு, உன்னுடைய சம்மதத்திற்குப் பின்பே நிறைவேறும். இது மட்டும் உறுதி, உண்மை.

உன்னை எந்தக் கட்டத்திலும், நான் வற்புறுத்த மாட்டேன்! என்ன சொல்கிறாய்? யோசித்து நல்ல முடிவாய்ச் சொல். என் பெற்றோரை நான் சம்மதிக்க வைக்கிறேன். உனக்காகத்தான் எனது கல்யாணம், இவ்வளவு காலம் இழுத்துக்கொண்டு போனதோ எனக்கு? என்று எண்ணத் தோன்றுகிறது." என்று வசந்தன் உரைக்க, மிகவும் பக்குவப் பட்டவளாய் ராகவி தன்னுடைய பதிலை உரைத்தாள்.....

''உன்னுடைய இரக்கத்திற்கு ரொம்ப நன்றி வசந்த். பழக்க தோஷத்தில நீ கேட்டிருக்கலாம். பரவாயில்ல. ஆனால், உன் முடிவுக்கு என்னால் ஒருபோதும் உடன்பட முடியாது! உன்னிடம் என்னுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது உத்தமமானது. உடம்பைப் பகிர்ந்து கொண்டால் அது சரியாக இருக்காது!

ஏற்கனவே என் மீதுள்ள வெறுப்பின் காரணமாக என் கணவர், என்னை அடிக்கடி, ''தேவடியா... தேவடியா..." என்று வசைபாடுவார். தவிர, உன் சொல்படி நான்

கேட்பேனானால், அவர் பொய்யாகச் சொன்னது மெய்யாகிவிடும் அல்லவா!

முன் ஜென்மத்துல நான் செய்த பாவமோ என்னமோ தெரியல. எங்க அப்பா, அம்மா நினைச்ச மாதிரியும், நான் நினைச்ச மாதிரியும் எனக்கு வாழ்க்கை அமையல, என்னுடைய வாழ்க்கை திசைமாறிப் போகலாம். ஆனால், நான் பாதை மாறிப் போகக்கூடாது வசந்த்!.

உன்னுடைய பரிதாபம் பாராட்டுக்குரியது தான், ஆனால், நான் பாழாய்ப்போன இந்தச் சமுதாயத்தின் பரிகாசத்துக்குப் பயப்பட்டே ஆகணும்.

என்னுடைய பிள்ளைகளுக்கு, நான் ஒரு முன்மாதிரியாக வாழ விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய நட்பு என்றைக்கும் குற்றமற்ற நட்பாகவே இருக்கணும். அதில் களங்கத்தின் கைபட்டால் தப்பாகிப் போய்விடும் தானே!

நாம என்றைக்கும் நல்ல நண்பர்களாகவே இருக்கலாம்! ரொம்ப நேரம் ஆயிடுச்சு. பசங்க என்னைத் தேடுவாங்க, நான் கிளம்புறேன் வசந்த்" என்று ராகவி, நன்மை தீமைகளை நன்கு விளக்கி அவனுக்குத் தக்க பதில் கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள். மேற்கொண்டு எதனையும் பேச முடியாதவனாய், தாம்பத்தியத்தின் தத்துவத்திற்கும், தாய்மையின் மகத்துவத்திற்கும் தலைவணங்கி அவ்விடத்திலேயே மௌனமாய் உறைந்து போய் நின்றான் வசந்தன்...

வாழ்க்கையில் வழுக்கி விழுந்த வஞ்சியர்கள், தாங்கள் அழைத்துச் செல்லும் வழிக்கு வந்து விடுவார்கள் என்று தவறாக நினைக்கும் ஆண்களுக்கு, ராகவியின் முடிவு ஒரு சரியான சம்மட்டி அடியாகும்! பெண்கள் எப்போதும் கிள்ளுக்கீரை அல்லர்! அவர்கள் எப்போதும் நெறி மாறாத கீதை தான் என்று, இந்தச் சமுதாயம் கருத வேண்டும்!

மனைவி எழுதும் மடல்

என் முன் நெற்றியில்
முடியை வெட்டி விட்ட சமயத்தில்
முன் வாசலில்
பூக்களை இழுத்துப் பறித்து
நான் விளையாடிய வேளையில்
மூங்கில் வேலி தடுப்புக்கு அருகே
குதிரையோடு விளையாடிக்கொண்டே
நீ வந்தாய்

என் அருகில் வந்தும்
நீல மலர் பறித்து விளையாடினாய்
பின்பு நாம்
சோ கான் கிராமத்திற்கு
வாழப் போனோம்

வெறுப்பும் சந்தேகமும் இல்லாமல்
இரண்டு குட்டி மனிதர்கள்

என் கடவுளே!
உங்களை
என் பதினான்காவது வயதில்
மணந்தேன்
வெட்கத்தால் நான் சிரித்தது இல்லை
தலைகுனிந்து இருப்பேன்
சுவரை மட்டும் பார்த்தேன்
ஆயிரம் முறை அழைத்தாலும்
நான் திரும்பிப் பார்த்தது கிடையாது

பதினைந்து வயதில்
என் கோபத்தை நிறுத்தினேன்
என் அழுக்கு
உங்கள் அழுக்குடன் கலந்தது

எப்போதும் எப்போதும்
எப்போதுமாக
நான் ஏன் அதை
அடிக்கடி நினைத்துப் பார்க்கிறேன்?

பதினாறு வயதில்/ என்னைப் பிரிந்தீர்கள்
நீர்ச்சுழல் நிறைந்த நதிக்கு அருகே
தொலைதூர கு-தோ-என்* பகுதிக்குப் போனீர்கள்

ஐந்து மாதங்கள் ஆகிவிட்டன
குரங்குகள் இங்கு சோகமாகக் கத்துகின்றன

நீங்கள் வெளியேறிய கதவில்
இப்போது பாசி படர்ந்து விட்டது
பலவகை பாசி
ஆழமாய்
உயரமாய்
சுத்தப் படுத்த இயலாத அளவுக்கு பாசி

இந்த இலையுதிர் காலத்தில்
இலைகள்
விரைவாகக்
காற்றில் உதிர்கின்றன

ஜோடி பட்டாம்பூச்சிகள்
ஆவணி மாதத்திலேயே
மஞ்சள் ஆகிவிட்டன

மேற்குத் தோட்டத்தின் புற்கள்
என்னை உறுத்துகின்றன
எனக்கு வயதாகிறது
கியங் நதியின் வழியாக
நீ வந்தால்
தயவாக, முன்கூட்டியே
எனக்குத் தெரிவித்து விடு

உன்னைச் சந்திக்க
நான் வெளியே வருவேன்

சீன மொழியில் – எர்னஸ்ட ஃபென்னா லோ சா
ஆங்கிலத்தில் – எஸ்ரா பவுண்ட
தமிழில் – செ. ராஜேஸ்வரி

பின் குறிப்பு:
கு-தோ-என் – சீனாவில் உள்ள ஒரு நதியின் பெயர்.
அதைச் சுற்றி உள்ள பகுதியும் இதே பெயரால்
வழங்கப்படுகிறது

“கொற்றவைத் திருநாள்"

மா.மாரிராஜன்
சோழர் ஆய்வு மையம், காரைக்கால்

தமிழர்களின் பழந்தெய்வமாக அறியப்படும் பழையோள் என்று இலக்கியங்கள் குறிப்பிடும் கொற்றவை.பாலை நிலத் தெய்வமாக அறியப்பட்டாலும் அனைத்து தினைமக்களின் வெற்றிக் கடவுளாய் கொற்றவை போற்றப்படுகிறார். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கொற்றவை நிலை சுட்டப்படுகிறது.

“மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே’’

போருக்குச் செல்லும் வீரர்கள் வெற்றிக்காக கொற்றவையை வணங்கிச் செல்லும் நிலையே கொற்றவை நிலை என தொல்காப்பியர் வரையறை செய்கிறார்.

அடர்ந்த காட்டில் உறைபவள் என்று அகநானூறு கூறுகிறது. “ ஓங்கு புகழ் கானமர் செல்வி "குறுந்தொகை கொற்றவையை “ விரல் கெழு சூலி" என்றும் கலித்தொகை கொற்றவையை “ பெருங்காட்டு கொற்றவை " என்றும் பரிபாடல் “ நெற்றி விழியா நிறைத்திலகம் இட்டாளே கொற்றவை கோலங்கொண்டு " என்றும் மேலும் பல இலக்கியப் பாடல்கள் கொற்றவையின் புகழ் பாடுகிறது.

சிலப்பதிகாரத்தில் கொற்றவைக் குறித்து ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.. மதுரைக்கு வந்த கண்ணகியும் கோவலனும் முதலில் தங்குவதே ஒரு கொற்றவை

கோவிலில்தான்.“விழிநுதற் குமரி, விண்ணோர் பாவை,மையறு சிறப்பின் வான நாடி ஐயை தன் கோட்டம் அடைந்தனர் ஆங்கு - என் " கொற்றவையின் தோற்றம், வழிபாடு,பெருமை, சிறப்பு. என்று சிலப்பதிகாரம் நீண்ட பட்டியல் தருகிறது..



மறவர்கள் வில்லேந்தி போருக்குச் செல்லும்போது அவர்களுக்கு வெற்றியைக் கொடுப்பவள் கொற்றவை. மறவர்கள் தரும் அவிப்பலியை ஏற்பவள். பிறை சூடியவள், நெற்றிக் கண், பவள வாய், முத்துப் போன்ற சிரிப்பு, நஞ்சுண்டு கறுத்த கழுத்து, பாம்பைக்கொண்ட மார்புக்கச்சு, வளைகள் அணிந்த கையில் சூலம், புலித்தோல் இடையாடை, இடப்புற காலில் சிலம்பு, வலப்புறக் காலில் கழல், கலைமானை ஊர்த்தியாக கொண்டவள், வெற்றி கொடுக்கும் வாள் ஏந்திய கை, எருமைத்தலையின் மேல் நிற்பவள், அனைவரும் வணங்கும் குமரி. இவ்வாறாக கொற்றவையின் நிலை குறித்து சிலம்பு கூறுகிறது.

மேலும் சிலப்பதிகாரம் கொற்றவையின் பல்வேறு பெயர்களை பட்டியல் இடுகிறது.. கலையமர் செல்வி, நீலி, அணங்கு, கொற்றவை, பாகம் ஆளுடையாள், அமரி, குமரி, கவுரி, சூலி, ஐயை, கண்ணுதல் திங்கள் வாழ்சடையாள், திருவமாற் கிளையாள். இவ்வாறான பெயர்களும் கொற்றவவைக்குரியதே.

புறப் பொருள் வெண்பாமாலையும் கொற்றவையான் தோற்றத்தைக் கூறும்..சிங்கக் கொடியும் பசுங்கிளியும் ஏந்தியவள். கலைமானை ஊர்தியாகக் கொண்டு வெற்றி தரும் சூலத்தை உடையவள். இவ்வாறாக கொற்றவை வழிபாடு பழங்காலம் தொட்டே தமிழர்களின் பாரம்பரியமாக இருந்தது..

கொற்றவை நாள் என்பது வெற்றித் திருநாளாகும்.

சிந்து சமவெளியில் கலை மானும் கொற்றவையும்

தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அத்தியாயம்-5

என்னபதில் சொல்வதென்றே தெரியாமல் ஒருவித பட படப்பும் உள்ளுக்குள் பொங்கிவரும் துக்கமும் ஒன்று கூடி பதுமை போலாக்கின. பதில் பேசாமல் நிற்கும் நந்தினியைக் கண்ட ப்ரின்ஸ்பால் சகுந்தலாதேவி மிகவும் அன்புடன் பேசத் தொடங்கி, நந்தினீ! இதென்னம்மா மவுனம்: ஏன் கண்ணீர் விடுகிறாய்! நேற்றுகூட யாரோ ஒருவர் உன்னுடைய நாடகத் தைக் கேட்டபோது சந்தோஷமாக இசைந் தாயே ! இப் போது ஏன் பதிலே சொல்லவில்லை? இந்தக் கடிதம் எழுதி யிருப்பவர் உனக்குத் தெரியுமா! என்று அன்புடன் கேட்டாள்.

நந்தினி ஒரு திறமைவாய்ந்த ப்ரகாசமான புத்திசாலி யான மாணவி என்பதுமட்டும் தெரியுமேயன்றி அவளுடைய வாழ்க்கைவரலாறு தெரிவதற்கு அவகாசமும் இல்லை; ப்ரமேய மும் இல்லை. ஆதலால்தான் வைத்யநாதனின் கடிதத்தையும் நந்தினியிடம் கொடுத்து பர்மிஷன்கொடுக்கிறாயா! என்று கேட் டாள். இந்த நாடகம் நடந்த பிறகு பல பள்ளிக்கூடங்களிலி ருந்தும் காலேஜ்களிலிருந்தும் இந்த நாடகம் தங்களுக்கு வேணும் என்றும், கன்றுயிருந்ததைப்பாராட்டியும் பலபேர் கடிதம் எழுதியிருந் தார்கள். இதை நந்தினிக்குக் காட்டி சகுந்தலாதேவி மகிழ்வாள். அதேபோல்தான் வைத்யநாத னின் கடிதத்தையும் காட்டினாள்.

நந்தினிக்குக்கல்யாணமாகிசிலமாதங்கள்வரையில்வைத்தியிடமிருந்துஅன்புக்கடிதங்கள், ப்ரேமை நிறைந்த மலர்வாசகங்கள் ததும்பும் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. நந்தினியும் அதற்குப்பதில் எழுதிவந்தாள். ஆகையால் வைத் தியநாதனின் கடிதத்தைப் பார்த்ததும் பழையநினைவுகள்அலைபோல்இதயத்தில்மோத,குபீரென்றுகண்ணீர்வழிந்துதடைகட்டிய நாகம்போல் நிற்கச் செய்துவிட்டதன் மர்மம் சகுந்தலாதேவிக்கு எப்படித் தெரியும் ?

தன்னைப்பற்றிபிரின்ஸ்பால்என்னநினைப்பாளோ?தான்ஹாஸ்டலில்இருப்பவளாதலால் தப்பபிப்ராயமாக நினைத்து விட்டால் என்னசெய்வது என்ற பயமும் நந்தினிக்குத் தோன் றியதால், "தாயே! இக்கடிதம் எழுதியவர் வேறுயாருமில்லை. ன் னுடைய கணவர்தான்; பெயரை மறைத்துக்கொண்டு வைத்யநாதன் என்பதற்குப் பதில் வை வைதீச்வரன் என்று

எழுதியிருக்கிறார். அந்த எழுத்தைப் பார்த்ததுமே எனக்குப் பழைய நினைவுகள் வந்துவிட்டது. அதனால்...

சகுந்தலா இடைமறித்து, என்ன!என்ன!இவர் உன் கண வரா! கணவர் எழுதியிருந்தால் அதற்குச் சந்தோஷப்பட வேண்டுமேயன்றி துக்கப்படுவானேன்! உனக்கு விவாகமாகி இருப்பதுமட்டும் உன் பெயருடன் வைத்யநாதன் என்று சேர்ந்திருப்பதால் தெரியுமேயன்றி மற்ற விஷயம் தெரியாது. நந்தினி! உன் கணவர் ஏன்.....?

நந்:-தாயே! அதை மிகச் சுருக்கமாகச் சொல்லவேண்டு மானால், இந்த வரதக்ஷிணை நாடகத்தின் முக்ய ஸாராம்சம் பூராவும் என் சுய சரிதைதான். அதையே நான் கற்பனை யுடன் சேர்த்து எழுதி என்னாத்திரம் தீர நடித்தேன்.இதற்கு பத்ரிகையில் இத்தனை ப்ரதானம்கொடுத்துப் போடுவார்கள். என்று நான் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை. ஏதோ காலேஜ் ஹாலுடன் இது மறைந்துவிடும் என்று எதிர்பார்த்தேன்...

சகுந்த:- நந்தினீ ! வரதக்ஷிணைக் கொடுமைக்காகவா உன்னைத் தள்ளியிருக்கிறார்கள். உன் கணவனும் கூடவே உடந்தையா! அல்லது மாமனார் மாமியார் மட்டுந்தானோ?... அதான் உன்னுடையநடிப்புஉச்சஸ்தாயியில் நிர்த்தனம் செய் து காண்போர் உள்ளங்களைத் துளாவி உணர்ச்சிவயப்படுத்தி விட்டது...நந்தினீ; இதற்காகவா நீ அழுகிறாய்,அசடே; இது வும் உனக்கு ஒரு நல்லதற்குத்தான் என்றுநினைத்துக்கொள்ளு. இதே நாடகத்தின் தகவல்பூராவும் உன் கணவன் பத்திரிகை யில் படித்திருப்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. அதனால் இக்கதையைக் கேட்டிருக்கிறான். நீ இதற்கு உத்திரவு கொடுத்து விடு; நான் உன் கணவன்தான் அவன் என்பதை யறியாதவள் போல் சுடச்சுட ஒருபொதுவான கடிதமும் எழுதி அ னுப்பிவிடுகிறேன். அந்த நாடகத்தை அவன் காலேஜில் நடிக்கட்டும். அந்த விஷயம் உன் மாமனாருக்குத் தெரிந்து மனம் குழம்பி வெட்கித்தலை குனியட்டும்! பிறகாவது உனக்கு விமோசனம் உண்டாகுமல்லவா!...

நந்தி:- அம்மணீ! நீங்கள் சொல்கிறபடி நன்மைகள் எது வும் உண்டாகாது. இந்தக்கதையை நான் எழுதியது குற்றம், நடித்தது பெருங் குற்றம், இதுபோல் பல குற்றங்களைக்கண்டு பிடித்துப் பின்னும் வேதனைக்கு இலக்காக்கி என்னை வருத்து வார்கள் என்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால், தன் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு ஏன் இவர் கடிதமெழுத வேண்டும்? அதனால் உள்ளுக்குள் ஏதோவிஷயத்தை மறைத்து எழுதியிருக்கிறார். அவருக்கு நாடகத்தை அனுப்பாமலேயே இருந்துவிட்டால் என்ன என்று கூட நினைக்கிறேன்...

சகு:- சேச்சே! அது சரியில்லை நந்தினீ! நாம் இன்னும் எத்தனையோ பேர்களுக்கு அனுப்ப இசைந் திருப்பதுபோல் இவருக்கும் அனுப்புவது தான் சரி; இதற்குமேல் என்ன நடக் கிறதோ பார்க்கலாமே! ஏன் உனக்கு இஷ்டமில்லையா?

நந்தி:- தாயே! என்னை இரும்புள்ளத்துடன் விலக்கி வேடிக்கைப்பார்க்கும் அவருக்கு நான் ஆகாது என்றபோது என்னுடைய நாடகம் மட்டும் ஆகுமா! அதைத்தான் நான் நினைக்கிறேன். எனக்குக் கடிதத்தின் விஷயம் சந்தேகமாகவே இருக்கிறது. என்னை என்ன தொல்லைகள் ஆட்டி வைத்தாலும் வைக்கட்டும். என் பெற்றோர்களுடைய உள்ளமும் உடலும்

சல்லடைக்கண்ணாகத் துளைத்து ரணமாகிக் கிடக்கிற பரிதாபம் போதும்! இதைக்கொண்டு அவர்களையொன்றும் செய்யாதிருக் தால்போதும்; அதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது.

சகு:- உன்னைப்பற்றி ஒரு சிறிது விஷயம் தெரிந்த பிறகு மேலும் அறிய ஆவலாக இருக்கிறது, உன்னுடன் பிறந்தவர்கள் எத்தனைபேர்கள்! உன் பிதாவுக்கு என்ன உத்யோகம்.....

நந்தி:- அம்மணீ! 5 பெண்பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்! என்பது பழமொழி. அரசனே ஆண்டியாகும்படி யான நிலைமை வந்துவிடுமெனின், சாதாரண மனிதனுக்குப் பிறந்துவிட்டால் என்ன செய்வது சொல்லுங்கள். என் சகோதரிகளுக்குக் கல்யாணத்தைச் செய்ததில் முக்கால்ஏழை யான என்பிதா நான்கு பிள்ளைகளைப் படிக்க வைத்ததிலும் என் விவாகத்தைச் செய்ததிலும்முழு ஏழையாய்-ஏன்கடன் கார ராய், மதிப்பற்ற மனிதராய் ஆகிவிட்டார். சொல்பசெல்வமும் கரைந்தது- ஏதோ உத்யோகமும் சிறியது தான். வருவாயிக்கு மிஞ்சிய பெரிய செலவு-... இது துவெல்லாம் போதாமல் அவரு டன் கூடப் பிறந்த சகோதரிகளின் தொல்லை வேறு. உம்... இவைகளைச் சொல்லிக்கொண்டு போனால் முடிவே இல்லை! என் புக்ககத்தினர் செய்த கலாட்டாவில் எப்படியாவது மூவாயி ரம் ரூபாயைச்சேகரித்துக்கொடுத்து என்னை அனுப்பிவைப்ப தற்காக என் பிதா தன் மதிப்பு மரியாதை, முதலியவைகளை விட்டுவிட்டு என் சகோதரிகளிடம் போய் மனம் கூசியபடி உதவி கோரினார்.

என்னே உல்கம்! என் பிதாவே ஆதியில் கல்லமுறையில் இருக்கையில் செய்து போட்ட நகைகளையாவதுகொடுத்துதவ வேண்டும்; ஒரு பெண்ணின்வாழ்வுமலர்வாடிஉதிர்ந்துபோகி றது; அதைப் பரிமளம் மிக்க மலராக்கவேண்டும்! என்று கேட் டாராம். அக்காவின் புருஷர்கள் மறுப்பது சகஜம். அக்காவே மறுத்துவிட்டதோடு, இந்த நிலைமையில் இந்த நகைகளை நீ எப்படியப்பா மீட்டுக்கொடுக்கமுடியும்,இனி வயதான நிலைமை யில் உங்களால் எப்படியப்பா சமாளிக்க ஆகும். பேசாமலிருந் தால் கொஞ்சநாள் போனால் தானே வந்து கூப்பிடுவார்கள். நீங்கள் வீணாகக் கவலைப்படாதீர்கள்! என்று சொல்லிவிட்டார் களாம். உடன் பிறந்த தங்கையின் வாழ்வைவிட அவர்களு டைய தங்க நகைகள் தான் ப்ரதானமாகத் தோன்றியது...

சகு:–அடாடா! இப்படியா சொன்னார்கள்! கேட்கக்கதை போலிருக்கிறதே! என்னுடைய மாமன் பெண்ணுக்குக் கல் யாணம் செய்ய கையில் பணமில்லாது தவிப்பதைக் கண்டு நான் ஆயிரம் ரூபாயைக் கொடுத்துக்கல்யாணம் செய்யும்படிக் குச் சொன்னேன்....

நந்:- தாயே! உலகத்தில் நூற்றுக்குத் தொண்ணூற் றொன்பது பேருக்கு கடும்பாறையைப்போன்ற உள்ளந் தரனி ருக்கிறது; தயாளகுணம் எங்கோ ஒரு சிலரிடம் தான் காணப் படுகிறது; அந்த முறையில் தாங்கள் ஒருவர்... என் சகோதரி யின் புருஷன், '''அந்த மாப்பிள்ளைக்குப் புதிதாகக் கொடுப்ப தற்காக இந்த மாப்பிள்ளைகளுக்குக் கொடுத்ததை வாங்கிக் கொண்டுபோக வந்தீர்களா! ஏதோ செய்ததுபோதும் என்று பயித்தியக்காரத்தனமாக நாங்கள் இருந்ததுபோல் யாரிருப் பார்கள்?'' என்று தாங்கள் கூட சமயம் வந்தால் கேட்கலாம் என்கிற நிலைமையில் இருப்பவர்கள் என்பதை விளக்கிப் பேசி என் தந்தையின்மனத்தை

அளிந்த புண்ணாக்கிவிட்டார்கள்: என்னுடைய க்ஷமத்தைக் கோரி தன்னுடைய பந்துக்கள் ஒவ்வொருவரிடமும் போய்க் கேட்டுவிட்டார். இம்மாதிரி யாரிட மும் போகவேண்டாம் என்று நான் எத்தனையோ சொல்லியும் கேட்காமல் அவமானப்பட்டு மனங்குமுறிவிட்ட பிறகு தான் என் வேண்டுகோளின்படி இங்குக் கொண்டு சேர்த்தார்.

சகு:-ஐயோ பாவம்! எப்படியாவது உன்னை வாழவைக் கப்பாடுபட்டுப்பார்த்துவிட்டார்... போகட்டும். உனக்கும் ஒன் றும் முழுகிப்போகவில்லை. நீ படித்து முடித்ததும் நானே சிபார்சு செய்து நல்ல வேலைவாங்கித்தருகிறேன். நீ உன் பெற் றோரைக் காப்பாற்றலாம். இக்கடிதத்திற்கு என்ன பதில்எழுது வது சொல்லு.

நந்:-அம்மணீ! என்னை மன்னிக்கவேண்டுகிறேன். நந் தினி கொடுக்கமறுக்கிறாள் என்றே எழுதிவிடுங்கள். உங்களுக்கே இன்னும் எப்படிதோன்றுகிறதோ அப்படி எழுதுங்கள்

சகு:- நந்தினி! இந்த விஷயத்தில் நான் உன்னுடைய க்ஷமத்தைக் கோரியும் உன் காலேஜ் ப்ரின்ஸ்பால் என்கிற முறையிலும் சொல்கிறேன்: இந்த சமயம் இதையனுப்புவது தான் நல்லது என்று தோன்றுவதால் நான் உறுதியாகச் சொல்கிறேன். இதை அனுப்புவதுதான் உசிதம்; நீ மறுக்காதே.

நந்:- தாயே! அப்படியானால் இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள்; இதை என் கை எழுத்தினாலேயே பூராவும் எழு தித்தருகிறேன். அனுப்பிவிடுங்கள். கடவுள் விட்டவழியாகட் டும், என்றாள். அதற்கு ஒப்புக்கொண்ட சகுந் தலர நந்தினியை தேற்றியும் தட்டிக் கொடுத்தும் சமாதானப்படுத்தினாள். அவளையறியாத ஒரு பெருமூச்சு வந்தது.

நீத்தோனா சம்பாஷனா

నీతో నా సంభాషణా

రెండు మూడు
స్వరాలూ
పలికి
ఒక యుగం ధాటి
వెళ్ళేవాడిని

ఒక స్వరాన్ని కూడా
దాటలేని నేను
పాడవెక్కి ఏంటి

– முனைவர் கிங்ஸ்டன்

- தெலுங்கில் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 'உன்னோடு உரையாடுதல்' முனைவர் கிங்ஸ்டன் ஜெகநாதனின் மொழிபெயர்ப்பு

உலகின் முதல் பெண் சதரூபை

இரா. சைலஜா சக்தி,
சென்னை

நைமிசாரண்யம் என்பது உத்தரப்பிரதேச மாநிலத்தின் சீதாப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஒருமுறை ரிஷிகள் சத்திர வேள்வி என்கிற யாகத்தை நடத்த விரும்பினர். இது 12 ஆண்டுகளாக நடைபெறும். இந்த வேள்வி நடத்த உரிய இடம் எதுவென பிரம்மனிடம் கேட்டனர். பிரம்மன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து அதை வளையம் போன்று வளைத்து உருட்டி விட்டார். அந்த வளையம் பூமியில் எங்கு விழுகிறதோ, அதுவே வேள்வி செய்ய உகந்த இடம் என்றார். தர்ப்பை வளையம் பூமியில் கோமதி ஆற்றங்கரையில் உள்ள வனத்தில் விழுந்தது. அந்த வனத்தில் ரிஷிகள் வேள்வியை நடத்தினர். வனத்திற்கு ஆரண்யம் என்று பெயர். நேமி என்றால் சக்கரம். தர்ப்பை வளையம் சக்கரம்போல் உருண்டோடி விழுந்ததால் அந்த வனம் நேமிச ஆரண்யம் என்று அழைக்கப்பட்டது. நாளடைவில் அது நைமிசாரண்யம் என்று மாறிவிட்டது.

ஸ்வயாம்பு மனு, சதரூபை இருவரும் பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்ட முதல் மனிதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களிடமிருந்தே பூமியில் உயிர்களின் உற்பத்தி தொடங்கியதாக கருதப்படுகிறது. இவர்கள் பிரம்மனின் மனதில் இருந்து தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்றும் உடலில் இருந்து தோற்றுவிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. பெற்றோர் இன்றி பிரம்மனால் உருவாக்கப்பட்ட ஆண் ஸ்வயாம்பு மனு என்று அழைக்கப்பட்டார். பிரம்மனால் உருவாக்கப்பட்ட பெண் நூறு அழகான வடிவங்களை எடுக்கும் வல்லமை உடைய பெண்ணாக இருந்தாள். சதம் என்றால் நூறு. ரூபம் என்றால் வடிவம். அதனால் நூறு அழகான வடிவம் எடுக்கும் பெண் சதரூபை என்று அழைக்கப்பட்டாள்.

ஸ்வயாம்பு மனுவும், சதரூபையும் உலகில் உயிர்களை உருவாக்கி ஆட்சி செய்து வந்தனர். இவர்களைப் பற்றி புராணங்களில் பல்வேறு கதைகள்

உள்ளன. அவை அனைத்தில் கூறப்படும் பொதுவான விஷயம் அவர்கள் புரிந்த கடுமையான தவம்.

ஸ்வயாம்பு மனுவும், சதரூபையும் தனது மகனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு நைமிசாரண்யத்திற்கு வந்தனர். அங்கு அவர்கள் கடுமையான தவம் மேற்கொண்டனர். முதலில் காய்கறிகளையும், பழங்களையும் உட்கொண்டு தவமிருந்தனர். பின் அவற்றைத் தவிர்த்து நீரை மட்டும் அருந்தினர். அதன் பிறகு நீரையும் தவிர்த்து விட்டு வெறும் காற்றை மட்டுமே சுவாசித்து தவம் செய்தனர். உடல் மெலிந்து எலும்புக்கூடுகள் போல் ஆயினர். ஆனாலும் தவத்தை கைவிடவில்லை. பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களின் தவம் தொடர்ந்தது.

ஒரு நாள் விஷ்ணு பகவான் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார். இறைவனின் தெய்வீக வடிவில் மயங்கிய மனுவும், சதரூபையும் அவரின் பாதத்தில் விழுந்தனர். விஷ்ணு பகவான் அவர்களிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். மனுவும், சதரூபையும் உங்களைப் போன்ற ஒரு மகன் வேண்டும் என்று கேட்டனர்.

அதற்கு விஷ்ணு பகவான் "நீங்கள் புரிந்த கடும் தவத்தின் பலனாக நானே உங்களுக்கு மகனாக பிறப்பேன். மனுவை நோக்கி "எதிர்காலத்தில் நீங்கள் தசரதனாகப் பிறந்து அயோத்தியை ஆட்சி செய்வீர்கள். சதரூபை கோசல மன்னனின் மகளாகப் பிறந்து உங்களை மணம் புரிவாள். நான் உங்கள் இருவருக்கும் மகனாக ராமன் என்ற பெயரில் அவதரிப்பேன்" என்றார். அந்த வரத்தின்படி முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாக மன்னர் ஸ்வயாம்பு மனு தசரதனாகவும், ராணி சதரூபை கௌசல்யாவாகவும் பிறந்து விஷ்ணு பகவானையே தங்களது மகன் ஸ்ரீ ராமனாகப் பெற்றனர்.

புராணங்களில் பல "மனு"க்கள் தோன்றியுள்ளனர். அவர்களில் முதலில் தோன்றியவர் ஸ்வயாம்பு மனு ஆவார். மனு தர்மம், மனுஷ்ய, மனிதன் போன்ற சொற்களின் மூலம் "மனு" என்ற பெயரை உலகம் அறிந்திருக்கிறது. ஆனால் மனுவின் மனைவி சதரூபையைப் பற்றி எவருக்கும் தெரியாது. உயிர்கள் அனைத்திற்கும் தாயாக விளங்கிய பெண்ணைப் பற்றி யுகங்கள் கடந்தும் உலகின் எந்த உயிரும் அறிந்திருக்கவில்லை என்பதுதான் வருத்தமான உண்மை.

மனைவியின் செயல்!

பாரதிராஜன்
சென்னை

வேலு ஒரு ஆட்டோ ஓட்டுநர். அவன் மனைவி ராணி மார்க்கெட்டில் காய்கறிகள், பூ வியாபாரம் செய்து வந்தாள். ஒரே மகன் பாவேந்தர், ராணி அந்த காலத்து எட்டாம் வகுப்பில் முதலாவது மாணவி, அவளுக்கு பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் ரொம்ப ரொம்ப பிடிக்கும். அவள் வசித்த கிராமத்தில் உள்ள பள்ளி எட்டாம் வகுப்பு வரை மட்டுமே, மேல் கொண்டு படிக்க பக்கத்து டவுன் போக வசதியில்லை, எனவே அவளின் தந்தை கிராம வழக்கப்படி ஒரு ஆட்டோ ஓட்டுநருடன் மணமுடித்து

சென்னைக்கு வந்தாள். சென்னை புறநகரான மாடம்பாக்கத்தில் வசித்து, அவள் கணவனான வேலுவை எந்த விதமான தவறான பழக்கத்திற்கு அடிமையாகாமல் பார்த்துக் கொண்டாள். மகளிர் சுயஉதவிக்குழுவின் தலைவியாகி அந்த இடத்தில் ராணிக்கு ஒரு நல்ல பெயர் இருந்தது. ராணி தன்கணவனுக்கு ஆட்டோ மகளிர் சுய உதவிக்குழு மூலமாக வாங்கி அந்த கடனைஅடைத்து

சொந்த ஆட்டோவாக்கி னாள். மகன் பிறந்ததும், பாவேந்தர் எனப்பெயர் வைத்து அரசுப் பள்ளியில் சேர்த்து நன்கு படிக்க வைத்து, அவனை பாலிடெக்னிக் படிக்க வைத்து அவனும் தாயின்சொல்படி நடந்தான். உண்மை பேசுவது, சத்திய

வழிப்படி நடந்தான். எலக்டிரிகல் வேலையில் படு கில்லாடியானான் பாவேந்தர். வேலுவின் ஆட்டோ சரியான வழியில் சென்ற சமயத்தில் அவனின் ஆட்டோ ஸ்டாண்டில் சில தீயவர்கள் நடவடிக்கையால் மதுபழக்கத்திற்கு வேலு அடிமையாகி,ராணியை அடிப்பது, மகனை உதைப்பது, ஆட்டோ சரியாக ஒட்டுவதில்லை. நிறைய புகார்,பயணிகளுடன் சண்டை, வீண் தர்க்கம். ஆட்டோ ஸ்டாண்டில் அவப்பெயர், வகிக்கும் இடத்திலும் அவப்பெயர்.

பாவேந்தரிடமும், அவன்தந்தை யை ப்பற்றி ஏகப்பட்ட புகார். இது தவிர பயணிகளிடம் பணம் திருடுவது, பயணிகள் தவற விடும் பர்ஸ், ஹேண்ட்பேக் வேலுவின் கைவரிசையால் காணாமல் போனது.

கொட்டும் மழையில் தாம்பரத்திலிருந்து வந்த பயணியை பயமுறுத்தி தங்கசங்கிலி, வளையல் 6 போன்றவற்றை வீட்டுக்குக் கொண்டு வந்த வேலு மகனிடம் அதனை விற்க ஏற்பாடு செய்யக்கூற, மகன் விசாரிக்க, நடந்ததை தெரிவித்த வேலு, தந்தையை உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைக்க, அதற்கு ராணியும் சரி என்றதும், நகைகள் உரியவரிடம் ஒப்படைக்க, வேலுவின் தவறான செயலால் புழல் சிறை வாசம். மகனின் இந்த செயலை அனைவரும் பாராட்டினர்.

அன்பு தன்னில் செழித்திடும் வையம்

கருவொன்றில் உதித்த கதிரெனவே
கருக்கினிலே ஒளிர்ந்த கழலெனவே
ஒளிபடைத்த கண்ணினாய் வாவென்றே
களிநடைத்துக் கூவியவர் பாரதியே!

திருவொன்றிப் பிறந்த தமிழாலே
தீரத்தோடு விளித்த பாட்டாலே
உறுதி கொண்ட நெஞ்சை வாவென்றே
உறவாக்கி விளித்தவர் பாரதியே!

சொற்கூர்வாள் ஏந்தியது எழுவதற்கே!
பற்றுயர்த்தும் சுதந்திரக்தீ படர்வதற்கே!
ஆண்தெவதை உடலுயிர் வடிவிலே
அன்பையே குழைத்தவர் வாக்கிலே!

வந்தே மாதரம் என்று
நாட்டின் மீதும் அன்பு!
நாட்டு மக்களின் மீதும் அன்பு!

கண்ணம்மாவிடமும் அன்பு!
கண்ணனிடமும் அன்பு!
பெண்ணுரிமை கேட்டதும் அன்பு!
பேணும் உறவை வலுப்படுத்தவே அன்பு!

பாப்பா பாட்டும் தந்தார்!
சிறுவர் கதையும் சொன்னார்!
மோதி மிதிக்கவும்
முகத்தில் உமிழவும் சொன்னார்!

பாதகம் செய்பவன் திரும்பிப்
பாராதபடி ஓடிடவே சொன்னார்!

உள்வலி உணர்ந்தவர்தான்!
உள்ளொளியாக அதை மாற்றியதும் அவர்தான்!

அஃறிணையிலும் அன்பே கொண்டார்!
அவையிருக்கவும் அகத்தைத் தந்தார்!
காக்கை குருவி எங்கள் சாதி!
காவாது விட்டால் ஏது பூமி?

புதுச்சேரியின் வாசத்தில்தான் குயில் பாடியது!
ஆம்! பாட்டுக்குயில் பாடியது!
குயிலுக்காகப் பாடியது!
தப்பிப் பிழைத்தத்
தென்னந்தோப்புக்காகப் பாடியது!

கவிதை வாரிசாக
பாரதிதாசனையும் தந்தது!
இலக்கிய சிம்மாசனம் கிடைத்தது
இப்புதுச்சேரியில்தான்!

சித்தத்தை வசப்படுத்த சக்தியிடம் அன்பு!
ஓயாது கவிதை எழுதவே கேட்டார்!
வற்றாத கவியூற்றுக்குக் கேட்டார்!
எளிய பதம்; எளிய நடை!
எவரும் அறியவே கேட்டார்!
கவிதைக்கான ஆன்மாவாக
வாழக் கேட்டார்!
வாழ்ந்து காட்டினார்!
பா ரதமாய் வாழ்ந்தார்!
பாருக்காகவே வாழ்ந்தார்!

அன்பு தன்னில் செழித்திடும் வையம்
அதனாலே சுழலும் என்றும்
அன்பே தெய்வமாய்
அன்பின் வடிவாய்
அன்பால் உரைத்தார்!
அக இருள் நீக்கும் ஞானத்தின் வடிவாய்
அன்புக்காகவே உழைத்தார்!

சின்ன சாமி சுப்ரமணிய
பாரதி காட்டிய அன்பின் வழியது
உயிர் நிலை! உயர் நிலை!
அந்த அன்பின் எல்லைக்கு
மனிதம் என்றே பெயர்!

– மாலதி இராமலிங்கம்
,புதுச்சேரி.

ஐரோப்பாவை மயங்கச் செய்க முதல் இந்தியப் பெண் வயலின் இசைக் கலைஞர் ஃபிலோமினா ருக்மாவதி தம்புச் செட்டியார் *(Philomena Rukmaavathy Thumboochetty) (1913 – 2000)*

ராஜசேகரீ பாண்டுரெங்கன்

ஒரு எளிய புடவை அணிந்து, ஐரோப்பிய பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்திய பெண் கலைஞர்.

“இசையில் அவர் அடைந்த சாதனைகள், இரவீந்திரநாத் தாகூர், சர் சி. வி. இராமன், சர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஆகியோரின் சாதனைகளுடன் ஒப்பிடப்பட்டன."

ஐரோப்பிய வயலின் கலைஞர்களை மட்டுமே கண்டு பழக்கப்பட்டிருந்த அந்த ரசிகர் கூட்டத்தின் மத்தியில், ஓர் இந்தியர் விவால்டி (Vivaldi), பாக் (Bach), டெபுஸ்ஸி (Debussy) போன்ற மேதைகளின் செவ்வியல் இசையை வாசித்தது பெரும் வியப்பில் ஆழ்த்தியாது.

அன்றைய இங்கிலாந்து பத்திரிகைகள் பின்வருமாறு அவரை பற்றி எழுதியிருந்தன:

“இந்த நாட்களில் இங்கிலாந்திற்கு இந்தியா கொடுத்துள்ள கொடைகள் என்னே!" - ராய்ஸ் வீக்லி (Roy's Weekly

“அவரிடம் ஒரு எளிதான பாணியும், இனிமையான ஒலியும் இருக்கிறது." - மியூசிக்கல் ஒப்பீனியன் (Musical Opinion)

“கிழக்கத்திய வயலின் கலைஞர்கள் அனைவரையும் விட அவர் ஏற்கெனவே ஒரு படி மேலே இருக்கிறாள்." - சண்டே ஸ்டேட்ஸ்மேன் (Sunday Statesman)

வயலினில் உலகப் புகழ் பெற்ற முதல் இந்தியர்

ஃபிலோமினா ருக்மாவதி தம்புச் செட்டியார் *(Philomena Rukmavathy Thumboochetty)*, இந்தியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற வயலின் கலைஞர் ஆவார்.

ஐரோப்பிய செவ்வியல் இசையில் ஆழமான பயிற்சி பெற்று, உலகப் புகழ்பெற்ற பாரிஸ் கன்சர்வேச்சுவார் *(Conservatoire de Paris)* கல்வி நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட முதல் இந்தியக் கலைஞர் என்ற பெருமையைப் பெற்றவர் இவர்.

Paris Conservatoire.

இத்தகைய மகத்தான சாதனைகள் இருந்தபோதிலும், இன்று அவரைப் பற்றி அதிகம் எதுவும் எழுதப்படுவதில்லை. அவர் குறித்து அறியப்பட்ட ஒரே வாழ்க்கை வரலாறு, *1937*-இல் வெளியிடப்பட்ட "இந்தியாவின் வயலின் அரசி" *(The Indian Fiddler Queen)* என்ற சிறு குறிப்பு மட்டுமே. இந்திய அறிவியல் மேதை சர் சி. வி. இராமன் இந்தச் சிறு நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ளார் என்பது ஃபிலோமினாவின் கலைத் தகுதிக்குக் கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்

இசையில் அவர் அடைந்த சாதனைகள், இந்திய மறுமலர்ச்சிக் காலத்தின் பங்களிப்புகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இவரது பங்களிப்புகள் இரவீந்திரநாத் தாகூர், சர் சி. வி. இராமன், சர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஆகியோரின் சாதனைகளுடன் ஒப்பிடப்பட்டன.

ஃபிலோமினா தம்புச் செட்டியார் *1913* ஆம் ஆண்டு அக்டோபர் *10* ஆம் தேதி திருச்சியை பூர்வீகமாகக் கொண்ட குடும்பதில் பெங்களூருவில் பிறந்தார். இவரது குடும்பம் ரோமன் கத்தோலிக்க பாரம்பரியத்தைச் சேர்ந்தது.

திரு. டி. தம்புச் செட்டியார், *OBE*. இவர் மைசூர் மகாராஜாவின் தனிச் செயலாளராக *(Private Secretary)* இருந்தவர். இவரது செல்வாபதி *(*கெர்டிட்யூட் தம்புச் செட்டியார்*)*.

இவரின் தாத்தா சர் டி. ஆர். ஏ. தம்புச் செட்டியார் வணிகக் குலமான தேசாய் குடும்பத்தில் பிறந்த *(Trichinopoly Rayalu Arakiaswamy Thumboo Chetty).* திருச்சியை பூர்வீகமாகவும், சென்னையில் படித்த இவர் மைசூர் தலைமை நீதிமன்றத்தின் முதல் இந்தியத் தலைமை நீதிபதியாகவும், மைசூரின் திவானாகவும் *(Offg. Dewan)* பணியாற்றியவர்.

தனது ஆரம்பக் கல்வியை மைசூரில் உள்ள ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் பயின்றார் ஃபிலோமினா.

ஏழு வயதில் வயலினுடன் நிற்கும் ஒரு சிறுமியின் மங்கலான கறுப்பு-வெள்ளை புகைப்படங்கள், அவர் தனது கருவியுடன் எவ்வளவு ஒன்றிப்போயிருந்தார் என்பதைக் காட்டுகின்றன. மைசூர் மகாராஜாவின் 'ஹுசூர்' செயலாளரும், ஆழ்ந்த பக்திகொண்டவருமான அவரது தந்தை, தான் பெரிதும் மதித்த ஒரு புனிதரின் நினைவாகவே அவருக்குப் பெயரிட்டார். ஃபிலோமினாவின் பெற்றோர்கள், தனது மகளின் அபாரத் திறமையை ஆரம்பத்திலேயே உணர்ந்து, மைசூரில் உள்ள ஒரு கன்னியாஸ்திரி மடத்தில் இருந்த இசைக் கலைஞர்-துறவியின் கீழ் அவரைப் பயிற்சிக்குச் சேர்த்தனர். "நான் நீருக்குள் செல்லும் மீனைப் போல இயல்பாக இசைக்குள் சென்றேன்" என்று தனது ஆரம்பகால ஈர்ப்பை ஃபிலோமினா குறிப்பிட்டுள்ளார்.

ஃபிலோமினா பெங்களூருவில் பிறந்தாலும், அவரது குழந்தைப் பருவம் பெரும்பாலும் மைசூரில் உள்ள ஒரு கன்னியாஸ்திரி மடப் பள்ளியிலேயே கழிந்தது. அவரது தந்தையின் பெயர் திரு. தம்புச் செட்டியார்; இவர் ஒரு சிறந்த மைசூர் மகாராஜாவின் ஆலோசகராகவும், நம்பிக்கை வைத்த நண்பராகவும், அதே சமயம் எளிமையான கடவுள் பற்றுள்ள கிறிஸ்தவராகவும் இருந்தார். ஃபிலோமினா, ஒரு மாபெரும் தந்தையின் (சர் டி. ஆர். ஏ. தம்புச்செட்டியார்) பேரனானதனதுதந்தையின்மூலம், செழுமையானபாரம்பரியத்தையும், கலை ஆர்வத்தையும் மரபுரிமையாகப் பெற்றார். மைசூரில் உள்ள அவரது இல்லம் 'ருக்மாலயா' என்ற எளிமையான பங்களா ஆகும்.

ஆரம்பத்தில் கல்கத்தா இசைப் பள்ளியில் *(Calcutta School of Music)* பயிற்சி பெற்றார். பின்னர், லண்டனில் உள்ள டிரினிட்டி கல்லூரியின் *(Trinity College London)* ஃபெலோஷிப்பைப் பெற்று, அங்குத் தனது திறமையை மெருகூட்டினார்.

அவருக்கு *16* வயதே ஆனபோது, உலகிலேயே மிகக் கடினமான இசைப் பள்ளிகளில் ஒன்றான பாரிஸ் கன்சர்வேச்சுவாரில் *1929* அனுமதிக்கப்பட்டார். இவர் அந்த நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட மிக இளைய மாணவர் மற்றும் முதல் இந்தியப் கலைஞர் ஆவார். பதினாறு வயதில் உலகப் புகழ்பெற்ற பாரிஸ் கன்சர்வேச்சுவார் *(Paris Conservatoire)* இசைப் பள்ளிக்குள் நுழைந்தது ஒரு இந்தியப் பெண்ணுக்குச் சந்தேகத்திற்கு இடமற்ற வியத்தகு சாதனையாகும். வெகு சில இந்தியர்களே ஐரோப்பிய இசையில் ஆர்வம்கொண்டனர், அவர்களில் மிகச் சிலரே சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்கப் புகழ் அடைந்தனர். அந்த வெற்று வானில் ஒளிரும் தனி நட்சத்திரமாக ஃபிலோமினா திகழ்ந்தார். பாரிஸ் கன்சர்வேச்சுவாரில் தனது படிப்பை முடித்த பிறகு, புகழ்பெற்ற ருமேனிய வயலின் கலைஞரான ஜார்ஜ் எனெஸ்கோவின் *(Georges Enesco)* மாணவியாகத் தனிப் பயிற்சி பெற்றார்.

ஃபிலோமினா தம்புச் செட்டியார், "வயலின் கலைஞராகத் தனிச் சிறப்பை அடைந்த முதல் இந்தியப் பெண்களில் ஒருவர்" என்று புகழப்படுகிறார்.

1934 ஆம் ஆண்டு, இவர் தனது தாயாருடன் இணைந்து ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மற்றும் மேரி அரசியார் முன் இசைக் கச்சேரியை நடத்தினார். 1935 ஆம் ஆண்டு, லண்டனில் உள்ள புகழ்பெற்ற ஈயோலியன் ஹாலில் (Aeolian Hall) தனது இசை நிகழ்ச்சியை நடத்தினார்.

வயலின், வீணையைப் போலவே, மிக நுட்பமான மற்றும் தேர்ச்சி பெறக் கடினமான கருவியாகும். இந்தியக் கலைஞர்களில் சிலர் வயலினில் சிறந்த இன்னிசையை வழங்கியிருந்தாலும், அவர்களுக்கு 'பாணி' (Style) மற்றும் 'கச்சிதம்' (Finesse) இல்லையென்ற ஒரு கருத்து நிலவியது. திருகோடிக்காவல் கிருஷ்ண ஐயர் மற்றும் திருச்சி கோவிந்தசாமி பிள்ளை போன்ற இந்திய வயலின் மேதைகள் தங்கள் கலையையும் ஆன்மாவையும் வெளிப்படுத்தியபோதும், அவர்களுக்கு அந்த மேற்கத்திய 'பாணி' குறைபட்டிருந்தது.

வயலினைப் பிடிக்கும் விதம், வில்லை (Bow) இழுக்கும் கோணம், மற்றும் கருவியின் ஒலித்திறன் போன்ற அனைத்து நுட்பங்களிலும் அவர் கச்சிதம் காட்டினார். அவர் வாசிக்கும்போது ஒரு 'கம்பீரம்' இருந்தது. அவர் ஒரு 'இசைச் சூழ்நிலையையும்' ஒரு ஆழமான 'உணர்வையும்' உருவாக்கினார். கடினமான இசைத் துண்டுகளைக்கூட எளிமையாகவும், தன்னம்பிக்கையுடனும் வாசிக்கும் அவரது வித்தையைக் கண்ட சக இசைக் கலைஞர்கள், "அவரது பணிவு, அவரது அற்புதமான வாசிப்பைப் போலவே ஒரு பெரிய கவர்ச்சியாகும்" என்று பாராட்டினர்.

லண்டன் டிரினிட்டி இசைக் கல்லூரியிலேயே அவரது முதல் பொது நிகழ்ச்சி நடந்தது. அவர் ஃபிராங்க், பீத்தோவன், க்ரைஸ்லர்-விவால்டி, ப்ளோச் ஆகியோரின் படைப்புகளை வாசித்தார். அப்போதைய மைசூர் மகாராஜாவையும் (கல்லூரியின் துணைத் தலைவர்களில் ஒருவர்) புகழ்ந்து, அவர் ஒரு "இந்து கலைஞர்" என்று விளம்பரப்படுத்தப்பட்டார்

மைசூர் மகாராஜாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த அவரது தந்தையின் ஆதரவு, ஃபிலோமினாவின் திறமைகளைப் பயன்படுத்த ஊக்குவித்தது. அவர் தனது மகள்களை ஆடம்பரமின்றி, திறமைகளைப் பயன்படுத்தும் வகையில் வளர்த்தார். ஐரோப்பாவில் அவர் ஆறு ஆண்டுகள் தங்கியிருந்தது, அவரது மறைந்திருக்கும் திறமையைத் தீட்டிக் கொள்ள உதவியது. அங்கே அவர் ஜார்ஜஸ் எனெஸ்கோ (Georges Enesco) போன்ற சிறந்த மேதைகளின் கீழ் பயிற்சி பெறவும், உலகப் புகழ்பெற்ற கலைஞர்களின் நிகழ்ச்சிகளைக் கேட்கவும் அரிய வாய்ப்புகளைப் பெற்றார்.

தனது குருவான ஜார்ஜஸ் எனெஸ்கோவின் பாராட்டுகளைப் பெற்ற பிறகு, அவர் லண்டன் மற்றும் ஆக்ஸ்ஃபோர்டில் நடந்த இசை நிகழ்வுகளில் பங்கேற்று, தனது ஆளுமையாலும் வாசிப்பாலும் பார்வையாளர்களைக் கவர்ந்தார்.

இந்தியப் பெண்கள் சிலர் ஐரோப்பிய இசையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், சர்வதேச அளவில் புகழ்பெற்ற முதல் இந்தியப் பெண் ஃபிலோமினா தம்புச் செட்டியாரே ஆவார். ஐரோப்பியப் பார்வையாளர்கள் மிகவும் விமர்சனத் தன்மை கொண்டவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டால், இது ஒரு மிகப் பெரிய வெற்றியாகும்.

1935 இல் இந்தியா திரும்பிய அவர், ஜகன்மோகன் அரண்மனையில் மைசூர் அரண்மனை இசைக்குழுவுடன் இணைந்து கச்சேரி செய்தார். இக்கச்சேரியை மகாராஜா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

1937 ஆம் ஆண்டு கல்கத்தா சிம்பொனி இசைக்குழுவுடன் இணைந்து வாசித்தார்.

1937 ஆம் ஆண்டு, இவரைப் பற்றிய ஒரு சுருக்கமான வாழ்க்கை வரலாறு "தி இந்தியன் ஃபிட்லர் குயின்: ஃபிலோமினா தம்புச் செட்டியாரின் ஒரு சுருக்கமான ஓவியம்" *(The Indian Fiddler Queen: A Short Sketch of Philomena Thumboochetty)* என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

இவரை பற்றி இந்திய அறிவியல் கழக தலைவர் சி. வி. இராமன் பின்வருமாறு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். "ஃபிலோமினா தும்புச் செட்டியார் இன்று இசை உலகில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு தனித்துவமான ஆளுமை. .....

அவர் தன் சொந்த நாட்டின் பாரம்பரிய இசையையோ அல்லது இசைக் கருவிகளையோ தேர்ந்தெடுக்காமல், மேற்கத்திய இசையையும், ஐரோப்பிய இசைக் கருவிகளிலேயே அதிக வெளிப்பாட்டுத்தன்மை கொண்ட வயலினையும் தன் சுய வெளிப்பாட்டிற்குரிய ஊடகமாகக் தேர்ந்தெடுத்தது, காலத்திற்குப் பொருத்தமான ஒரு தேர்வாகும்.

அவர் வயலின் வாசிப்பதைப் பார்ப்பதும், அவருடைய இசையைக் கேட்பதும் எவருக்கும் என்றும் மறக்க முடியாத அனுபவமாக இருக்கும்."

1938 ஆம் ஆண்டு, கல்கத்தா இசைப் பள்ளியின் ஐந்தாவது சிம்பொனி கச்சேரியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இது அகில இந்திய வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது.

ஃபிலோமினா தம்புச் செட்டியார் 1937 ஆம் ஆண்டு பிரான்சிஸ் காந்தராஜ் தம்புச் செட்டியை மணந்தார். இவர்களது திருமண விழாவில் மைசூர் திவானாக இருந்த மிர்சா இஸ்மாயில் உரையாற்றினார். இவர்களுக்கு செவித்திறன் குறைபாட்டுடன் பிறந்த முதல் மகள் சித்ரா உட்பட ஐந்து குழந்தைகள் இருந்தனர்.

அவரது இரண்டாவது மகன் ரவி தும்புச் செட்டியார் கூற்றுப்படி, அவரது முதல் மகள் சித்ராவுக்குச் செவித்திறன் குறைபாடு இருந்தது. அவருக்குச் சிறப்புப் பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட்டு, உதடு அசைவுகளைப் படித்தறியக் கற்றுக்கொடுக்க வேண்டியிருந்தது.

"ஐரோப்பாவிற்குச் சென்று தனது தொழில் வாழ்க்கையைத் தொடர அவர் திட்டமிட்டார், ஆனால் குடும்பக் கடமைகள் அதை அனுமதிக்கவில்லை" என்று ரவி கூறுகிறார். சிறப்புக் கவனிப்பு தேவைப்படும் குழந்தையும், வளர்ந்து வரும் குடும்பமும் அவரை பெங்களூருவிலேயே நிலை நிறுத்திவிட்டது.

திருமணத்திற்குப் பிறகும், ஃபிலோமினா இசையை விட்டுவிடவில்லை.

சுற்றுப்பயணங்கள் செய்யாவிட்டாலும், பெங்களூருவில் கச்சேரிகள் வழங்கினார். அவரது மகனின் கூற்றுப்படி, அவர் வாழ்நாள் இறுதி வரை தினமும் மூன்று மணி நேரம் வயலின் பயிற்சி செய்வதைத் தொடர்ந்தார்.

1960கள் மற்றும் 1970களில் மேக்ஸ் முல்லர் பவன் இசைக்குழுவுடன் (Max Mueller Bhavan Orchestra) இணைந்து வாசித்தார்.

வயலின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இவரிடம் பயின்ற மாணவர்களில் ஒருவர், கிராமி விருது பெற்ற வயலின் கலைஞரும் இசையமைப்பாளருமான மனோஜ் ஜார்ஜ் (Manoj George) ஆவார். ஃபிலோமினா செல்வச் செழிப்பு, பதவி, செல்வாக்கு என எல்லாவற்றையும் பெற்றிருந்தாலும், அவர் எளிமையானவர், ஆர்ப்பாட்டம் இல்லாதவர். 'அறிவாற்றல் மிக்கவர், துடிப்பானவர், இனிமையானவர்' என்று அறியப்பட்ட அவர், கலைஞர்களுக்கே உரிய கர்வம் அல்லது விசித்திரப் பழக்கங்கள் இல்லாதவர். அவரது கண்களில் ஒளிந்திருக்கும் தீவிரமான ஆன்மா, சாந்தமான முகத்தின் பின்னால் மறைந்திருந்த ஒரு கிளர்ச்சியாளரைக் காட்டுவதாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஃபிலோமினா தம்புச் செட்டியார் மறைந்தார். அவரது குடும்பத்தினர், Philomena Thumboochetty Music Academy சார்பாக அவரது நினைவாக ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சிகளை தம்புச் செட்டியார் அறக்கட்டளை (Thumboochetty Foundation) மூலம் நடத்தி இசைக் கலைஞர்களுக்கு விருதுகளை அளித்து வருகின்றனர்.

இந்திய அரசும், மக்களும் போற்ற மறந்த உலகம் போற்றிய கலைஞரை நினைவுக் கூறுவோம்.

பழந்தமிழகத்தின் போர்க்களம்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

ஆற்றங்கரையில் நெல் வேளாண்மை செய்த காலத்தில் நெல்லுக்கு ஆண்டு முழுக்க தண்ணீர் தேவைப்பட்டதால் ஏரி, கிணறு, குளம் வெட்டி ஆற்றில் பெருவெள்ளம் போகும்போது நீரைச் சேமித்தனர். மழை நீரையும் இவ்வாறே சேமித்தனர். பின்பு வாய்க்கால்கள் வழியாக வயலுக்கு நீர் பாய்ச்சினர். இத்தகைய நீர் மேலாண்மையும் நெல் வேளாண்மையும் சிறந்த மருத நிலத்தில் குடும்பம் என்ற அமைப்பு உருவாகியது. ஒருவன் தன் நிலத்தின் விளைச்சலை தன் சொத்தின் பயன்களை தன் ரத்த சம்பந்தம் உள்ளவர்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்று கருதினான். அவனிடம் சொத்துடைமை சிந்தனை உருவாகியது. இதற்காக ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு அவள் மூலமாக பெற்ற குழந்தைகளை தன்னுடைய வாரிசுகளாக கொண்டு சொத்துகளைப் பகிர்ந்து கொடுத்தான். இவ்வாறாகவே தனிமனிதன், குடும்பம், நிலம் என்னும் சொத்துடைமை உருவாகி வளர்ந்தது.



குடும்பன் - வேளிர்- மன்னன் - வேந்தன் குடும்பத்தை உருவாக்கியவன் குடும்பத்தின் தலைவன் குடும்பன் எனப்பட்டான். பல குடும்பங்கள் சேர்ந்து ஊரை உருவாக்கினர். அதன் தலைவன் ஊர்க் குடும்பன் எனப்பட்டான். பல ஊர்களின் தலைவன், வேளாண் குடிகளின் தலைவனாகி குறு நில வேளிர் எனப்பட்டான். குறுநில வேளிர் பலர் உருவாகினர். அவர்களின் தலைவனாக மன்னன் இருந்தான். பல மன்னர்களின் தலைவனாக பெருநிலவேந்தன் தோன்றினான். வேளிர், மன்னன், வேந்தன் ஆகியவற்றிக்கான அடிப்படைத் தகுதி நிலங்களும் படைகளும் ஆகும். ஏருக்கும் பொறுக்கும் உரிய ஆண்கள் வீரம் நிறைந்தவர் என்ற பொருளில் மள்ளர் எனப்பட்டனர். இவர்கள் உடல் வலிமையும் வேளாண் விஞ்ஞான அறிவும் நீர் மேலாண்மை திறனும் ஒருங்கே பெற்றவர்கள். வேளாண் நிலங்களைப் போர் செய்து கைப்பற்றித் தன் அதிகாரத்தை விரிவாக்கினர்.

போர்க்களமும் மன்னர்களும்

வேந்தர்களும் அறுவடை முடிந்த பிறகு வயலில் வேலை இல்லாத காலத்தில் மள்ளர்களைப் படை வீரர்களாகக் கொண்டு தங்களுக்குள் போர் செய்து கொண்டனர். மண்ணாசை காரணமாக அடுத்தவரின் நிலங்களைப் போரிட்டு வென்று கைப்பற்றினர். இப் போர்கள் நிலங்களுக்கு அருகில் இருந்த வெற்றுப் பொட்டலில் நிலப்பகுதியில் நடைபெற்றன. பரந்து காணப்பட்ட இப்பகுதிகள் பரந்தலை என்று அழைக்கப்பட்டன.

புறநானூற்றில் வாகைப்பரந்தலை வெண்ணிப்பரந்தலை என்ற இடங்கள் போர்க்களங்களாகச் சுட்டப்பட்டுள்ளன. போர் செய்வதற்கென்று நிலையான ஒரு பொட்டல் நிலம் கிடையாது ஏனென்றால் போர் என்பது ஆண்டுக்கு ஒரு முறை வரும் விழா அன்று. எப்போதாவது தான் போர் நடக்கும். எனவே போருக்கு என்று ஒரு இடத்தை யாரும் எந்த மன்னரும் தயார் செய்து வைப்பது கிடையாது.

போர்ப் படிநிலைகள்

போரின் படிநிலைகளை புறப்பொருள் வெண்பாமாலை எடுத்துக் கூறும் போது முதலில் ஊருக்கு வெளியே மேயும் ஆடு மாடுகளை கவர்தல் பின்பு அந்த ஆடு மாடுகளை அதற்கு உடைமைப்பட்ட உரிமையாளர்கள் தங்கள் ஆட்களுடன் சென்று மீட்டு வருதல்; பின்பு கோட்டையின் வெளியே நின்று கோட்டையின் மீது போர் தொடுத்தல், கோட்டைக்கு உள்ளே இருக்கும் மன்னன் உள்ளே இருந்தபடியே கோட்டை சுவர்களில் தன் படைவீரர்களை ஏற்றி அங்கிருந்து நெருப்பு அம்புகளையும் கனமான கற்களையும் கீழே நிற்கும் போர் வீரர்கள் மீது எறிதல் என இவ்வாறு கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் நின்று போர் செய்தனர். அதன் பிறகு கோட்டையை உடைத்து உள்ளே சென்று தெருக்களில் குடியிருந்த மக்களை எல்லாம் கொன்று வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்தி மன்னனின் காவல் மனையைக் கைப்பற்றினர்.

தோற்றுப் போன மன்னரின் அரண்மனை கூகைகளும் கோட்டானும் பறந்து திரியும் இருட்டான இடமாக மாறிப் போயின. இடிபாடுகள் மட்டுமே எஞ்சின. போர் முடித்துத்

தம் நாட்டுக்குத் திரும்பி வரும் பகைவீரர்கள் வழிநெடுக நீர் நிலைகளை அழித்தனர். போர் யானைகளை விட்டுக் கரைகளை மிதித்துச் சிதைக்கும்படி செய்தனர். அவற்றில் இருந்த தண்ணீர் எல்லாம் வெளியேற்றப்பட்டு தூர்ந்து போயின. இனி தண்ணீர் தேக்கி வைக்கும் வசதி அற்றுப் போய்விடும். இதனால் அதன் பிறகு அங்கு நெல் வேளாண்மை செய்ய இயலாது.

பகைவர் நாடுகளில் நெல் வயல்களில் கழுதையைப் பூட்டி உழுது வெள்ளை எள் விதைத்தனர். இதனாலும் அந்த வயல்கள் சத்துக் குறைந்து வேளாண்மைக்குத் தகுதியற்றனவாகும். பகைவீரர்கள் தீ வைத்து கொளுத்திய வீடுகளிலிருந்து பெண்களும் குழந்தைகளும் அழும் அலறல் சத்தம் கேட்டதை பாசறையில் இருந்து வீரர்கள் கேட்டதாக புறநானூறு கூறுகின்றது.

போர்க் கருவிகள்

போர்வீரர்கள் போருக்குச் செல்லும் போது வில், வேல், வாள், கேடயம் போன்றவற்றைக் கொண்டு சென்றனர். கேடயம் ஆதி காலத்தில் தோலால் செய்யப்பட்டதனால் அதனைத் தோல் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது (புறநானூறு 13)

சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளியை முட மோசியார் பாடிய பாடலில்

இவன் யார் என்குவை ஆயின் இவனே
புலி நிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி அன்ன களிற்று மிசையோனே

என்ற அடிகள் இவன் யார் என்று நீ வினவினால் இவன் புலியின் தோலால் ஆன கவசத்தின் தையல் சிதைந்து போக எய்த அம்புகளால் பிளக்கப்பட்ட பரந்து உயர்ந்த மார்பை உடையவன். எமன் போன்ற ஆண் யானை என் மீது ஏறி வருபவன், என்கிறார் புலவர்.

கோட்டையை காக்கும் போரில் கோட்டைக் சுவரில் இருந்து பலவித ஆயுதங்களால் தாக்கினர் நெருப்பு உமிழும் அம்பு விஷம் தடவிய அம்பு வேல் கீழே வந்து மோதியதும் உடைந்து சிதறி பலரைத் தாக்கும் கல் குண்டுகள் எனப் பலவிதமான தொலைவில் இருந்து தாக்கும் ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்தினர்.

போருக்குக் காரணம்

மண் ஆசையே போர்களுக்கு முக்கிய காரணமாயிற்று. பிறருடைய மண்ணை அடையும்போது தன் நிலத்து மக்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். தோற்றுப் போன நிலத்து மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றனர். (புறநானூறு 12) பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாடலில்

இன்னா வாகப் பிறர் மண் கொண்டு
இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே

என்ற அடிகள் காட்டும் முரண்பாடு சிந்திக்கத்தக்கது. பிறர் மண்ணைப் போர் செய்து கைப்பற்றியதால் அவர்களுக்கு துன்பம் (இன்னா) உண்டாயிற்று ஆனால் அந்த வெற்றிச்செய்தி வெற்றி பெற்ற மன்னனின் மக்களுக்கு அவன் மீது ஆர்வம் கொண்ட ஆர்வலர்களுக்கு இனிய செய்தி ஆயிற்று. ஆக போர் என்பது ஒரு தோற்றவருக்குத் துன்பமாகவும் வென்றவர்க்கு இன்பமாகவும் இருந்தது. போர் வீரம் ஏனோத்து பழந்தமிழகத்தின் சமூக தகவு ஆகும். எனவே பெண்களும் தம் வீட்டு ஆண்களை போருக்கு மனம் உவந்து வழியனுப்பினர். போர் இல் ஈடுபட்டோர் அடையும் புண்கள் விழுப்புண்கள் எனப் போற்றப்பட்டன. போரில் மரணம் அடைந்தால் வீர மரணம் என்று சமூகம் புகழ்ந்தது.

போர் என்பது மனித குல வரலாற்றில் இயற்கையான ஒரு நிகழ்வாகள் கருதப்பட்டது. வலுத்தவன் வாழ்வான் என்பது இயற்கை நியதி.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் பதுவதென்று இவ்வுலகத்து இயற்கை என்று இடைக்குன்று ஊர் கிழார் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடிய பாடலில் குறிப்பிட்டார். (புறம் 76).

பெண்களின் பங்கு இளைஞர்கள் போர்க்களத்தில் தங்கள் நேரத்தைச் செலவழிப்பதைப் பெருமையாகக் கருதினர் அவர்களின் தாய்மார்களும் அதற்காகப் பெருமைப்பட்டார்கள். காவற்பெண்டு எழுதிய பெண்பாற் புலவர்

சிற்றில் நற்றூண் பற்றி என் மகன்
யாண்டு ளனோ என வினவதி யாயின்
என் மகன் யாண்டுள னாயினும் அறியேன்
ஓரும்புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

என்கிறார். என் மகன் எங்கே என்று நீ கேட்டால், 'அவனைப் பெற்ற வயிறு இங்கே இருக்கிறது. அவன் போர்க்களத்தில் இருப்பான்' என்று ஒரு தாய் பெருமையுடன் பதில் கூறுகின்றாள்.

போர் சார்ந்த கடமைகள்

பொன்முடியார் என்ற இன்னொரு பெண்பாற்புலவர் சங்க காலம் என்னும் வீரயுகக் காலத்தைச் சேர்ந்தவர். அப் போர் யுகத்தில் சமூகத்தின் முக்கிய உறுப்புகளாக விளங்கும் ஒவ்வொருவரின் கடமையையும் எடுத்துரைக்கிறார்.

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்றார். ஆணைப் பெற்றுத் தருவது ஒவ்வொரு பெண்ணின் கடமை ஆகும். போர் செய்து நாட்டைக் காப்பது ஒவ்வொரு ஆணின் கடமை ஆகும்.

போர்க்களத்தில் யானைப்படை, குதிரைப் படை, தேர்ப் படை மற்றும் காலாட் படை போரில் பங்கேற்றன. குன்றிள் ஏறி நின்று யானைப் போர் பார்க்கும் பழக்கத்தை பற்றி பிற்காலத்தில் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

யானைகள் கடலில் ஆடும் கப்பலைப் போன்று மிகப் பெரியனவாக காணப்பட்டன. மேலும் விண்மீன்களின் நடுவே தோன்றும் வெண்ணிலா போலவும் யானை ஒவ்வொன்றும் காட்சி அளித்தது. சுறா மீன்கள் போன்று வாள் வீரர்கள் சூழ்ந்து தாக்கி யானைகளைத் தாக்கவும் யானைகள் தம் பாகன் அறியாது மதம் இழந்தன

களிரே முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்து பட்டன்றே
என்று சங்க இலக்கியம் (புறநானூறு) கூறுகின்றது.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் போர்க்களக் காட்சியை விவரிக்கும் புலவர் பரணர்

தோல் துவைத்து அம்பின் துளை தோன்றுவ/
மாவே எறிபதத்தான் இடம் காட்ட
கறுழ் பொருத செவ்வாயான/
எருத்து வவ்விய புலி போன்றன
களிறே கதவு எறியாச் சிவந்து உராஅய்
நுதி மழுங்கிய வெண்கோட்டான்
உயிர் உண்ணும் கூற்றுப் போன்றன
நீயே! அலங்குளைப் இவுளிப் புலந்தேர்மிசை
பொலிவு தோன்ற
இருந்தாய்

என்று ஒரு மன்னனைப் புகழ்கிறார்.

பகைப்புலத்தை அழித்தல்

போர் முடிந்த பிறகு பகைவரின் நிலங்களில் வெள்ளை மூக்குடைய கழுதைகளை ஏரில் பூட்டி உழுது அந்நிலங்களைப் பாழாக்கி விடுவர். அந்நிலங்களில் வெள்ளை தலையாட்டம் உடைய குதிரையின் குளம்புகள் தாவித்தாவி நல்ல நெல் வயல்களை அளித்து விடும்.

கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்/
வெள்வாய்க் கழுதை புல்லினம் பூட்டிப்/
பாழ் செயதனை
(புறம் 15)

யானைகள் பகைவர் நிலத்தில் அங்குள்ள நீர் நிலைகளின் கரையை கண்மாய், குளம், ஏரி போன்றவற்றைத் தூர்த்து விடுவர. கரைகளை யானைகள் மிதித்து சிதைத்து உள்ளே

இறங்கி அழித்து விடும். யானையின் பெரிய கால்களால் மிதிபட்டு கரைகள் சிதைந்து தண்ணீர் அனைத்தும் வெளியேறி வெற்று நிலமாகிவிடும்.

நின் தெவ்வர் தேயத்து...

துளங்கி யலால் பணை எருத்தின்
பாவடியால் செறல் நோக்கின்
ஒளிறு மருப்பின் களிறு அவர
காப்புடைய கயம் படியினை
அன்ன சீற்றத்து அனையை ஆகலின்

என்று பகைவர்களின் நில அழிப்பும் போர் நடைமுறைகளின் ஓர் அங்கமாயிற்று. போர் செய்யும் போது பகைவர்கள் மீண்டும் எழா வண்ணம் வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்து விட வேண்டும் என்பது அக்காலப் போர் நியதி ஆகும்.

பகைவர் நிலத்துக்கு நெருப்பு வைத்தல் புலவர்கள் போரில் வெற்றி பெற்ற மன்னர்களை வாழ்த்தும்போது உன் மலர் மாலை பகைவரின் நிலத்தில் நீ வைத்த நெருப்பின் புகையால் கருகலாம் என்று பாராட்டுகின்றனர்

நின் கண்ணி ஒன்னார் நாடுசுடு
கமழ் புகை எரித்தலானே

என்று பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை காரிக்கிழார் பாடுகின்றார். (புறநானூறு 6)

எல்லையும் இரவும் என்னாய் பகைவர்
ஊர் சுடு விளக்கத்து அழுவலர் கம்பலை
கொள்ளை மேவலை ஆகலின்

என்று கருங்குழல் ஆதனார் சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாராட்டி பாடுகின்றார். இரவென்றும் பகல் என்றும் பாராமல் பகைவர்களின் ஊரை சுட்டெரிக்கும் தீயின் ஒளியில் அவ்வூர் மக்கள் தம் சுற்றத்தினரை அழைத்து அழுகின்ற ஓசையையும் ஆரவாரத்துடன் போய் பகைவர்களின் ஊர்களை கொள்ளை அடிப்பதையும் நீ விரும்பினாய் என்று பாண்டிய மன்னனைப் பாராட்டுகின்றார்.

பகைவர்களை வென்று திரும்பும்போது அவ்வழியில் இருக்கும் ஊர்களுக்குத் தீ வைப்பதும் அங்கிருக்கும் பொன் ஆபரணங்களை கொள்ளையடிப்பதும் போர் அறங்களில் போர் முறைகளில் ஒன்றாகவே கருதப்பட்டது.

நெல் வயல்களின் ஊடே தேரை ஓட்டிச் சிதைக்கும் பழக்கமும் இருந்தது. நெல் வயலையும் நீர் நிலைகளையும் சேதப்படுத்திவிட்டால் பகை நாட்டு மக்கள் மீண்டும் மறு வாழ்வு பெற பல பத்தாண்டுகள் ஆகும். அவர்களைத் தலையெடுக்க விடாமல் செய்வதே

தம் நோக்கம் என்பதால் பகைவர்களிடம் மள்ளர்களும் மன்னர்களும் கிஞ்சித்தும் இரக்கம் காட்டவில்லை.

புள்ளினம் குயிலும் புகழ்சால் விளைவயல்/ வெளிமான் கவிகுளம்பு புகழ்தேர் வழங்கினாய்/ மின் தெவ்வர் தேயத்து/

என்ற அடிகள் பறவைகளின் ஒலி எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும் நெல் வயல்களின் ஊடே நீ உன் தேரை ஓட்டி வயல்களைச் சிதைத்தாய் என்கின்றன.

போர் அறம்

ஆரியப் பார்ப்பனர் வரவும் செல்வாக்கும் தமிழகத்தில் தமிழ் மன்னர்களிடம் பெருகிய போது சில விதி விலக்குகளும் தோன்றின. மண்ணில் விளையாடி கொண்டிருந்த மகனை இழுத்து வந்து தலைக்கு எண்ணெய் தேய்த்துக் கையில் வேல் கொடுத்துப் பொருக்குத் தாய் அனுப்பிய காலம் போய் பெற்றோருக்கு ஈமக் கடன் செய்யாதோர் போருக்கு வர வேண்டாம். பார்ப்பணர்கள் போரில் ஈடுபட வேண்டாம் என்று விலக்கு அளிக்கும் காலம் தோன்றியது.

எளியோர், நோயுற்றோர், முதியோர், பால்பசு, குழந்தைகள், பெண்கள், பெற்றோருக்கு ஈமக் கடன் செய்யவேண்டிய குழந்தைகளை இன்னும் பெறாத இளைஞர்கள் ஆகியவர்களை பாதுகாப்பான ஓர் இடத்தில் போய் தங்கும் படி ஓர் அறிவிப்புச் செய்கின்றனர். அதன் பிறகு போரைத் தொடங்குகின்றனர்.

ஆவும் ஆணியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணி உடையிரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர் பெறாஅதீரும்/
எம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் புட்கை/
(புறநானூறு 9)

போர் நிறுத்தம்

ஓர் அந்தணன் போர்க்களத்துக்கு வந்து மன்னனைச் சந்தித்துப் பேசிச் சென்றதும் கோட்டையின் மேல் ஏறித் தாக்குவதற்காக சார்த்தி வைக்கப்பட்டிருந்த ஏணிகள் அகற்றப்பட்டன, என்று புறநானூறு 35 ஆம் பாடல் தெரிவிக்கின்றது. போர்க்களப் பாடல்களில் மிக அரிதாகக் கிடைக்கும் பாடல் இது. பொதுவாகப் புலவர்கள் எவரும் மன்னனைத் தனியாகச் சந்தித்து அறிவுரை கூறுவார்களே தவிர போர்க்களத்திற்குள் புகுந்து அறிவுரை கூறும் மரபு கிடையாது. ஆனால் இந்த அந்தணன் போர்க் களத்திற்கு வந்துள்ளான். இவான் புலவன் அல்லன். போர்க்களத்தின் வெற்றிகளைப் பாட வேண்டியது புலவர்களின் கடமை. போரைத் தவிர்ப்பாய் என்று போர்க்களத்திற்கு வந்து

கூறுவது கிடையாது. அவ்வையார் கபிலர் போன்றோர் மன்னர்களிடம் அரசவையில் சந்தித்துப் போரை தவிர்க்கும்படி கூறினரே தவிர களத்திற்கு வந்து பலர் அறிய மன்னரைச் சந்தித்துப் பேசவில்லை.

ஒரு பசலைப் பார்ப்பான் போர்க்களத்தின் ஊடே ஊர்ந்து போவது போல் போனான். எளியவன் மெலிந்தவன். பசலைக் கொடியைப் போல வாடிய இடுப்பை உடையவன். இவன் உள்ளே போய் மன்னரைப் பார்த்து சொல்லிய சொற்கள் சிலவே என்றாலும் உடனே கோட்டையின் மேல் சார்ந்து இருந்த ஏணிகளை மன்னர் அகற்றச் சொல்லி விட்டார். யானைகளின் கழுத்தில் கட்டி இருந்த மணிகளையும் கழற்றச் சொல்லி விட்டார். இவற்றால் இனிப்போர் நடக்காது என்பது தெரிந்து விட்டது.

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்தி பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொற்கள் சிலவே அதற்கே

ஏணியும் சீப்பும் மாற்றி/ மாண்வினை யானையும் மணி களைந்தனவே/

(பசலைக் கொடி என்பது வயலைக் கொடி என்று (ப -வ) என்றும் பசலைப் பார்ப்பான் என்பது பயலைப் பார்ப்பான் என்றும் (சகரம் - பகரமாகவும், பகரம் - வகரமாகவும்) மாற்றம் பெற்றுள்ளது.

செய்யக்கூடாதவை

போர்க்களத்தில் சில விலக்கு விதிமுறைகள் உண்டு. போரிடும்போது புறமுதுகு காட்டி ஓடுபவனை பின்னே இருந்து வேல் எறிந்து அல்லது அம்பு விட்டுக் கொல்லக் கூடாது. ஆடை கழன்று விழும் அவனை நோக்கித் தாக்குதல் நடத்தக் கூடாது. அது அவனுடைய மானப் பிரச்சனையாகும் உயிரை விட மானம் பெரிது என்பதனால் அவன் மானத்தைக் காக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். மேய்ச்சல் நிலத்தில் வீழ்ந்து பட்டவரைக் கொல்லக்கூடாது. மேய்ச்சல் நிலத்தில் ரத்தம் சிந்தக்கூடாது. அது ஆடு மாடுகளுக்கு உரிய நிலமாகும். அவர்களின் உணவை சேதப்படுத்துவது அறம் ஆகாது. நெல் வயல்களை அழிக்கும் மன்னர்கள் மேய்ச்சல் நிலத்தை அழிப்பதில்லை என்பது உயிர் நேயத்தைக் காட்டுகிறது. போர் மனிதர்களுக்கு இடையில் தானே தவிர மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் இடையில் அல்ல. அதுபோல நீரில் பாய்ந்து உயிர் தப்ப முயன்றவர்களை நீருக்குள் குதித்து அவர்களைக் கொன்று நீர் நிலையை ரத்த ஆறு ஓடும் படி செய்யக்கூடாது. நீரைப் பாழாக்க கூடாது. நீர்நிலையை நோக்கி மல ஜலம் கழிக்க கூடாது என்ற விதிமுறை இன்றளவும் கிராமங்களில் பின்பற்றப்படுகிறது. நீரை அசுத்தப்படுத்துவது அறம் ஆகாது.

நீர் நிலையை சிதைத்து விடுவார்கள். நீரை வெளியேற்றி விடுவர். ஆனால் நீரில் ரத்தம் கலக்க விடுவதில்லை. ஆயுதமின்றி நிற்பவரை காயப்படுத்தவோ தாக்கவோ கூடாது.

இருவர் கையிலும் என்ன ஆயுதம் இருக்கின்றதோ அதற்கு ஏற்பவே போர் செய்ய வேண்டும். இவ்வாறு பல போர் விதிமுறைகள் அறங்கள் பின்பற்றப்பட்டன.

போர் வீரர்கள் யார்?

தமிழகத்தில் போர்க் களங்களில் போரில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் மருத நிலத்தைச் சேர்ந்த மள்ளர்கள் எனப்படும் போர்வீரர்கள் ஆவர். சங்க இலக்கியத்தில் வீரன் என்ற சொல் எங்கும் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக மல்லர், மள்ளர் என்ற சொற்களே வீரர்களைக் குறிக்கின்றன. இவர்கள் ஊர்களில் மல்யுத்தத்தில் ஈடுபடுவதுண்டு. போர்களில் போர் வீரர்களாக களத்தில் இறங்கிப் போர் செய்வர். இவர்கள் நெல் வேளாண்மை செய்கின்ற ஏர் உழவர்கள் என்பதை பிங்கல நிகண்டும் திவாகர நிகண்டும் தெளிவாக்குகின்றது

அருந்திறல் வீரர்க்கும் பெருந்திரள் உழவர்க்கும்
வருந் தகைத்தாகும் மள்ளர் எனும் பெயர்

என்கிறது. வீரர்களுக்கு மள்ளர் என்பது பெயர். அவர்களே ஏர் உழவர்களும் ஆவர்.

செருமலை வீரரும் திண்ணி யோரும்
மருதநில மக்களும் மள்ளர் என்ப

என்ற நிகண்டு வரிகள் (திண்மை) உடல் உறுதி படைத்த வீரருக்கும் மருத நில மக்களுக்கும் மள்ளர் என்ற பெயர் வழக்கில் இருந்ததை உறுதி செய்கின்றன. இவ்விரண்டு நிகண்டுகளின் கருத்தையும் ஆராயும் போது போரில் ஈடுபட்டவர்கள் ஏர் உழவர்கள் என்பது தெளிவாகின்றது.

திருக்குறளில் போர் பற்றி பல தகவல்கள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன. படை மாட்சி, பகை மாட்சி போன்ற அதிகாரங்களும் உள்ளன. திருக்குறள் யானை போர் நடந்த தகவலைத் தெரிவிக்கின்றது.

வள்ளுவரின் படைமாட்சி

திருக்குறள் சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்தது என்பதனால் முற்காலம் தற்காலம் என்ற இருAநட்டி காலகட்டத்தை சேர்ந்த போர் முறைகளையும் தெரிவிக்கின்றது.

போருக்குச் செல்லும் வீரர்கள் மாலை அணிந்து செல்வர் (குறள் 767). என் தலைவன் முன் நின்று போர் செய்யாதீர்கள் அவ்வாறு போர் செய்தால் நீங்கள் நடுகற்களாக மாறிவிடுவீர்கள் இதற்கு முன்பு இவ்வாறு தான் நடந்துள்ளது என்று தன் மன்னனின் வீரத்தைப் பற்றி பகைவீரர்களிடம் எச்சரிக்கை செய்வதாக 771 ஆம் குறள் தெரிவிக்கின்றது. கையில் வேல் தாங்கி சென்ற வீரன் அவ்வேலைக் கொண்டு போர் யானையைத் தாக்கினான் என்ற செய்தி 774 ஆம் குறளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்களத்தை வள்ளுவர் அமரகம் என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் தமிழ் சொர்கள் ச என்ற எழுத்தால் தொடங்காது என்கிறார். அது அவர் காலத்திய வழக்கு. அதற்கு எடுத்துக்காட்டாக தமிழின் அமர் (சமர்), அவை (சபை) ஆகிய சொற்களைக் காட்டுவர். அமர் என்ற சொல் வடமொழியில் சமர் எனப்படும். அகம் என்றால் இடம் அமரகம் என்றால் போர்க்களம் என்று பொருள் ஆகும். அமர்க்களம் என்ற சொல் ஆரவாரம் என்று தற்போது புரிந்து கொள்ளப்படுகிறது. அதற்குக் காரணம் ஆரம்பத்தில் அமர்க்களம் என்பது போர்க்களத்தையும் அங்கு வெற்றி பெற்ற வீரர்கள் எழுப்பிய வெற்றிக் கூச்சலையும் குறித்தது. பின்னர் வேறு இடங்களில் கேட்ட சந்தோஷ சத்தங்களை குறிக்கலாயிறறு. இன்றும் அமர்க்களம் என்பது மகிழ்ச்சியின் ஆரவாரத்தையே குறிக்கின்றது



படைமாட்சி என்ற அதிகாரத்தில் வள்ளுவர் படைகளைப் பற்றியும் போர் அறங்களைப் பற்றியும் தெரிவிக்கின்றார்

வள்ளுவர், உறுதி வாய்ந்த வீரர்கள் அதிகம் இருந்தாலும் கூட தலைமை தாங்கும் தலைவர்கள் இல்லை என்றால் அந்தப் படையைப் பகைவர்கள் சிதறடித்து விடுவர் (770) என்கிறார்.

ஒரு மன்னனுக்கு அவனது செல்வங்களில் சிறந்த செல்வம் எதுவென்றால் போர்க்களத்தில் வரும் இடையூறுகளுக்கு அஞ்சாமல் பகைவர்களை எதிர்த்து நின்று வெல்லும் படை வீரர்களே ஆகும் (761).

தொல்படையின் சிறப்பு

காலங்காலமாக இருந்து வரும் தொல்படை என்ற சிறப்பினை உடைய பழைய படை பகைவரை எதிர்த்துச் செல்லும் ஆண்மையை உடையது. போரில் ஏற்படும் அழிவுகளைக் கண்டு அஞ்சாதது. எனவே இத்தகைய பழைய படையை போருக்குக் கொண்டு செல்வதே வெற்றியைத் தரும் (762).

பகைவரது படைகள் எலிகளைப் போலக் கடலாகத் திரண்டு வந்தாலும் கூட தொல்படை பழைய படை என்பது நாகத்தை போலச் சீறி மூச்சுவிட்டு பகைவரின் படைகளை அழித்துவிடும் (763).

ஒரு மன்னனுக்குச் சிறந்த படையாகத் திகழ்வது பகைவரது வஞ்சனைகளுக்கு ஆட்படாததாக வழிவழியாகத் தொடர்ந்து வீரப்பண்பு உடைய வீரர்களைக் கொண்ட படை ஆகும் (764). அஞ்சாத படை வீரர்கள் யார் என்றால் எமனே எதிர்த்து வந்தாலும் அவனைக் கண்டு ஓடி ஒளியாமல் அவனையும் எதிர்த்து நின்று அவனைப் புறங்காட்டி ஓடச் செய்கின்ற தறுகன்மை, துணிச்சல் உடைய படை வீரர்கள் ஆகும் (765).

ஒரு படைக்குச் சிறந்த பாதுகாப்பு என்பது வீரமும் மானமும் நன்னெறியைப் பின்பற்றி செல்லும் நடத்தையும் ஆகும். இதுவே மன்னனின் சிறப்புமாகும் (766). ஒரு மன்னனுக்கு உரிய படைகளில் முதலாவதாகச் செல்லும் தூசிப் படையை அஞ்சாமல் எதிர்த்து விரட்டி விடும் வீரர்களே வெற்றி இலக்கைத் தொடுவர் (767).

ஒரு படைக்குப் துணிந்து போரிடுகின்ற வீரமும் ஆற்றலும் உடைய வீரர்கள் இல்லை என்றால் அந்தப் படை முன்னோக்கிச் செல்லும் போதே பகைவர்கள் தன் வெற்றியை அடைந்து விடுவார்கள் (768). போர்ப் படை என்பது தன் எண்ணிக்கையால் சுருங்கக் கூடாது. படை வீரர்களின் மனதில் எக்காரணத்தைக் கொண்டும் அலுப்பும் சலிப்பும் தோன்றக்கூடாது. அவர்களுக்குக் கைப்பொருள் இல்லாத வறுமை சூழக் கூடாது. இவை இல்லாமல் இருந்தால் அந்தப் படை எந்த படையையும் வெல்லும் (769).

தோற்ற மன்னர்களின் நிலை

வெற்றி பெற்ற மன்னன் தோற்றவனின் மகுடத்தை உருக்கி வீரக் கழல் செய்து தன் கால்களில் அணிவான்

நீயே, பிறர் ஓம்புறு மற மன் எயில்
ஓம்பாது கடந்து அட்டு, அவர்
முடி புனைந்த பசும் பொன் நின்
அடி பொலியக் கழல் தைஇய
வல்லாளனை; வய வேந்தே! -புறநானூறு 40

அரண்மனை பெண்கள் வெற்றி பேரவனின் அரண்மனைக்கு கொண்டு வரப்படுவர். அவர்கள் கொண்டி மகளிர் எனப்பட்டனர். இவர்கள் பணிப்பெண்களாக நியமிக்கப்படுவர். திருமணம், குழந்தைப் பேறு மறுக்கப்பட்டது. ராணியின் கூந்தலை நறுக்கி கொண்டு வந்து பட்டத்து யானையின் கால்களில் கயிறாகத் திரித்துக் கட்டுவது மரபு. மற்ற கயிறுகளை விட மயிர்க்கயிறு உறுதி வாய்ந்தது.

போர்க்கருவிகள்

பழந்தமிழர்கள் வித விதமான போர் கருவிகளைப் பயன்படுத்தினர். வில், அம்பு, வேல், வாள், கேடயம் போன்ற முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில கருவிகளும் தமிழர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன. அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளிகடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எஃகம், சேறுகுத்தி, தறிகை, துடுப்பு, நவியம், படைவாள், பூண்கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேலுறை ஆகிய கருவிகளையும் தமிழர் பயன்படுத்தியதாக புறநானூற்றின் முன்னுரையில் உ.வே, சாமிநாதையர் குறிப்பிடுகின்றார். இவற்றுள் பல, கோட்டை மதில்களின் மேலிருந்து பகைவர்களைத் தாக்குவதற்குப் பயன்படுத்தினர்.

ஆண்டலையடுப்பு, ஆயுதக்காம்பு, உருமி, எரிசிரல், ஐயவித்துலாம், கவை, கல்லுமிழிகவண், கல்லிடுகூடை, களிற்றுப்பொறி, கலப்பை, கழு, கற்பொறி,,, கைப்பெயர் ஊசி, நாராசம், நூக்கியெறி பொறி, மட்டுவு (ஹேலடி), மழு, முக்குத்துவாள், முசுண்டி, வட்டக்கத்தி , வல்லயம், வளரி, வளைவிற்பொறி, வாள், வில், வேல், உலக்கல், ஏப்புழை/ சூட்டிஞ்சி), கணையம், குருவித்தலை, தாமணி, கவர்தடி, நீர்வாளி, விதப்பு, புதை, கருவிரலூகம், கழுகுப்பொறி, குடப்பாம்பு/கத நாகம், பன்றி (கரும்பொன்னியல் பன்றி), பனை, அயவித்துலாம், எக்கு, கண்ணாடி தைத்த கேடகம், கணிச்சிப்படை, கழிப்பிணிப் பலகை, சதக்களிதள்ளிவெட்டி, சிறுசவளம், சுழல்படை, தாமணி, தோமரம்,, பிண்டிபாலம், பூண்கட்டிய தண்டு, பெருஞ்சவளம் போன்ற போர்க் கருவிகளும் போரில் பயன்படுத்தப்பட்டன.

சிலம்பு காட்டும் கோட்டைப் பாதுகாப்பு

சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் கோவலனும் மதுரைக்கு வந்தனர். அப்போது மதுரை கோட்டையில் பொருத்தப்பட்டிருந்த பொறிகளைக் கண்டனர். அவர்கள் கண்டு வியந்த பொறிகள் வருமாறு

1. வளை விற் பொறி - வளைந்து தானே எய்யும் இயந்திரவில்,
2. கருவிரலூகம் - கரிய விரல்களுடைய குரங்கைப் போலிருந்து அருகே வரும் எதிரிகளைப் பிடித்துக் கொல்லும் பொறி,
3. கல்லுமிழ் கவண் - தானே கற்களை எறியும் கவண்,
4. பரிவுறு வெந்நெய் - எண்ணெயைக் கொதிக்க வைத்து அருகே வருபவர் மேல் வீசுகின்ற எண்ணெய் மிடா (கொப்பரை),
5. பாகடு குழிசி -செம்பை உருக்கி வைத்திருந்து எதிரிகள் மீது வீசும் மிடா, அல்லது வெல்லப்பாகைச் சிதறும் பாத்திரம்,
6. காய்பொன்னுலை -படைக்கருவிகளை உருகக் காய்ச்சி எறிவதற்கேற்ப அமைந்த உலைகள்,
7. தொடக்கு - கழுக்கோல் போலக் கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி,
8. ஆண்டலையடுப்பு - ஆண்தலைப் பறவை போன்ற பொறி, பகைவரது மண்டையைக் கொத்திச் சிதைக்கும் கருவி.
9. கவை - இரு பிரிவாகப் பிரிந்து அமைந்த கவைக்கோல், மதிலேறும் பகைவரை மறித்துத் தள்ளக் கூடியது,
10. கழு - கூரிய நுனியுடைய கழுக்கோல்,
11. புதை - அம்புக் கட்டுகள்
12. புழை - தாமே பகைவர் மீது அம்பெய்யும் வகையில் அமைந்துள்ள ஏவறைகள்
13. ஐயவித்துலாம் - தன்னை நெருங்கும் பகைவர் தலையை நெருக்கித் திருகும் மரம்,
14. கைபெயரூசி - மதிலைக் கைப்பற்ற முயலும் பகைவர் கையை நடுங்கச் செய்யும் ஊசிப் பொறி
15. சென்றெறி சிரல் - பகைவர் மேல் சென்று தாக்கும் சிக்கிலிப் பறவை வடிவிலமைந்த பொறி
16. பன்றி - மதில்மீது ஏறும் பகைவர்களைத் தன்கொம்பால் கிழித்துக் கீழே தள்ளும் பன்றி போன்ற பொறி
17. பணை - மூங்கிற் கோல் போலிருந்து தானே சென்று பகைவரை அடிக்கும் பொறி,
18. எழுவும் சீப்பும் கணையமும் - கோட்டை மதிற்கதவிற்கு வலிமையாக உள்வாயிற்படியிலே பொருந்திய மரங்கள், வயிரம் பாய்ந்த கணையங்கள்
19. கோல் - எறிகோல்
20. குந்தம் - சிறுகவளமாகிய குந்தப்படை
21. வேலும் பிறவும் - வேற்படையும், தூண்டிலும், களிற்றுப் பொறியும், புலிப்பொறி முதலியவும்

மதில்மேல் பொருத்தப்பட்டிருந்தன என்ற செய்தி கிடைக்கிறது.

இத்தகைய கோட்டைச் சிறப்பினை இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதையில், வருணித்துள்ளார் (207-218).

போரும் திருமண உறவும்

போர் மருத நிலத்தில் மண்ணாசை காரணமாக தோன்றியது. போரைத் தவிர்க்க இளவரசிகளைப் பகை மன்னருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். பெண் கேட்டு தர மறுத்ததால் போர் தொடுத்தும் பெண்ணைக் கவர்ந்தனர். ரோம் நாட்டு இளவரசியைப் பாண்டிய மன்னன் மணந்தான். பாண்டிய நாட்டு இளவரசி செம்பவளத்தைக் கொரிய நாட்டு மன்னனுக்கு திருமணம் செய்து கொடுத்தனர். சோழ மன்னன் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தான். அப்போது அங்கு வந்த இலவரசியைத் திருமணம் செய்துகொண்டான். அவளை தனி தீவு ஒன்றில் குடியமர்த்தினான். அவள் தன் மகனைத் தன்னை போல் பௌத்த சமயத்தை பின்பற்றச் செய்து தன் மொழியையும் கற்று கொடுத்தாள். அவன் வழி வந்தோர் சிங்க வம்சத்தவராக சிங்களர் எனப் பெயர் பெற்றனர்.

போரின் தன்மையும் விதியும் விதி விலக்குகளும் காலத்திற்கு ஏற்ப பல மாற்றங்களைப் பெற்றாலும் அதிகார வெறி மற்றும் மண்ணாசை, பெண்ணாசை, பேராசை என்ற அடிப்படை காரணங்கள் மட்டும் மாறவில்லை. சில சூழ்நிலையில் மானத்துக்காகவும் தன் குலப் பெண்டிரைக் காப்பாற்றும் நோக்கத்துக்காகவும் போர்கள் நடைபெற்றுள்ளன

Raje, my dear

In the garden of tradition, you bloom,
As a jasmine-scented breeze,
Braided with loving memories,
And shining with
flame of faith.

Your heart walks with music
Flute's whisper and drum's heartbeat—
Each note carrying a romance sweet

You gather festivals like stars,
Seeing the same light
in distance
At lands and near temples,
Threading the world into a garland.

Your soul is a mirror of love—
precise as the curve of a tilak,
tender as the fragrant flowers
resting in your long dense hair,
yet vast as the sky expanse
where destiny is engraved in detail.



புத்தகத் திறனாய்வு

ஆசைக்கோர் அளவில்லை

இரா. சைலஜா சக்தி
சென்னை

ஆசிரியர்: இல. அம்பலவாணன்
வெளியீடு: காவ்யா பதிப்பகம்
வகை: புதினம்
முதல் பதிப்பு: 2025
பக்கங்கள்: 148
விலை: ரூ.170/-

"பொட்டு வைத்த பொழுதில்", "தொடரும் நிழலாய்", "தூய்மை", "பெயர்தல்" ஆகிய படைப்புகளின் தொடர்ச்சியாக திரு. இல. அம்பலவாணன் அவர்கள் எழுதிய புதினம் "ஆசைக்கோர் அளவில்லை".

மருத்துவமனையில் செவிலியராக வேலை பார்க்கும் அன்னமும், பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் கள மேற்பார்வையாளராகப் பணிபுரியும் இளவரசனும் காதல் திருமணம் புரிந்தவர்கள். இவர்களுக்குப் பள்ளியில் படிக்கும் இரு குழந்தைகள் உள்ளனர். வள்ளலார் நகரில் இருந்து நெடுங்காட்டில் இருக்கும் மருத்துவமனைக்கு செல்லும் அன்னத்தின் சிந்தனைகளுடன் தொடங்குகிறது கதை.

அன்னத்தின் அப்பா பூவராகன் பத்திரப் பதிவு எழுத்தர். புதுச்சேரி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். காரைக்கால் மக்களிடையே செல்வாக்கு மிகுந்தவர். எடுக்கப்படாத ஒரு தொலைபேசி அழைப்பு அன்னத்திற்கு பரிதவிப்புகளை ஏற்படுத்துகிறது. தனது மன வேதனைகளைச் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் தவிக்கும்போது கூட, பணிச்சூழலில் நேர்மையாக நடந்து கொள்கிறார். நோயாளிகளிடமும் அவர்களின் உறவினர்களிடமும் பொறுமையாகவும், அன்பாகவும் பேசுகிறார்.

திலகவதி என்ற செவிலியரும், அன்னமும் தங்கள் பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கின்றனர். "யார் இந்த கனகா? அவர் ஏன் அலைபேசியை எடுப்பதில்லை? இவர்களின் பிரச்சினைதான் என்ன?" என்ற சுவாரசியமான கேள்விகளோடு அத்தியாயங்கள் நகர்கின்றன.

"திருமகள் தொழில் முதலீட்டு நிறுவனம்" காட்டிய ஆசை வார்த்தைகளை நம்பி கனகாவிடம் பல லட்சங்களைக் கொடுத்து அன்னம் உட்பட பல பெண்கள் ஏமாறுகின்றனர். இந்த உண்மை தெரிய வரும்போது அன்னத்தின் கணவர் இளவரசன், தந்தை பூவராகன் இருவரும் பக்குவமாக நடந்து கொண்டு அன்னத்தை இந்தப் பிரச்சனையிலிருந்து காப்பாற்றுகின்றனர். மக்களிடமிருந்து பணத்தை வாங்கி நிதி நிறுவனத்திற்குக் கொடுத்த கனகா, அருள்குமார் உட்பட இன்னும் பலர் தலைமறைவாகின்றனர். கோவையில் தங்கி காவல்துறையை அணுகி தங்கள் பிரச்சனையைச் சொல்லி முறையிடுகின்றனர். இவர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்த மற்றவர்களும் காவல்துறையை நாடுகின்றனர். முடிவில் திருமகள் தொழில் முதலீட்டு நிறுவனத்தின் தலைவர் பரத்குமாரை காவல்துறை கைது செய்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணம் கிடைத்ததா, இல்லையா என்பதை விவரிக்கிறது "ஆசைக்கோர் அளவில்லை" என்ற இந்தப் புதினம்.

இது போன்ற மோசடிகளைப் பற்றி எத்தனை முறை செய்தித்தாள்களில் படித்தாலும் மீண்டும் மீண்டும் மக்கள் பேராசையினால் போலி நிதி நிறுவனங்களிடம் சிக்கி தங்கள் பணத்தை இழந்து ஏமாறுகிறார்கள். படித்து வேலையில் இருக்கும் அன்னம் கதாபாத்திரமும், ஓய்வு பெற்ற தலைமைக் காவலரின் மகளான கனகா கதாபாத்திரமும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

நாம் செய்தித்தாள்களில் படிப்பதுபோல நிதி நிறுவனத்தோடு தொடர்புடைய முகவர்கள் அனைவரும் ஏமாற்றுக்காரர்கள் இல்லை. அவர்களும் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது இக்கதையை வாசிக்கும்போது புரிகிறது. பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்கள் வாட்ஸ் அப் குரூப் அமைத்து தங்களது கவலைகளைப் பகிர்ந்து கொள்வது, பணம் பறிபோன அதிர்ச்சியில் விஜயன் மனநிலை பாதிக்கப்படுவது, நிதி நிறுவனத்தில் பணத்தை இழந்தவர்களின் குடும்பத்தார் எதிர்கொள்ளும் அவமானங்கள் என அனைத்தும் வேதனைக்குரியவை.

தொலைக்காட்சி, செய்தித்தாள் போன்ற ஊடகங்களில் ஒரு செய்தியாக மட்டுமே நாம் அறிந்த நிதி நிறுவன மோசடியின் முழுப் பின்னணியும் இப்புதினத்தில் விவரிக்கப்படுகிறது. ஆயிரம் ரூபாய் கட்டினால் ஆயிரத்து ஐநூறு ரூபாய் மதிப்புள்ள மளிகைப் பொருட்கள் வழங்கப்படும் என்ற கவர்ச்சிகரமான அறிவிப்பைச் செய்யும் அருள்குமாரும், கனகாவும், அவர்களைப் போன்ற பலரும் குறுகிய காலத்தில் அதிகமான பணத்தைச் சம்பாதிக்க நினைக்கின்றனர். இத்தகைய பேராசையை உடையவர்கள்தான் நிதி நிறுவன மோசடிக் கும்பலின் இலக்கு.

நிதி நிறுவனத்தின் குளிரூட்டப்பட்ட கட்டிடம், கட்டை விரலை உயர்த்திக் காட்டிய பதாகைகள், ஊழியர்களின் கம்பீரமான சீருடைகள், பணம் எண்ணும் இயந்திரங்கள் என அனைத்து ஆடம்பரங்களும் மக்களை ஈர்ப்பதற்காக திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்த உத்திகள். தொலைக்காட்சி நடிகை, பட்டிமன்றப் பேச்சாளர், முக்கிய அரசியல் பிரமுகர் என அனைவரும் நிதி நிறுவனத்தை விளம்பரப்படுத்தும்போது எந்த ஒரு சாமானியனும் நம்பி ஏமாறுவது இயல்பே. இத்தகைய மோசடிகளுக்குப் பின்னால் மக்களை ஏமாற்ற எவ்வளவு நயமான, நாகரீகமான வலை விரிக்கப்படுகிறது என்பதை இப்புதினம் விளக்குகிறது. மேலும்

பணத்தை இழந்தால் அதை எப்படித் திரும்பப் பெறுவது, அதற்கான சட்ட நடவடிக்கைகளை எவ்விதம் மேற்கொள்வது என்ற விழிப்புணர்வையும் தருகிறது. தமிழ்நாடு வைப்புத் தொகைப் பாதுகாப்பு சட்டம், பொருளாதாரக் குற்றப்பிரிவு பற்றிய விவரங்களை அறிய முடிகிறது.

இது தவிர காரைக்கால் பண்பலை, காரைக்கால் கடற்கரை, அரசலாறு, ஆனிப் பௌர்ணமியில் நடைபெறும் மாங்கனித் திருவிழா ஆகியவை கதைகளின் ஊடாக புதுச்சேரியின் அடையாளங்களை நமக்குக் காட்டுகிறது. பூவராகன் கதாபாத்திரம் மூலம், புதுச்சேரியின் வரலாறும், புதுச்சேரி சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று பிரஞ்சு இந்திய காந்தி என்று அழைக்கப்பட்ட எஸ். அரங்கசாமி நாயக்கர், காரைவேலன் லியான் சேன் ஜூன், காரைக்கால் பொன்னுத்தம்பி பிள்ளை, புதுச்சேரிப் பெண்களுக்கு வாக்குரிமை பெற்று தந்த புதுவை சரஸ்வதி சுப்பையா ஆகியோரின் வரலாறும் சொல்லப்பட்டுள்ளது.

மனைவி தன்னிடம் உண்மையை மறைத்ததை அறிந்து மனதிற்குள் வருந்தினாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனைவியை ஆறுதல்படுத்தும் இளவரசன் கம்பீரமானவராகத் தெரிகிறார். மகள் பணத் தேவையின் பொருட்டு தவறு செய்து விட்டாள் என்று அறிந்ததும் தனது சொத்துக்களைப் பங்கிட்டுக் கொடுக்கும் பக்குவமான தகப்பனாகப் பூவராகன் இருக்கிறார். பெண்கள் லட்சக்கணக்கான பணத்தை நிதி நிறுவனங்களில் முதலீடு செய்துவிட்டு அதைப் பற்றிய தகவல்களை வீட்டில் உள்ள ஆண்களிடம் கூறாமல் மறைப்பது தவறு என்பதை இந்த புதினம் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.

ஆசைக்கோர் அளவில்லை
இல.அம்பலவாணன்
காவ்யா பதிப்பகம்
விலை: ரூ.170
தொடர்புக்கு:
9840480232
துயரம் தரும் முதலீடு
மோசடிப்புக்கு ஏற்றாற்போல, பேராசையால் விளையும் பெருநஷ்டங்களைப் பேசுகிறது இந்த நாவல். நிதி நிறுவனங்களில் முதலீடு செய்பவர்களில் பலர், உழைப்பினில் இருந்து அல்லாமல் வேறு வழிகளில் பணப் பலன்கள் கிடைப்பதில் ஆர்வம் காட்டுபவர்கள் என்பதனை இதில் சுட்டுகிறார் நாவலாசிரியர் இல.அம்பலவாணன். அதன் பின்னே இருக்கும் அவர்களது துயரங்களையும் தேவைகளையும் கூடச் சொல்லிச் செல்கிறார்.
நிதி நிறுவனம் என்றால் ஒவ்வொரு ஊரிலும் பலர் ஏமாற்றத்தைச் சந்தித்திருப்பார்களே என்ற நம் சந்தேகங்களுக்குப் பதில் சொல்கிற வகையில், வெவ்வேறு இடங்கள், வெவ்வேறு மனிதர்கள் பற்றி கதை பேசுகிறது. புதுச்சேரி, காரைக்கால் வட்டாரங்களை, அவற்றின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களைத் தமது எழுத்தில் விவரித்த நாவலாசிரியர், பிற்பாடு கோவை, சேலம் என வெவ்வேறு ஊர்களின் பின்னணியில் சம்பவங்களை அடுக்கியிருக்கிறார்.
ஏமாற்றிய ஒன்று அல்லது சில நபர்கள் தவிர, பணம் கொடுத்து ஏமாந்தவர்கள் பல நிலைகளில் இருப்பதையும் அவர்கள் படும் பாட்டையும் பேசுகிறது இந்நூல். அவ்வனுபவங்களை அறிய விரும்புவோருக்கு 'இவ்வுலகம்' பிடிபடும்!
-பா.உதயசங்கரன்

"ஓரளவுக்கு உயரப் பறந்த பிறகு இறக்கைகள் உண்மையில்லை என்பது தெரியும்" என்று கனகாவின் அப்பா கூறுவது அனுபவத்திலிருந்து வரும் வார்த்தைகள். "நமக்கு அநாவசியமாகப்படுவது குழந்தைகளுக்கு அத்தியாவசியமாக இருக்கிறது" என்பது இக்காலத்திற்கு நூறு சதவீதம் பொருந்துகிறது. இந்த புதினத்தில் வரும் பெண் கதாபாத்திரங்கள் அனைவரும் அவள் என்பதற்குப் பதிலாக அவர் என்றே மரியாதையுடன் குறிப்பிடப்படுகிறார்கள். இப்புதினம் முழுவதும் ஆங்கிலக் கலப்பு இல்லாமல் தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இது வளரும் எழுத்தாளர்களுக்கு நல்ல வழிகாட்டுதலாக அமையும். நிதி நிறுவன மோசடிகளில் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது என்ற அக்கறையுடன், ஒரு வேளை அவர்கள் ஏமாந்தால் அதிலிருந்து மீள்வது எப்படி என்ற சட்ட வழிமுறைகளையும் தெளிவாகக் கூறியிருப்பதன் மூலம் ஆசிரியரின் சமூக அக்கறை புலப்படுகிறது. அதனால் "ஆசைக்கோர் அளவில்லை" என்ற இப்புதினம் பேராசைப்படும் மக்களுக்கு விழிப்புணர்வைத் தரும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

ARANYANI

VIJENI

CHAPTER - 8

AD 1924, 1977, 2017 – Chennai

Mathivaanan was sitting in front of the inscriptions of Indus Valley Civilisation. He knew each and every stroke of them. Fishes, the numbers of the scales in the fishes, lines, circles, crossing lines in the circles, hooks, and so on. And their arrangements, too. These scripts were deduced to be from six thousand years back. How did the people articulate these sounds? What did they mean by each sound? He was struggling with these questions. This inscription was scientifically done, so he had to decipher the symbols in a logical way.

The ancient man had converted his sounds to scripts. Now we are deciphering the scripts to sounds. Since it was written from right to left, some scholars felt that it had no relation with Tamil. But within a few days, the linguists disproved it. They were interested in proving the linguistic family of these scripts. Mathivanan wanted to prove that this was the earliest form of Tamil. He wished to follow a linguistic approach, so he searched for the clitics and other grammatical elements.

Mathivanan's higher official Ellis, five years elder than him, was in the metallurgy department and he was good at finding out the age of the metallic objects. He showed the same interest in archaeological activities, too. Usually, British men were perfect in administering their duties. As the excavations and the research were not going to generate any income for them, the fund allocation was not adequate, but their interest was exciting. Ellis had some of the Indus valley statues on his table. He protected every pebble as a precious diamond. He was surprised by the grains, stones, jewelry, iron tools, etc.

The Indus valley excavations were three-bedded and portrayed the life of the generations that lived many centuries before. Places, where people lived for thousands of years, would be having these multi-levels. So the early habitation must be around six thousand years ago, is inferred. Ellis was very happy and satisfied that he had a good student like Mathivaanan. He fixed it as all letters or scripts are symbols. Each one had a pictorial representation of some

object or activity or emotion. All scripts were in a group of fours or fives, but not as sentences. He told that all these groups of fours and fives make a sentence. These were similar to Tamil verbs acting as sentences as He ruled. He dug the well. He insisted Mathivanan find if there were any similarities between the inscriptions recorded from the surrounding a hundred miles.

Mathivaanan finally found one similarity between Tamil and those inscriptions. He told Ellis that he could identify the consonant clusters. Placing a dot on the top of the consonant was not in practice, so it was difficult to identify them. He showed a few examples to Ellis.

'Nice'

Look here, Sir, the short and long vowels and their differentiation.

'good'

The plural markers were also identified, and they were close to Tamil.

Wonderful, your research will be an eye-opener. We shall move forward in this study.

But...

Why do you hesitate, Sir? When the evidence proves this is related to a Dravidian civilization, the support for this study may decline. Do you feel sad?

Yes, Sir, of course.

Many sources were expecting the script to be Sanskrit and the civilization to be of Aryas, but it is going the other way and the financial aid is stopped, so the study had to come to an end.

Mathivanan smiled and told, 'I knew that, Sir. Anyway, the demon is dragged out and now it will take care of.'

All 10,000 samples were sent to the museum. Efforts were taken to wind up everything and put a full stop to the discussions. Later, some excavations might take place in Tamil Nadu and that would prove that Tamils lived in the river beds of Sindhu.

British government started an archaeology department in Calcutta to protect these objects. Its sub-division functioned in Madras, headed by Ellis and the other five scholars. Mathivaanan came with a new finding that the Indus inscriptions do not have vowelic consonants, but vowels and consonants are written one after another. Ellis appreciated him and wished to host

a dinner for his subordinates. On that day, Ellis received a transfer order from Madras to Meerut.

Mathivaanan has left a fish out of the water. Many Tamil scholars asked about his findings. He didn't know what to do with his papers. At that time, his parents arranged his marriage. The papers were protected in a trunk box and left as such. It was there even after his death. One day, his wife pulled that old box with a hooked stick and threw it away.

The importance of any object is decided by time or by the economic condition or by some irresponsible folks.

Anyway, Mathivanan's wife now decided that box of papers to be unimportant.

When Ramanathan felt the importance of the contents in that box, he had crossed thirty. He asked his mother, Where is dad's box? When his dad was alive, it was there and he believed it will be there after his death as well. His mother didn't reply. She was afraid, to tell the truth. When her son Ramanathan went to prison for Hindi agitation, that box seemed to be an evildoer for that family. She believed that her husband's spirit was lingering in that house because of that box and the papers within, so to chase the evil spirit, she threw its box away. She believed the dead ones coming to the house in want of their things will bring bad fortune to her, so she threw the box away.

She repeated what Mathivanan's parents did to him. All the parents feel marriage is the solution to curtail the social activities of men. Ramanathan's mother also did the same. She arranged a marriage for her son. His wife gave birth to three girls and passed away. Ramanathan didn't know whether to buy a minimum of jewelry for his daughters or get them some clothes to wear. He could do only one thing: ask his girls to recite Tamil poems and be happy with them. Ramanathan felt helpless that he couldn't preserve his dad's research papers. Whenever he looked at the vacant space left by the box, he felt the absence of a deity or a guardian spirit.

It struck six o'clock. If he starts now, he could reach the place of protest in time. Slogans against prime minister Indira Gandhi were written on a piece of paper and he wanted to use them in the protest. After the emergency was announced by Indira Gandhi, he noticed the agitation for Hindi was gradually on the rise. Today he has to speak on the topic, Love of Mother's tongue

Ramanathan told her daughter, 'If you learn ten couplets of Thirukkural and recite, I will get you a new skirt and blouse.' He left the home for the protest.

Ramanathan started his speech. He was in white attire, like a professor. He said, "Nowadays I am happy and proud to see a rise in the love with our mother tongue. People wrongly state that only during the Hindi agitation that Tamils started loving their language, No it is not, Tamils love their language for thousands and thousands of years. We had a Tamil Sangam, an association to develop the Tamil language and literature. We had three such Sangams. Kapatapuram and Madurai were the places of Tamil Sangam. Some say that Sangam is a Buddhist word, so before Buddhism, there was no Tamil. I refute this statement. We knew our history in full detail. What we have restored is only an almyrah full. Tamils would have not planned for a number as four hundred to write their love poems and war poems. He would have written in thousands but we have got only 400 in each. We have a word Kalakam in Tamil, to refer to an association of learned people.

Tamil kings sailed on ships and captured Kadaaram. These kings had trade links with Ilankai, Malay, and China. They had a well-built navy and a thorough knowledge of the water currents. They were able to challenge the cyclones and roaring waves.

At that time a man from the crowd raised his voice and told. 'You are making money out of Tamil'. He pointed at Ramanathan and blamed. He told 'After 1967 in DMK's rule, the welfare of the state is ruined. You are boasting about the glory of the past. What about the present?' The difference between Aryas and Dravidas are fake. This theory is disproved in the nineteen thirties. You are doing a good business with these fake issues. That man was arguing at the top of his voice. His eyes became red, and his nostrils widened. The mob psychology started. People turned against him and shouted back. Ramanathan continued his speech, 'When Hitler was admired, German classes were started in Madras and now when Hindi is admired, Hindhi classes shoot up'.

Saravanan was listening to Ramanathan's sharing of his speech. He couldn't get the answer to his question: Why do Tamils are after their language? There are Tamil men who honor the language of their life.

Ramanathan told Saravanan, 'Praise of Tamil has three thousand years of history and hatred towards Tamil also has the same long history.'

In the primitive age, men were afraid of darkness and worshipped the rising sun and full moon as Gods. When theism started, rationalism and atheism also started. Similarly, love and hatred in Tamil are of the same age.

People in different places identified themselves with an animal, bird, tree, flower, or some other natural thing, but only Tamils identify them with their language, so they are ready to become Tamil martyrs for their language. Love for language is like a natural instinct in the

minds of the Tamils. It can't be separated from them. It is registered in his brain as a genetic aspect.

Saravanan asked him, 'Is it good?'

It is necessary, so it is good.

Is it necessary?

'Tamil is from a family of languages flourished by the civilization in Tamil Nadu, in Sindhu, in Sumeria. Till date, it is a classic and living language with texts for literature and science. How can it be unnecessary?"

Once Saravanan's friend said, 'Nowadays some groups try to reap and enjoy the harvest of Tamil for the benefit of their own languages and ignore Tamil. Tamil is a language traveling from the origin of humankind.'

He remembered that conversation now. Ramanathan continued.

'The pain of being ignored is natural. This is because we don't have a nation for our Tamils. A national leader whose mother is not a Tamil lady will try to do good for his mother tongue and not for Tamil. He will try to bring down the importance of Tamil. But Tamils cannot agree with that, so they agitated. This is the main cause of anti-Hindi agitation.'

Ramanathan finished his narration.

Saravanan felt this was enough for his documentary.

Saravanan collected details about the Easter Islands. Richard Baille, a friend of Saravanan, told, the people of that island didn't know from where they migrated to that island. They worship a wooden plank as their forefather, a totem, in which letters similar to that of Indus scripts are engraved. They keep that plank in the sunlight and pray in front of it. So it can be inferred they have occupied that place for thousands of years. Richard Baille lost his admission for a software technology course by two marks, so he had to go for a History course. But he pretended to be having great interest and passion for learning history so he opted for that course. He had done some research on this Easter Island. His research showed the link between Easter Island and Tamils.

Seven thousand years ago, a group of traders from South India traveled northeast crossing Burma, Thailand, Japan, Korea, and so on. At that time, snow started to melt and sea water raised to 150 meters and covered a huge land mass. When the water drained into some higher

lands, they became islands. One of them is this Easter Island. This island was previously an Eastern country but is now reduced to islands. Many such islands remain there.

Saravanan stayed in Thailand for a month and completed his graphic work. There he went to Angorwhat and visited the temples built by the south Indian kings. He found many similarities between Tamil and the Thai language. In the Thai language, thongam means gold [thangam in Tamil], kamban means ship [kappal in Tamil], nhaaLikaa means time [only in Tamil], gur means teacher or preacher [Guru in Tamil], kai is hand [in Tamil it is the same], pavaay means doll [pavai in Tamil]... He had a question about why people call this Thai land [Motherland in Tamil]. He couldn't find answers to many such questions and he concluded, 'I've gone mad.'

Dev explained everything he experienced in his mind to Dr. Maran and finished as 'All this happened'.

Maran could connect Dev's thoughts, and he noted five points in his All Tab. They were, In 1925 Indus valley excavations were analyzed by a British man Ellis. Mathivaanan worked as his assistant. Mathivanana's son Ramanathan took part in the anti- Hindhi agitation. He had three daughters. The eldest, Thamarai worked with Saravanan, who was preparing a document on the agitation for a Malaysian TV channel.

Maran concluded this as a peculiar disease. He felt that some things had happened and some did not at all. Dev tried to co-relate things and link the past and future events with the present experiences. He felt like he experienced everything. The doctor wished to have some coffee. So he went near the machine and pressed the button.

All Tab showed a new number seeking permission to talk to him. He permitted. He heard the voice.

'I am from Israel. I heard that you have come across a peculiar brain. Is it right?

What do you say? I can't follow you.

A man came to you with a problem of having historical thoughts. Is that right?

The doctor was shocked.

How do you know?

'We want him'. It sounded like an order. The doctor became careful in his words.

No, I can't.

Ok, then we will take him

The speaker erased his number. He could have gotten Maran's number from the Xypher Network. He murmured 'stupid' and sipped his coffee.

உரம் அருளும் குப்பை நாச்சியார் - தவ்வை

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

தவ்வை என்று இலக்கியத் தமிழிலும் ஜேஷ்டா தேவி என்று வடமொழியிலும் குப்பை நாச்சியார் என்று நாட்டார் வழக்கிலும் குறிப்பிடப்பட்ட தெய்வம் எட்டாம் நூற்றாண்டில் தனி சந்நிதி பெறும் அரசச் செல்வாக்குடன் விளங்கி பதிமூன்றாம் நூற்றாண்டில் மூதேவி என்று இகழப்பட்டது. இத்தெய்வத்தின் வரலாறு மனித குல வரலாறு தொட்டு தமிழக மண்ணின் வரலாற்றுடன் இணைந்ததாகும்.

நாச்சியார் என்ற சொல் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தோன்றியது. அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், உயர்ந்த குடிப் பெண்கள், படித்த பெண்கள் போன்றோர் நாச்சியார் என்ற அடைமொழியுடன் வழங்கப்பட்டனர். நாச்சியார் அம்மன், நாச்சியார் திருமொழி, போன்று தெய்வங்களைக் குறிக்கவும் நாச்சியார் என்ற சொல் வழங்கப்பட்டது. வயலுக்கு உரமாக விளங்கும் குப்பைக்குரிய தெய்வத்தை நாட்டுப்புற வழக்கில் குப்பை நாசியார் என்று அழைத்தனர். குப்பை குழியில் விளக்கேற்றி மக்கள் வழிபட்டனர். அடுப்பங்கரை நாச்சியார், துடுப்புக் குழி நாச்சியார் என்றும் வழக்குகள் உண்டு.

மண் வளம் செழிக்கவும் மக்கள் நலம் காக்கவும் உதவும் வேளாண்மைத் தொழிலில் உரமிடுதல் பயிர் வளர்ச்சிக்கு உற்றதுணையாக விளங்குகிறது. இன்று ரசாயன உரங்கள் பெருகி பயிர் வளத்தையும் சத்தையும் கெடுத்து வருவதால் பலரும் இயற்கை உரம் மற்றும் பஞ்சகவ்யத்துக்கு மாறி வருகின்றனர். மாட்டுச் சாணியின் மகத்துவம் பற்றிய விழிப்புணர்வு பரவி வருகிறது. நெகிழ்மம் எனப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பெருகியிருப்பதால் அவை மண்ணில் கொட்டப்படும் பொது மட்குவதில்லை எனவே மட்கும் குப்பை, மட்காத குப்பை எனப் பிரித்துத் தாருங்கள் என்று தூய்மைப் பணியாளர்கள் கேட்டு தனித்தனியாக வாங்கிக் கொண்டு போகின்றனர். இன்றிருக்கும் குப்பை பற்றிய அறிவு அந்தக் காலத்திலும் நமது மக்களுக்கு இருந்தது. அவர்கள் வீட்டின் ஓரத்தில் ஒரு குழியை வெட்டி அங்கு மாட்டுச் சாணியை கொட்டி வைத்தனர். மரத்தில் இருந்து உதிர்ந்த இலை, தழை, நறுக்கிய காய்கறியின் தோல், விதை, கோட்டை போன்ற மட்கும் குப்பைகளைப் போட்டு வைத்தனர். இவை நன்கு மட்கிய பிறகு வண்டிகளில் அள்ளிச் சென்று நிலங்களில் உரமாகப் போட்டனர். சில இடங்களில் தீ வைத்து எரித்து சாம்பலை அள்ளிச் சென்று வயல்களில் தூவினர். கார்த்திகைத் திருநாள் அன்று அந்தக் குப்பை குழிக்குத் தீபம் ஏற்றி வழிபட்டனர். அங்கு எழுந்தருளித் தமக்கு அருள் பாலிப்பவளைக் குப்பை நாச்சியார் என்று அழைத்தனர்.

வேளாண்மைத் தொழிலில் விதைக்கு இந்திரன், மழைக்கு மாரி, ஏறி, குளம் கண்மாய்க்கு ஐயனார், கலப்பைக்குப் பலராமன், உழும் கலப்பை மற்றும் நெல் குத்தும் உலக்கைக்கு வராகி மற்றும் உரத்துக்கு தவ்வை எனப்படும் குப்பை நாச்சியாரை வணங்குவதைத் தமிழர்கள் தமது வேளாண் மரபாகக் கொண்டிருந்தனர்.

தவ்வை எனப்படும் மூத்த தேவி

உரத்துக்குரிய குப்பை நாச்சியார் தவ்வை

மருத நிலத்தில் வாழ்ந்த வேளாண் பெரு மக்கள் மண்ணிற்கு மேலும் வளம் ஊட்ட மாட்டு சாணம், இலை, தழை, ஆட்டுப் புழுக்கை, போன்ற இயற்'கை கழிவுப் பொருட்களை நிலத்திற்கு உரமாகப் போட்டனர். அன்றாடம் கூட்டிப்பெருக்கும் குப்பை கூளங்களை குழியிலிட்டு கழிவுநீரைப் பாய்ச்சி தொழு உரமாக்கினர். இதுவே மக்களுக்கு அன்று கிடைத்த இயற்கை உரமாகும். இதனால் மணிச்சத்து உரம் கிடைக்கும். எனவே மக்கள் குப்பைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினர். குப்பைக் குழியை உரக்குழி என்ற வகையில் தெய்வமாகப் போற்றினர்.

தவ்வை குப்பையைக் கூட்டி அள்ளப் பயன்படுத்தப்படும் விளக்குமாறை [துடைப்பத்தை] தன் கையில் வைத்திருப்பாள். கூட்டிய குப்பையை அள்ளிச் செல்ல பொதி சுமக்கும் கழுதையையும் கொண்டிருப்பாள். இறைவன் அளித்த இயற்கைத்

தூய்மையாளராக விளங்கும் காகத்தை தமது கொடியில் வைத்திருப்பாள். அருகில் காளையனைப் போன்ற குமாரனையும் கலையழகு பொருந்திய ஒரு குமாரத்தியையும் வைத்துக்கொண்டு அமர்ந்த நிலையில் காட்சி தரும் தவ்வை மூத்தவள் ஆவாள். தவ்வை என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் இவளைப் புராணிகர்கள் வடமொழியில் ஜேஷ்டா தேவி என்று அழைப்பர். பாற்கடலைக் கடையும் போது முதலில் தோன்றியவள் என்பதால் இவளை மூத்தவள் என்றும் மூ[த்த] தேவி என்று சுருக்கமாகவும் அழைத்தனர். இவள் மண்ணுக்கு உரமாகும் குப்பைக்கு உரியவள். அடுத்து வந்த இளையவள் ஸ்ரீ தேவி [தான்யலட்சுமி] மண்ணின் விளைச்சலால் கிடைக்கும் நெற்கதிருக்கு உரியவள். தவ்வை மண்ணுக்குத் திரும்பிப் போகும் குப்பைக்கு உரியவள் இலக்குமி மண்ணிலிருந்து வெளிவரும் கதிருக்கு உரியவள். இருவருமே வேளாண்மைக்கு முக்கியமானவர்கள்.

தவ்வை என்ற சொல் தமக்கை என்பதைக் குறிக்கும். இதன் எதிர்ச்சொல் தங்கை என்பதாகும். அவ்வை என்றால் வயதில் மூத்த பெண்மணி. இத்துடன் -ஆர் விகுதி சேர்க்கும் போது அவ்வையார் என்றாகிறது. தவ்வை என்பதும் தமக்கை என்பதும் ஒரு பொருள் தரும் இரு சொற்கள். தமக்கை என்பதில் இருந்து 'தம்'''' என்ற முன் ஒட்டு [prefixprefix] விலக்கப்பட்டு அக்கையார், அக்கச்சி [எதிர்ச்சொல் -தங்கச்சி], அக்கம்மா என்ற சொற்கள் வந்தன. ஆக தவ்வை எனபது நல்ல தமிழ்ச் சொல்.

தவ்வை ஆதி மனிதகுலத்தின் அக்கா - அம்மா அல்ல.

தவ்வையின் உருவம் அவள் வைத்திருக்கும் பொருட்கள் அவளது செயல்பாடு ஆகியவற்றை ஆராய்ந்தால் அவள் மனித குல வரலாற்றின் வேட்டைச் சமூகத்தின் பிரதிநிதியாகத் தோன்றுகிறாள். கொற்றவை கொலைத் தெய்வமாகக் காட்சி தருகிறாள். ஆனால் தவ்வை குழுவின் தலைவியான அக்காளாக விளங்குகிறாள். இன்றும் மலை வாழ் மக்களிடம் அச்சமுகத்தின் மூத்த பெண்ணை அக்கா என்று அழைக்கும் பழக்கம் தான் இருக்கிறதே தவிர அம்மா என்பதில்லை. தவ்வை தாய்த்தெய்வத்துக்கும் முற்பட்ட சமூகப் பிரதிநிதி ஆவாள். . அவளுடன் இருக்கும் காளையனான [மாந்தன்/குளிகன்] இளைஞனும், மாந்தி என்று புராணிகர்களால் அழைக்கப்படும் இளைஞியும் [மாந்தி] அவளது இனக்குழுவில் இருந்த ஆடவர் மற்றும் பெண்டிரைக் குறிக்கிறது. இவளுக்குப் பின் வந்த சமுகத்தில் தான் தாய் குழந்தைகள் என்ற உறவு முறை பேணப்படுகிறது. தாய்மையின் மகத்துவம் உணரப்படுகிறது.

தன் இனக்குழுவைப் பாதுகாக்கும் தலைவியே தமக்கை/தவ்வை

தவ்வையிடம் குழுவினரைப் பாதுகாப்பாக ஒவ்வோரிடத்திலும் தங்க வைத்து அழைத்துச் செல்லும் பொறுப்பு இருந்ததால் அதனை நிறைவேற்றும் பொருட்களே அவளிடம் காணப்படுகின்றன. காகமும் துடைப்பமும் தூய்மைக்குத் தேவைப்படுபவை. அவளது தூமாவதி என்ற பெயர் உலகம் அழிந்த பின்பு எஞ்சியிருக்கும் புகையை குறிக்கவில்லை. குழுவாகத் தங்கியிருக்கும் இடத்தில் குப்பைகளை கூட்டி எரிப்பதால் உண்டாகும் புகையைக் குறிக்கிறது. இக்கருத்தை நாம் இன்று வரை தமிழகத்தில்

பின்பற்றும் குப்பை நாச்சியார் வழிபாட்டு நடைமுறைகளில் இருந்து மீட்டுருவாக்கம் செய்கிறோம். குப்பையில் இருந்து வரும் புகையானது, பூச்சிகளையும் அதன் முட்டைகளையும் அழித்துவிடும். கார்த்திகை திருநாள் அன்று இவளுக்கு ஏற்றப்படும் தீபமும் சொக்கப்பனை கொளுத்துதலும் அதனால் ஏற்படும் புகையும் சிறுவர்கள் சுளுந்து சுற்றுவதால் உண்டாகும் தீப்பொறியும் புகையும் பூச்சிகளை அழிக்கவே பயன்படுகிறது. ஐப்பசி கார்த்திகை மாதத்தில் பெய்யும் அடைமழையும் கனமழையும் பூச்சிகளின் பெருக்கத்துக்கு காரணமாக அமைகிறது. எனவே புகை உண்டாக்குதல அவசியமாகிறது. எனவே தவ்வை அல்லது அக்காள் என்பது ஆதி சமுதாயத்தின் தலைவியை குறிக்கும் சொல்லே தவிர தரித்திரம், பீடையைக் குறிக்கும் சொல் அல்ல. அக்காள், அதன் பின்பு வந்த அம்மா போன்ற சொற்களின் தலைமைத்துவக் குறியீட்டை வெறுத்த ஆணாதிக்க சமுதாயம் தமது வசைச் சொற்களில் இவ்விரு உறவுகளையும் இழிவுபடுத்தின. அதே வேளையில் தங்கை, மாமியார், கொழுந்தியாள் என்ற பெண்கள் சார்ந்த உறவுப் பெயர்களை வசைசொர்களில் பயன்படுத்தவில்லை. இக்கருத்தினாலும் அக்காள் [தவ்வை] என்ற மரபின் மேன்மையை அறியலாம்

உரத்துக்குரிய நாச்சியாராக உயர்ந்த தவ்வை

தவ்வையின் சிற்பங்கள் இன்றும் வயற்காடுகளுக்கு அருகில் காணக் கிடைக்கின்றன. இவளது சிலைகளை கோயிலில் இருந்து வெளியேற்றினாலும் கூட வேளாண் மக்கள் தமது வயல்களுக்கு அருகில் வைத்துக் கொண்டனர். அதிர்ஷ்டம் கேட்டவள் இவள் முகத்தில் விழிக்கக் கூடாது என்று நம்பி தூக்கி எறியவில்லை. காரணம், இலை தழைகளைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்த செயலே உரத்துக்கு வழிகோலியது. வேளாண் சமுகம் தோன்றியதும் இத் தவ்வை எனப்படும் அக்காளை மக்கள் மறந்து ஒதுக்கிவிடவில்லை காரணம் அவள் கற்றுத்தந்த சமூகப் பாடம். குப்பைகளைக் கூட்டி எடுத்து குவித்து எரியூட்டினால் அதன் சாம்பல் மண்ணுக்கு உரமாகும்; மண்ணை வளமாக்கும்; புகை பூச்சி பொட்டுக்களை விரட்டும். இதனால் மண்ணும் வளம் பெறும்; மக்களும் நோயற்ற வாழ்க்கை வாழ்ந்து நலம் பெறுவர் என்ற அரிய கருத்தைத் தவ்வையிடம் இருந்து பெற்றதால் அவளைக் குப்பை நாச்சியாராக்கி வழிபடுகின்றனர். உரத்துக்குரியவளாக குப்பை நாச்சியார் தமிழர் மரபில் வேளாண் தெய்வங்களுள் ஒருத்தியாக உயர்ந்துவிட்டாள். ஆனால் பௌராணிகம் அவளைத் தரித்திரத்துக்கு உரியவளாக்கி அவள் முகத்தில் விழிக்கக் கூடாது என்று கோயில் சந்நிதிகளில் அவல் சிற்பத்தை மண்ணை நோக்கி கவிழ்த்துப் போட்டுவிட்டனர்.

தவ்வைக்குரிய பிற பெயர்கள்

தவ்வையை நீளா தேவி, ஜேஷ்டா தேவி என்று பலவாறு அழைத்தனர். வடமொழியில் புராணிகர்கள் ஜேஷ்டா தேவி என்று அழைத்து அவளுக்கு புராணங்களில் இடமளித்தனர். ஜேஷ்டா தேவி புகை போன்றவள் உலகம் அழிந்த பிறகும் புகையாக நில்வுவாள். எனவே இவளைத் தூமாவதி என்றும் [தூமா என்றால் புகை.] தூம்ர வராகி என்றும் அழைத்தனர். சிலர் ஏழு கன்னியரில் ஒருத்தியாகவும் கொண்டு வழிபட்டு வ்ந்தனர். தலையைச் சீவி

முடிக்காமல் அப்படியே ஒற்றையாக விட்டிருப்பவள் எனபதால் இவளை ஏகவேணி [ஒற்றைச்சடையாள்] என்றும் அழைத்தனர்.

சக்தி பீடத்தின் வடிவான மேரு மலையில் ஒன்பது படிக்கட்டுகள் உள்ளன. அவற்றில் தவ்வை இரண்டாம் படிக்கட்டில் இருக்கிறாள். அதாவது நவாபரனத்தில் இரண்டாவது ஆபரணம் ஆவாள்.

தவ்வையின் உருவ அமைப்பு

தமழ் நிகண்டுகள் தவ்வைக்கு மா முகடி, கரிய சேட்டை, காக்கை கொடியோள், பழையோள், யமி எனப் பதினாறு பெயர்களைக் குறிப்பிடுகின்றன. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சிற்பக் கலை உருவாகிறது. அப்போது செதுக்கப்பட்ட தவ்வையின் சிலையில் அவள் பெரிய மார்பகங்களும் மோட்டு வயிறும் கொண்டு சற்று கால்களை அகட்டி உட்கார்ந்த நிலையில் இருப்பாள். அவளது காககொடியும் கழுதை வாகனமும் உடம் இருக்கும். ஒரு பக்கம் மாட்டுத் தலையுடன் மகன் மாந்தனும் [குளிகன்] மறு பக்கம் மகள் மாந்தியும் இருப்பர். ஒரு கையை அபய ஹஸ்தமாகவும் மறு கையில் விளக்குமாறும் வைத்திருப்பாள். அபய கரத்துடன் தோன்றுவதால் இவள் அழிவுத் தெய்வம் அல்ல; அருள் பாலிக்கும் கருணைத் தெய்வம். கொலைக்கருவி எதுவும் ஏந்தியிராத சாந்தரூபினி.

தமிழிலக்கியத்தில் தவ்வை

தமிழ்க் காப்பியங்களில் தவ்வை என்ற சொல் தமக்கை மற்றும் தாய் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது. 'கலம்புரி அகவல் தவ்வையர் [சிந்தாமணி 184], 'தாமரை தவ்வை தன்னோடும் கூடிய''' [சிலம்பு 15-8o0o] என்றும் 'பட்டோள் தவ்வை படு துயர் கண்டு'' [7-1o04], தவ்வையும் தாயும் தழியினர் [பெருங்கதை 1-33]. திருக்குறளிலும் இச்சொல் [167] இடம்பெற்றுள்ளது. தவ்வை மழைக்குரிய தெய்வமான வருணனின் மனைவியாக கருதப்பட்டாள். கொற்றவைக்கு அடுத்த நிலையில் எண்ணிக்கையில் தவ்வை என்ற சொல் மூத்தவள், பழையோள் என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் தவ்வை

.தமிழ்நாட்டில் எட்டாம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை அவள் வழிபடு தெய்வமாக விளங்கினாள். அவளுக்குக் கோயிலில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் தெலுங்கு கன்னடம் உருது மலையாளம் பேசும் மன்னர்களின் ஆட்சி தமிழ்நாட்டில் நடந்ததனால் தமிழ் தெய்வமான தவ்வை மூதேவியாக இகழ்ந்துரைக்கப்பட்டாள். பல்லவர் காலந்தொட்டு தவ்வையை வட மொழியில் ஜேஷ்டா தேவி என்று அழைத்தனர்

பல்லவர் காலத்தில் ஜேஷ்டா தேவி வழிபாடு தமிழ்நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்தது. காஞ்சி கைலாசநாதர் கோயிலில் தவ்வைக்கென தனிச் சந்நிதி இருந்தது. கோயில்களில் வட மேற்கு மூலையில் தவ்வை இடம்பெற்றாள். சைவ சமய எழுச்சிக்குப் பிறகு அம்மூலையில் உள்ள சந்நிதியில் கஜலட்சுமியை வைத்தனர். கோயிலின் வெளிச்சுற்றுக்குத் தவ்வையை இடம் மாற்றினர். நந்திவர்ம பல்லவனுக்கு தவ்வையே குல தெய்வமாக விளங்கினாள். பிற்காலச் சோழர்களும் தவ்வை வழிபட்டனர். இவர்களின் காலத்தில் கட்டப்பட்ட மேலப்பழுவூர் கோயிலில் தவ்வைக்குத் தனிச் சந்நிதி உண்டு. பிற்காலப்பாண்டியர் காலத்திலும் தவ்வை வழிபடு தெய்வமாக விளங்கினாள். மதுரைக்கு அருகில் திருப்பரங்குன்றத்தில் இவளுக்குக் ஒரு பெண் எழுப்பிய குடவரை கோயில் உண்டு. பாண்டிய மன்னன் மாறன் சடையனின் சேனாதிபதியான சாத்தான் கணபதியும் அவனது மனைவி நக்கன் கொற்றியும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஜேஷ்டா தேவி எனப்படும் தவ்வைக்குக் கோயில் எழுப்பியதாக இக்கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றது. எட்டாம் நூற்றாண்டில் தவ்வை வழிபாடு தமிழகத்தில் செல்வாக்குடன் திகழ்ந்துள்ளது. பவுத்தர்கள் தவ்வையைத் தமது தெய்வங்களில் ஒன்றாகக் கருதினர்.

பத்தாம் நூற்றாண்டு வரை தவ்வையை வளமைத் தெய்வமாக வணங்கி வந்தனர். ஆறடி உயரமும் மூன்றடி அகலமும் கொண்ட தவ்வையின் சிலையொன்று மண்ணுக்குள் புதைந்த நடுகல் வடிவில் திருப்பத்தூர் அருகே மடவார் வளாகம் பகுதியில் கிடைத்தது. இன்று சந்நிதியில் தரையில் கவிழ்க்கப்பட்டிருக்கும் சிலையைக் கொண்ட உத்தரமேரூர் கோயில் கல்வெட்டொன்று தொண்டை மன்னன் பார்த்திபேந்திர வர்மன் 1148 குழி நிலம் மானியமாக தவ்வைக்கு வழங்கியதாகத் தெரிவிக்கிறது. பழனி பகுதியில் 13ஆம் நூற்றாண்டு வரை தவ்வைக்கு வழிபாடுகள் நடத்தப் பெற்றுள்ளன.

பழையோள் தவ்வை

தவ்வையின் மிகப் பழைய கோயில் கி.பி. ஒன்பதாம் நூ'ற்றாண்டைச் சேர்ந்ததாகும். அக்கோயில் சோமாண்டார் குடி என்ற ஊரில் உள்ளது. இவ்வூர் விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி அருகே உள்ளது. இங்குள்ள சோமீஸ்வரமுடையார் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூலவரான சிவபெருமானைக் காட்டிலும் பழைய தெய்வம் இங்கு இருக்கும் தவ்வை ஆவாள்.. அதாவது தவ்வையின் கோயிலில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துள்ளனர் என்பதே வரலாற்று உண்மை..

கோயில்களில் ஜேஷ்டா தேவி

சிவன் கோயிலில் காணப்படும் மொத்தம் எட்டுப் பரிவார தெய்வங்களுள் ஒருத்தியாக ஜேஷ்டா தேவி என்ற தவ்வையும் இடம்பெற்றாள். சிவன் சந்நிதியின் உள் பிரகாரத்தில் பிள்ளையார், முருகன், சண்டிகேசுவரர், சூரியன், சந்திரன், பைரவர், சப்தமாதர் மற்றும் ஜேஷ்டா தேவியும் [இப்போது கஜலட்சுமி] இடம்பெற்றனர். பவுத்தர்கள் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்த திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம் பகுதிகளில் தவ்வைக்கு கௌயில்கள் இருந்தன என்பதை இன்றும் அதன் எச்சங்கள் வழி அறியலாம். ஜேஷ்டா தேவியை அவளது பழம்பெருமையைக் கருத்தில் கொண்டு அவளுக்கிருந்த மக்கள் செல்வாக்கினை அறிந்து பவுத்தர்கள் மற்றும் சமணர்கள் என இருதரப்பினரும் தம்முடைய தெய்வமாகவும் வந்தனர். பக்தி இயக்கமும் சைவ சமய எழுச்சியும் இவளை மொத்தமாகப் புறக்கணித்துவிட்டன. தவ்வை ஜேஷ்டா தேவி என்ற பெயரில் தூக்கம் சோம்பல் போன்றவற்றின் தேவதையாகக் கருதப்பட்டாள். [இனி ஜேஷ்டா தேவி குறித்து வழங்கப்படும் தகவலகளைக் காண்போம்]

புராணங்களில் ஜேஷ்டாதேவியாக தக்கவைக்கப்பட்ட தவ்வை

மூத்தவள் என்ற பொருளில் வழங்கப்படும் ஜேஷ்டா தேவியைப் பற்றி, பூர்வ காரணாகமம் மற்றும் லிங்க புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. தட்சனின் யாகத்தில் விழுந்த பார்வதி கரிந்து போய் தூமாவதியாக எழுந்தாள் என்பதும் அவள் யாகத்தில் இருந்து எழுந்த போது ஏழு உருவங்கள் எடுத்தாள்; அவற்றில் ஏழாவது தூமாவதி என்னும் கரிந்த புகை உருவம் என்றும் மூத்தவளைப் பார்வதியின் திருவுருவமாக காட்ட புராணங்கள் முயன்றுள்ளன. இதுவே அவளை வரலாற்றில் தக்க வைக்கும் முயற்சி ஆகும்.

ஜேஷ்டா தேவியின் காயத்ரி

ஜேஷ்டா தேவியை கரிந்த உருவத்தினள்; புகை வடிவானவள், சம்ஹார தேவதை, என்ற பொருளில் காயத்ரி ஜபம் இயற்றப்பட்டது.

ஓம் தூமாவத்யை வித்மஹி
ஸ்மஹாரின்யை
தீ மஹி தன்னோ; தூமோ ப்ரசோதயாத்

ஜேஷ்டாதேவியின் வேறு பெயர்களும் இயல்புகளும்

மூதேவி எனப்படும் ஜேஷ்டா தேவி அழுக்கு ஆடை உடுத்துவாள்; சீரற்ற பற்களை உடையவள்; முறம் போன்ற வயிறும் கருத்த நிறமும் விரித்த தலைமுடியும் கொண்டவள்; காகக் கொடியும் கழுதை வாகனமும் உடையவள். இவள் கலகத்தைத் தூண்டுவாள். ஜாதகத்தில் 12இல் ராகு அல்லது சுக்கிரனும் புதனும் சேர்ந்து இருந்தால் இந்த ஜாதகரிடம் மூதேவி குடிகொண்டிருப்பாள். இவளைத் தூமாவதி, தூம்ர வராகி, யமி, ஏக வேணி என்று பல பெயர்களால் அழைப்பர்.



ஜேஷ்டா தேவி தூமாவதியான பின்னர் இவளுக்கு வேறு சில இயல்புகளும் கதைகளும் சேர்க்கப்படுகின்றன.. பிரளயத்துக்கும் பாழ் என்ற நிலைக்கும் இடையிலான வெற்றிடத்துக்கு உரியவள் தூமாவதி. தச மகா வித்யை என்ற பத்துப் பேரில் ஏழாவதாக இவள் இருக்கிறாள். விஷ்ணுவின் யோக மாயையாகவும் தூமாவதி கருதப்படுகிறாள்.

தூம்ர வராகி என்ற பெயரில் இவளைக் குறிப்பிடும் போது இவளது பிறப்பிடம் பூபுரம் எனப்படும் பதினாறாவது ஆவரணம் ஆகிறது. இவள் சிந்தாமணி கிருகத்தின் நுழைவு வாயிலில் காவல் தெய்வமாக இருப்பாள். பௌர்ணமியில் இரவு எட்டும் முதல் பத்து மணிக்குள் இவளுக்கு பூஜைகள் செய்ய வேண்டும். தேய்பிறை பஞ்சமி இவளுக்குரிய திதி ஆகும். உகந்த உணவு சர்க்கரைவள்ளிக் கிழங்கு. தூம்ர வராகியை ஜேஷ்டா தேவியுடன் இணைக்காமல் வராகியின் பண்பு நலங்களுக்குள் கொண்டு வருகின்றனர்.

ஜேஷ்டா தேவியை வழிபட ஏற்ற நாட்கள்

ஜேஷ்டா தேவிக்குரிய மாதம் ஆனி மாதம் ஆகும்; நட்சத்திரம் கேட்டை; கேட்டை நட்சத்திரத்தில் ராகு காலத்தில் வணங்கலாம். ஆனி மாதத்தின் தே பிறை சதுர்த்தசி, அமாவாசை, பிரதமை ஆகிய நாட்களில் சிறப்புப் பூசைகள் நடத்தலாம். ஒரே நாளில் மூன்று நட்சத்திரங்கள் வரும் திரிதின நட்சத்திர நாளில் அல்லது மூன்று நாட்களுக்கு ஒரே நட்சத்திரம் வரும் நாளில் ஜேஷ்டா தேவியை வழிபாடு செய்வது சிறப்பான பலன்களைத் தரும்.

ஜேஷ்டா தேவி இருக்கும் கோயில்கள்

திருக்கொண்டிசுவரத்தில் உள்ள பசுபதிச்வரர் கோயிலில் ஜேஷ்டா தேவி அனுக்கிரக தேவதையாக இருக்கிறாள். பக்தர்கள் வழிபட்டு அவள் அருளைப் பெறுகின்றனர். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் தனி சந்நிதி கொண்டுள்ளாள். செங்கல்பட்டுக்கு அருகில் வல்லம் வசந்திசுவரம் என்ற ஊரில் உள்ள கோயிலில் ஜேஷ்டா தேவிக்கு சிலை உள்ளது. உள்ளாவூரில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில் ஆராதனையின்றி ஜேஷ்டா தேவி சிற்பம் காணப்படுகிறது. வாரணாசியிலும் அஸ்ஸாம், கௌஹாத்தியிலும் ஜேஷ்டா தேவிக்கு கோயில்கள் உள்ளன. காஷ்மீரில் தூம்ரா காளி என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளாள். திருப்பதியில் நீளாதேவி என்ற பெயரில் இத்தெய்வத்துக்கு நீளாத்ரி மலையில் கோயில் உண்டு.



திருவாரூர் தியாகராஜர் கோயிலில் கமலமுனிச் சித்தர் பீடத்தின் வாயிலில் ஜேஷ்டா தேவி சிலை உள்ளது. பெரணமல்லூர் திருக்கரேசுவரர் கோயிலில் , திரு ராமசமுத்திரம் வாலீசுவரர் கோயிலில் திருமுக்கூடல் அக்த்திசுவரர் கோயிலில், மோகனூர் அசலதிச்வரர் கோயிலின் திருச்சுற்றுப் பகுதியில் இச்சிலை வைக்கப்பட்டுள்ளது. திருவானைக்காவில்

உள்ள ஜம்புகேஸ்வரர் கோயிலில் சனிஸ்வரன் வைக்கப்பட்டு ஜேஷ்டா தேவிக்குச் செய்யப்படும் பூஜை சனிச்வரனுக்குச் செய்யபடுகிறது. கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலில் மங்களாம்பிகை சந்நிதிக்கு வடமேற்கே சிலை வைக்கப்பட்டுள்ளது. திருச்சி உய்யக் கொண்டான் மலையில் உஜ்ஜிவன நாதர் கோயிலில் வித்தியாசமான உருவ அமைப்பில் ஜேஷ்டா தேவி சிலை காணப்படுகிறது. சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் தென்மேற்கு மூலையில் ஜேஷ்டா தேவி தனிக்கல்லாகக் காட்சி தருகிறாள். கடலூருக்கு அருகே உள்ள ஓரையூர் சிவன் கோயிலில் ஜேஷ்டா தேவி சிலை இடம் பெற்றுள்ளது. . தஞ்சைக்கு அருகில் உள்ள குளித்தலையில் சிவன் கோயிலில் ஜேஷ்டா தேவி சிற்பம் காணப்படுகிறது. நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுகாவில் வழுவூர் வீரட்டானேஸ்வரர் கோயிலில் மேற்கு சுற்றில் தென் மேற்கு மூலையில் பீடத்தில் ஜேஷ்டா தேவி எழுந்தருளி உள்ளாள். இச்சிற்பம் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

செல்வநாயகி தவ்வை

எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தவ்வையின் சிற்பங்கள் பெரும்பாக்கம், தென் சிறுவலூர், பேரங்கியூர் ஆகிய ஊர்களில் காணக் கிடைக்கின்றன. இச்சிற்பங்களில் அவள் தரித்திரம் பிடித்தவள் கிடையாது. பணப்பேழையுடன் காணப்படும் செல்வநாயகி.

தவ்வையின் குழந்தைகள்

தவ்வை அல்லது ஜேஷ்டா தேவியின் அருகில் காணப்படும் இருவரை அவளது பிள்ளைகள் என்பதும்; மகன் மாந்தன் என்பதும் மகளை மாந்தி என்பதும் அவர்களும் தாயைப் போலச் சோம்பேறி எனக் கொள்வதாகும். சிலர் தவ்வையின் மகனை குளிகன் என்று நல்ல செயல்களுக்குரியவனாகக் கருதுகின்றனர். இவன் மாட்டுத்தலை உடையவனாக சிலை வடிக்கப்பட்டுள்ளான். இவனை காளையன் எனக் கொண்டு வேளாண் தொழிலில் உழவுமாடு வண்டி மாடு போன்ற காளையாகக் கொள்ள வேண்டும். தவ்வை வேட்டை சமுகத்தின் ஆதி தலைவி அதாவது அக்காள். அவள் தாய்த் தெய்வம் கிடையாது; அதற்கும் முந்திய தலைமை தெய்வம். வேளாண் மரபினர் அவளது தொன்மையைப் போற்றி உரத்தின் மேன்மை கருதி அவளைக் குப்பை நாச்சியாராகக் கொண்டு வயல் வெளிகளில் அவளது சிலையை வைத்து வணங்கினர். தொல்லியல் ஆய்வுத் துறையினர் தவ்வை அலல்து ஜேஷ்டா தேவியின் சிலைகளை வைகை, காவிரி மற்றும் பாலாற்று பகுதிகளில் மருத நிலத்தில் கண்டறிந்துள்ளனர். இவற்றை அருங்காட்சியகங்களில் கொண்டு சேர்த்தனர். தவ்வை இனக்குழுச் சமுதாயத்தின் முதல் தலைவி ஆவாள். வேளாண் சமுதாயத்தினர் போற்றிய உரத்துக்குரிய தெய்வமும் ஆவாள். அவளுடன் இருக்கும் ஆணும் பெண்ணும் இனக்குழுவின் ஆண் பெண் பிரதிநிகள் ஆவர். அவளிடம் இருக்கும் பொருட்கள் அவளது குழுவினரைப் பாதுகாக்க உதவியவை ஆகும். அவள் கூட்டிச் சேர்த்து எரிக்கும் குப்பையும் புகையும் வேளாண்மைச் சமூகத்திற்கு விலை மதிப்பில்லா உரம் ஆகும். மக்களுக்கு மண்வளம் காக்கும் மணிச்’சத்து ஆகும்.

C.B. முத்தம்மா

இந்தியாவின் முதல் பெண் Indian Civil Service எனும் இந்திய குடிமைப் பணிகள் அதிகாரியாக தேர்வானவர்.

அதற்காக முத்தம்மா அவர்கள் நடத்திய போராட்டங்கள் நெடியவை..

கர்நாடகாவின் குடகு மாவட்டத்தின் விராஜ்பேட் நகரில் 1924-ல் பிறந்தவர் முத்தம்மா. தனது 9-வது வயதில், தனது தந்தையைப் இழந்தார். பின்னர் அவரது தாய் தனது நான்கு குழந்தைகளையும் நன்கு படிக்க வைத்தார். மடிகேரி புனித ஜோசப் பெண்கள் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்த முத்தம்மா, சென்னை பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை தொடர்ந்தார். மூன்று தங்கப் பதக்கங்களுடன் படிப்பை முடித்த அவர், சென்னை பிரெசிடென்சி கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டப் படிப்பையும் முடித்தார்.

பின்னர் ஆண்கள் மட்டுமே தேர்ச்சிப் பெற்றுவந்த இந்தியக் குடிமையுரிமைத் தேர்வில் 1949 இல் பெண்ணாக முதன் முதலில் தேர்ச்சியடைந்ததோடு, வெளியுறவுத் துறையில் பணிக்குச் சேர்கிறார். சவால்களை துணிவுடன் வெல்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்த முத்தம்மா தனது பணிப் பயணத்தில் ஏராளமான ஆண் அதிகாரிகளின் ஆதிக்கத்தையும் எதிர்கொள்கிறார்.

நமது மண்ணில் கல்வி என்பது எல்லோருக்குமானதாக என்றும் இருந்ததில்லை. தற்போதைய மாறுதல்களும் உடனடியாக நடந்து விடவும் இல்லை. மறுக்கப்பட்ட தளங்களில் பெண்கள் ஒவ்வோர் அடியையும் நிதானமாக அதே சமயம் அழுத்தமாகவும் பதிவு செய்து வருகின்றனர். அப்படி முதன்முறையாகப் பெண்ணாக ஒருவர் புதிய துறைக்குப் பதவிக்கு வந்தபின் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வது ஒருபுறம் என்றால் சி.பி. முத்தம்மாவுக்குப் இன்னொரு புறம் அரசின் விதிமுறைகளும் பெரும் தடையாக இருந்தது.

வெளியுறவுத் துறையில் அப்போதிருந்த பணி விதிகளின் படி, பதவியில் இருக்கும் பெண்ணொருவர், அவரின் திருமணத்துக்கு அரசிடம் கட்டாயம் முன் அனுமதி பெற வேண்டும். கூடவே, திருமண வாழ்க்கை அந்தப் பதவிக்குத் தடையாக இருக்கும் என அரசு கருதினால், அந்தப் பெண் அதிகாரி ராஜினாமா செய்துவிட வேண்டும். மேலும், திருமணமான பெண் இந்தப் பதவியைப் பெற உரிமை கோர முடியாது என்பதும் எழுதப்பட்ட சட்டம்.

இந்த விதிமுறைகளை அறிந்து அதிர்ச்சியடைந்த சி.பி.முத்தம்மா, ஒரு வேலையைச் சரியாகச் செய்ய திறமையைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, ஆண், பெண் பாகுபாடு கூடாது எனக் கருதினார். அதனால் அந்த விதிகளுக்கு எதிராக வழக்கு ஒன்றையும் தொடுத்தார். இந்த விதிகள் பெண்கள் உரிமைக்கு எதிராக இருப்பதோடு பாலின சமத்துவத்துக்கும் எதிராகவும் இருப்பதாகக் குறிப்பிட்டதோடு, பதவி உயர்வுக்கும் இடையூறாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். அக்காலத்தில் இந்த வழக்கு பரபரப்பாகப் பேசப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த வி.ஆர். கிருஷ்ணய்யர் தலைமையிலான மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வு,

"இந்தியாவில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் சாதி, மத, இன, பால் உள்ளிட்டவற்றால் பாகுபாடு பேணக்கூடாது என்று சொல்கிறது. மாறாக, வெளியுறவுப் பணிக்கான விதிகள் இதற்கு எதிராக இருக்கிறது வெளியுறவுத் துறை அந்த விதிகளை நீக்கப்பட வேண்டும்." என்று தீர்ப்பு வழங்கியது. இந்திய பெண்கள் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு இது.

வெளியுறவுத் துறையின் இந்த முடிவால் முத்தம்மாவுக்குப் பதவி உயர்வும் கிடைக்கிறது. பின்னர் நெதர்லாந்து நாட்டின் இந்திய தூதராகவும் முத்தம்மாள் நியமிக்கப்பட்டுகிறார். தொடர்ந்து இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் தூதர் எனும் பெருமையையும் பெற்றார். அதன்பின், முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் அரசுப் பணிகளில் திறம்படப் பணியாற்றினார். பெண்களுக்காக முத்தம்மா மேற்கொண்ட நீதிப் போராட்டம் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும்.

குறிப்பாக, முத்தம்மா தன் இறுதிக் காலம் வரை சமூக அக்கறையுடன் வாழ்ந்துள்ளார். தில்லியில் தனக்கு சொந்தமான 15 ஏக்கர் நிலத்தை மருத்துவமனை ஒன்றிற்கு தானமாகவும் அளித்துள்ளார். கர்நாடகத்தில் நான் நேரில் சந்தித்து பேச விருப்பமாக இருந்த ஆளுமைகளில் முத்தம்மாவும் ஒருவர்.

வாய்க்கவில்லை..

முத்தம்மா 2009-ம் ஆண்டு அக்டோபர் 14 -ம் நாள் பெங்களூரில் காலமானார்.

சாதிக்க நினைக்கும் இந்தியப் பெண்களுக்கு முத்தம்மாவின் வாழ்க்கைப் பயணம் பல விஷயங்களை சொல்லிச் செல்கிறது.

- முக நூல் பதிவு

Book Release of Glimpses of Kamba Ramayana by Dr. Chandrika, in Sydney

The English version of Tamil Kamba Ramayanam was released in Sydney last week. Dr Chandrika Subramaniyan, lawyer and writer has chosen 108 songs from the Kamban's Ramayanam and translated them into English, transliteration, Tamil meaning and English meaning for each song. The book was titled as 'Glimpses of Kambaramayanam.'

Kamban,is a versatile Tamil poet of 7th century ,who has produced 10,600 songs following Valmiki's Sanskrit ramayanam in creating it in Tamil.

The event was presided by the time was scholar from Sydney Mr Thiru Thirunanda Kumar. The book release was part of celebrations associated with honouring and praising famous Tamil poet Subramanya Bharathiar.

Dr Hugh MCDERMOTT MP for prospect, released the book and the first copy was received by Dr Janaki Raman Consulate General of Indian consulate in Sydney .

The event included additional book releases written by two sydney-based writers. Mr Vijay Singh released a book on ' Siddha way of life' and a poetic contribution of Mr Kumar was also released at the event.

The book was reviewed by a Tamil youngster Akalavan Sriskandarajan

வேண்டும் இன்னுமொரு விடுதலை

கண்ணியம் நிறைந்த காரிகையின் கனவுகள்
கண்கள் கலங்காது நனவாகி தொடரவே
காலச் சூழற்சியில் கயமையில் சிக்காமல்,
கவலையின்றி வாழ்ந்திட
வேண்டும்
இன்னுமொரு விடுதலை

பேதையென எண்ணிப் பயன்படுத்தும் உலகம்
பெண்மையின் மான்பைப் பேண மறந்ததுவோ?
வீரம் மறைக்கப்பட்டு வீண் பழி சுமந்து,
விடியலைத் தேடியே வேதனை கொள்கிறாள்!

காமக் கொடியவர் கண்களுக்குப் பயந்து,
கன்னி மலர்கள் கருகிடக் கண்டோம்!
மழலைத் தேகம் மனதில் வடுக்கள்!
மனிதம் எங்கே மறைந்ததோ ஐயோ!

பாலியல் தொல்லைகள் பாவங்கள் செய்வோர்
பார்வை விலக்கிப் பாதகம் தீர்க்க!
பதுங்காமல் பெண்கள் பயம் தள்ளி நிற்க
பாரினில் எங்கும் பாதுகாப்பு மலர
வேண்டும் இன்னுமொரு விடுதலை!

உன்னத வாழ்வு உலகத்தில் காண
உரிமை அவளுக்கு உள்ளூர வேண்டும்!
புதியதோர் உலகம் புன்னகை பூக்க,
மங்கையருக்கு வேண்டும் இன்னுமொரு விடுதலை!

– முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய்
சென்னை

புதிய வெளியீடுகள்







சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639

Shakthi Pennithazh

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை